உண்மையைத் தேடும் எழுத்தைவிட உயர்ந்த இலக்கியம் இல்லை.

# ஞானரதம்

— புதுமை இலக்கிய மாத இதழ் —


ஆசிரியர்: ஜெயகாந்தன்

நிர்வாக ஆசிரியர்: தேவ. சித்ரபாரதி


6 - APR

3
1970



## இந்த இதழில்


ஜெயகாந்தன்
கே. பி. ரவீந்திரநாத்
சச்சிதானந்தம்
ஜோதிர்லதா கிரிஜா
மௌனி
வெ. சாமிநாதன்
பாக்ஸர்
நகுலன்
சாதனு
ஞானக் கூத்தன்
அமுத பாரதி
வனவாசி
ஆர். சுவாமிநாதன்
வே. மாலி
புதுவை அமலன்
அசோகமித்திரன்
சித்ர



அசிரியர் குழு :
ந. முத்துசாமி
ஒய். ஆர். கே. சர்மா
ஜியாவுடீன்
வையவன்
ஞானக்கூத்தன்


விலை 50 பைசா

# நிழல்

விளக்கை ஏற்றுங்கள்
நான் விட்டில் அல்ல
விளக்கை ஏற்றுங்கள்
எனக்கு வெளிச்சமும் வேண்டாம்

எனக்கு முன்னால் வேண்டாம் விளக்கு
எந்தவழியும் நான் தேடவில்லை
எனக்குப் பின்னால் விளக்கு வேண்டும்
விளக்கை ஏற்றுங்கள் ஏந்திப் பிடியுங்கள்
எனது வழியை நானே நடப்பேன்
எல்லா வழியும் எனக்குத் தெரியும்

பின்னர் எதற்கு எனக்கு விளக்கு ?
என் பெரிய நிழலை நான் பார்க்கவேண்டும்
விளக்கை ஏற்றுங்கள்

ஜெயகாந்தன்



# முன்னோட்டம்

சென்ற இதழ், முதல் இதழைவிடவும் வாசகர்களை இலக்கிய ரீதியாகப் பாதித்திருக்கிறது. பாராட்டுதல்களும் கண்டனங்களும் பாராட்டுகின்றவர்களையும் கண்டிக்கிறவர்களையும் நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக அமைகிறது.

செத்த பாம்பு நன்றாக அடிப்பட்டிருக்கிறது. சிலர் மாய்ந்து மாய்ந்து அடித்திருக்கிறார்கள்.

இந்தக் கதை பிரசுரிக்கப்படுவதற்கு முன் ஆசிரியர் குழுவினால் (வையவன் ஒருவரைத் தவிர) மற்றவர்களால் — நிராகரிக்கப்பட்ட பிறகே என் பார்வைக்கு வந்தது. இது பிரசுரிக்கப்பட்டதற்கு நானே பொறுப்பு என்பதால் இந்த விமர்சனங்களுக்குப் பிறகு இந்தக் கதையை நான் இரண்டு தடவை படித்தேன்.

கதை நன்றாகத்தான் இருக்கிறது. இதைப் பிரசுரித்ததால் பாவம் ஒன்றும் இல்லை.

இதைப் படித்ததனுல் யாரும் ஏற்கனவே கெட்டுப் போயிருந்ததைவிட ஒரு அங்குலம் கூட அதிகமாகக் கெட்டுப்போயிருக்க மாட்டார்கள். அப்படி யாராவது கெட்டுப் போயிருந்தால் இந்தக் கதையின் மரியாதை அதிகமாகிவிடும்.

இந்தக் கதையைப் பிரசுரித்தற்காக நமக்கு வருத்தம் இல்லை. ஆனுல் இதில் ஒரு 'ஆபத்து' இருக்கிறது.

ஞானரதத்திற்கு கதை எழுதுகிறவர்கள் விபசாரியிடம் போகிற அனுபவங்களையே கதையாக எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிருர்கள்.

ஒழுக்க அளவு கோல்களின்படியோ, இலக்கியத்திற்குப் புறம்பான அம்சங்கள் அவை என்றே நாம் அவற்றை ஒதுக்குவதில்லை. என்ருலும் இந்தப் பத்திரிகையின் நோக்கம் விரிவானது; விஸ்தாரமானது.

புதுமை என்பது எல்லையற்ற வண்ணங்களும் வடிவங்களும் கொண்டது. அப்படிப்பட்ட வகை வகையான (variety) நோக்குகளையும், காட்சிகளையும் தரமுடியாமல் எல்லை வகுத்துக் கொண்டு எது முடங்கிப் போகிறதோ அது எதுவானுலும் அது இறந்து போனதாகும்; பழசாகிப் போனதாகும். வளரமுடியாதது ஆகும்; அதற்குப் பெயர் வறட்சி.

புதுமை என்பதன் பெயரால் இப்படி ஒரு வறட்சிக்குப் புதிதாக எழுதுகிறவர்கள் இரையாகி விடுவது புதுமையின் எதிரிகளுக்கு அருமையான விருந்தாகிப் போகும்.

செத்த பாம்பைப் பற்றிய விமர்சனம் எனக்கும் உண்டு. ஆனுல் அந்த விமர்சனம் அது ஒரு படைப்பே அல்ல என்று நிராகரிக்கும் முயற்சியாக மாறுது.

புதிதாக எழுத வருகிறவர்களுக்கு, வாசகர்களை எதையாவது சொல்லி அதிர வைக்க வேண்டும் என்கிற ஆசை வருவது இயல்பு. அப்படிப்பட்ட ஆசையில் அதிர வைக்கிற எழுத்துக்களை நானும் எழுதியது உண்டு. கொஞ்சம் விலகி வந்து பார்த்தால் அந்த

அதிர்ச்சி ஒன்றைத் தவிர, அதில் உள்ள வேறு விஷயங்கள்தான் இலக்கிய பூர்வமாக இருப்பதை அறிய முடிகிறது.

செத்த பாம்பில் இப்படி அதிர வைக்கிற இடங்கள் ஓரிரண்டு உண்டு. அதனைப் பெருந் தன்மையாக வாசகர்கள் மனத்தில் ஒரு சிரிப் போடு கடந்துபோய் விடவேண்டும். முதிர்ந்த வாசகர்கள் அவ்வாறே நடந்து கொள்வார்கள். அதன் மூலம் அந்த முதிராத ஆசிரியனை வளர்ப்பார்கள். இலக்கியமும் செழுமை பெறும்.

அதைக் கண்டு முகத்தைச் சுளிப்பதோ, அல்லது அதிலேயே முகத்தைப் புதைத்துக் கொள்வதோ மனம் முதிராத பேதைமையின் அறிகுறி. உதாரணத்தோடு சொல்கிறேன்.

தெருவிலே போகிறீர்கள். இணை சேர்ந் திருக்கும் இரண்டு நாய்கள் நடுதெருவில் இழுத்துப் பறித்துக் கொண்டு உங்கள் எதிரில் வந்து நிற்கின்றன.

இந்தக் காட்சியை சுற்றி நின்று வேடிக்கை பார்த்துத் தங்கள் ரசனையைப் பகிரங்கப் படுத்திக் கொள்கிறவர்களும் உண்டு.

'சீ... தூ...' என்று காறித்துப்பிக் கொண்டு தாங்கள் ரசிக்கவில்லை என்று பகிரங்கப் படுத்திக் கொள்கிறவர்களும் உண்டு. இரண் டிற்கும் அதிக வித்தியாசம் இல்லை.

அது உயிர்களின் இயல்பு. அந்த இயல்பு களின் விளைவே உயிர். இந்த வேட்கை ஒரு பொதுவான தர்மம். என்றெல்லாம் புரிந்து கொள்வதுதான் அறிவு. விவகாரம் என்று வந்தால் இதை இப்படித்தான் பேசிவிட வேண்டும்.

ஐயோ பிள்ளைகள் பார்த்தால் கெட்டுப் போவார்களே. பெண்கள் பார்த்தால் கூசிப் போவார்களே. நாய்களையெல்லாம் கொன்று விடவேண்டும். இந்தத் தெரு வழியாக நம் பிள்ளைகளை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் பிரலாபிக்கிற வர்கள் தங்கள் மனதின் அழுக்கையே கக்கு கிறார்கள்.

எனவே நாம் பெருந்தன்மையாக நடந்து கொள்ளவேண்டியது கதை படிக்கும்போது மட்டுமல்ல; சாதாரணமாக அன்றாட வாழ்க்கையிலேயே நாம் அதைக் கடைப்பிடிக்காவிட்டால் மிகவும் மோசமான மன உளைச்சலுக்கு ஆளாகி நம்முடைய நிம்மதியைக் கெடுத்துக் கொள்வோம். இதனால் மிஞ்சப் போவது ஒன்றுமில்லை. இதனால் யாருக்கும் லாபமும் இல்லை. எல்லாவற்றையும் காப்பாற்றுவதற்கு நம் கைகளின் நீளம் போதாது.

சென்ற இதழ் ஞானரதத்தில் செத்த பாம்பு தவிர வேறு விஷயங்களும் உண்டு. செத்த பாம்பு கதையிலும் நீங்கள் முகம் சுளிக்கிற விஷயம் தவிர வேறு விஷயங்களும் உண்டு.

இந்த மூன்றாவது இதழில் சில பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன. அறிவிக்கப்பட்ட சில பகுதிகள் வரவில்லை.

நான் பேசிக் கொண்டிருந்த விஷயத்தை வைத்துக் கொண்டு நமது நிர்வாக ஆசிரியர் என்னிடம் உறுதிப்படுத்திக் கொள்ளாமலேயே "அடுத்த இதழில் பரமஹம்ஸர் கதைகள்" என்று விளம்பரம் செய்துவிட்டார். இதற்காக நான் அவரை "மன்னித்து" விட்டேன்.

இண்டலக்ட்ஸ் பகுதி ஒரு தோல்வி. அதில் வந்த, எல்லாமே நல்ல கருத்துக்கள் என்றாலும், ஒரு 'இண்டலக்சுவல் லெவலில்' விவாதிக்கப்பட்ட, விவாதிக்கப்பட வேண்டிய கருத்துகள் ஏதும் அதில் இல்லை. ஆரம்பித்து விட்டோமே என்பதற்காக படிக்கிறவர்களைப் போட்டு அறுத்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதால் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. தகுந்த சந்தர்ப்பம் கிடைக்கும் போது அது மீண்டும் வரலாம்.

நான் எழுதிய கவிதைகளில் 'தனிவீடு', 'குளியல்', 'ஞானம்', 'ஒற்றைச் செருப்பு' ஆகியவை எல்லோருக்கும் பிடித்திருந்த

தாகச் சொல்கிறார்கள். 'ஞானம்' என்ற தலைப்பு தவறாக வந்திருக்கிறது. அதற்குத் தலைப்பு 'தேர்தல்' என்று இருந்திருக்க வேண்டும். தேர்தல் என்ற இந்தத் தலைப்புடன் படிக்கிறபோது அதில் ஒரு புதிய பரிமாணம் கிடைக்கிறது.

பலபேர் நான் புதுக் கவிதை எழுதியிருப்பதாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சரியாகச் சொல்ல வேண்டுமானால் இதனைப் "போதைக் கவிதை" என்று சொல்ல வேண்டும்.

எனக்கு யாப்பிலக்கணம் தெரியும். நான் கவிதைகள் எழுதினால் இலக்கணத்தோடு தான் எழுதுவேன். ஆனால் இவை நான் எழுதிய கவிதைகள் அல்ல.

ஏதோ ஒரு போதையில்-போதை என்றால் Intoxication அல்ல; ஒரு Ecstacy யில்—அதாவது ஒரு பரவச நிலையில் பிதற்றியவையும் பேசியவையும் புலம்பியவையும், போற்றியவையும் நண்பர்களால் எழுதப்பட்டு, நன்றாக இருக்கின்றன என்று பாராட்டப் பட்டவை இவை.

அவற்றை இந்த இதழில் வேண்டாம் என்று நான்தான் நிறுத்தி வைத்திருக்கிறேன். அது ஏதோ, ஒரு 'மூடி'ல்தான் வருகிறது. ஏதோ ஒரு 'மூடில்' தான் நன்றாக இருப்பது மாதிரியும் இருக்கிறது. இது ஒரு நிரந்தரப் பகுதி (Regular feature) அல்ல என்று சொல்வதற்காகவே நிறுத்திவைத்திருக்கிறேன்.

படைப்பிலக்கியப் பகுதி அதிகமாகி இருப்பதால் யுகசந்திக்கு இடமில்லாமல் போய் விட்டது.

இந்த இதழில் வராதனவற்றை சமன் செய்வது மாதிரி இரண்டு புதிய பகுதிகளும் உண்டு. ஒன்று மௌனியின் 'சுய தரிசனம்.' மற்றொன்று 'பாக்ஸரி'ன் 'ரிங்'.

நிறைய நண்பர்கள் பத்திரிகை எப்படியெல்லாம் வரவேண்டும் என்று யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் நன்றி. எங்களுக்கும் நிறைய யோசனைகள்

இருக்கின்றன. நடைமுறையில் நிறைவேற்ற முடியாமல் இருக்கின்ற இடர்ப்பாடுகளை இங்கே சொல்லி அழ உத்தேசமில்லை. எங்களுடைய யோசனைகள் எல்லாம் தீர்ந்த பிறகு உங்களுடைய யோசனைகளும் கவனிக்கப் படும் என்று நம்புகிறேன். சொல்வதில் உங்களுக்கு திருப்தி இருக்கிறது என்றால் மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம். என்ன சாத்தியம் என்பதையே நான் மேலே சொன்னேன்.

சென்ற மாதம் இருபத்தி ஒன்றாம் தேதி சென்னை நகரஷெரீப் அவர்களின் தலைமையில் லார்ட் பெர்ட்ரண்ட் ரஸ்ஸலுக்கு ஒரு இரங்கல் கூட்டம் நடந்தது. பலதுறை அறிஞர்கள் அதில் பங்கு பெற்றனர். நானும் கலந்து கொண்டேன்.

என்னுடைய சிந்தனைகளின் போக்கைக் கொஞ்சம் திருப்பிவிட்டவர் ரஸ்ஸல். வறட்டுத் தத்துவ வாதங்களிலிருந்து (Doematism) எனக்கு விடுதலை தந்தவர் ரஸ்ஸல்.

அதே சமயத்தில் நான் ஒரு ரஸ்ஸலியனும் அல்ல. ரஸ்ஸலிடம் நான் முரண்பாடு கொள்கிற அம்சங்களும உண்டு. அவர் மதங்களைப் பற்றிக் கொண்டிருக்கிற கருத்தினை நான் ஹிந்த மதத்திற்குப் பிரயோகிக்க மாட்டேன்.

கணிதத்தைப்பற்றியும், விஞ்ஞானத்தைப் பற்றியும், அவர் சொல்கிறவற்றை அவரது கடைசி, கடைசி, கடைசி மாணவனுக்கும் பின்னால் நின்று நான் கேட்டுக் கொள்வேன். அவற்றோடு எனக்குச் சம்பந்தம் வரமாட்டேனென்கிறது

ஒழுக்கம் பற்றிய, சமூகம் பற்றிய, அரசியல் பற்றிய, மனிதன் பற்றிய அவரது கருத்துக்களை நான் முழுக்க முழுக்க அங்கீகாரம் செய்வேன். சிலவற்றை ஏற்றுக் கொள்ளா விட்டாலும் ரசிப்பேன்.

அவருடைய தாக்குதல்கள் மிகவும் இனியன. அவரது கிண்டல் ரொம்ப மேதைமை கொண்டது. ரஸ்ஸல் வெறும் தத்துவ போதகன் அல்ல. அவர் ஒரு செயல் வீர

னும்கூட. இதற்காக பலர் அவரைப்பாராட்டு கிறார்கள். ஆனால் அதே காரணம்பற்றி எனக்கு அவர்மீது பரிதாபமாக இருக்கிறது. ஆனால் அதை ஒரு 'ஸ்டண்ட்' என்று நான் சொல்ல மாட்டேன்.

மனித இன்பங்களையும், மனித உணர்ச்சி களையும் அவர் உளப்பூர்வமாக மதிப்பதனால் அவற்றுக்கு எதிராக வருகின்ற எதையும், அது மதம் என்றாலும் அரசியல் என்றாலும் விஞ்ஞானம் என்றாலும், அவர் முழு மூச் சோடு எதிர்த்தே நின்றிருந்திருக்கிறார்.

அவர் ஒரு ஆன்மீகவாதியல்ல. ஆனால் ஆன்மீகவாதிகள் அவரது தொன்னூற்றி ஏழு வருட வாழ்க்கையைக் கூர்ந்து பார்த்து இவரைவிட ஆன்மாவை மதிக்கிற, ஆன்ம துரோகத்துக்கு ஆளாகாத மனிதன் இல்லை என்று சொல்வார்கள்.

இந்த எனது கருத்தை ஊர்ஜிதம் செய்வது மாதிரி 'பவன்ஸ் ஜெர்னலில்' ஒரு கட்டுரை வந்திருக்கிறது.

ரஸ்ஸலை அறியாதவர்கள் தமிழ் நாட்டில் நிறையப் பேர் உண்டு. ஆனால் ரஸ்ஸலின் கருத்துக்கள் ஏதோ ஒரு ரூபத்தில் அவர்களை யும் பாதித்திருப்பதை என்னால் பார்க்க முடி கிறது.

தனது அந்திமக் காலத்தில் வியத்நாமில் மனித நாகரீகத்திற்கு இழைக்கப்படும் கொடுமையை எதிர்த்து அவர் உலகத்தின் மனச்சாட்சியை மிக உரத்துக் கூவி உலுக் கினார். அவர் கம்யூனிஸ்டுகளுக்கு நண்பர் அல்லர். கம்யூனிஸ்டுகளின் நட்பு எப்படிப் பட்டது என்பதனை அவர் ரொம்ப அழகாக ஓரிடத்தில் சொல்லிருக்கிறார்.

"தங்களோடு இல்லாதவர்கள் எல்லாம் தங்களுடைய எதிரிகள் என்று கம்யூனிஸ்டு கள் நினைக்கிறார்கள்" என்று ரஸ்ஸல் கூறியது கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமா பொருந்தும்?

இதேமாதிரி அமெரிக்க அரசைப்பற்றியும் அவர் கூறியிருக்கிறார். 'அமெரிக்காவைச் சுதந்திர உலகம் என்று சொல்வதுதான்

முதல்தப்பு' என்று ஓர் இடத்தில் கூறியிருக்கிறார்.

மூன்றுவது உலகயுத்தம் ஏற்பட்டால் மனித வர்க்கம் எவ்வளவு கேவலமாக நிர்மூலமாகிவிடும் என்று உலக விஞ்ஞானிகளையெல்லாம் கூட்டி, யுத்த வெறியர்களுக்கு எதிராக, சமாதானத்தின் தேவையை உலகுக்கு உணர்த்தியதில் இந்தத் தனி மனிதனுடைய பாங்கு மிக மிக அதிகம்.

உலகம் எந்தத் திசையில் போகவேண்டும், போகும் என்பது குறித்து இவருடைய கருத்து மிகவும் தெளிவானது.

கம்யூனிஸம் வந்து சுதந்திரஉலகத்தையும், சுதந்திர உலகம் கம்யூனிஸ அகிலத்தையும் விழுங்கிவிடும் என்ற அச்சமும் முயற்சியும் தான் இன்றைய நெருக்கடிகளுக்கெல்லாம் மூல காரணம் என்று விளக்கிய யரஸ்ஸல், இவை இரண்டுமே என்றென்றைக்கும் நிலைக்கும் என்று கூறுகிறார்.

அதற்கு உதாரணமாக இஸ்லாம் மார்க்கத்தையும் கிருஸ்துவ மார்க்கத்தையும் சொல்லுவார். ஒன்றை ஒன்று அழிக்கப் புறப்பட்டவை இரண்டும். ஆனால் அந்த முயற்சியில் இரண்டுமே வெல்லவில்லை. கடைசியில் அந்த மோதலே ஓய்ந்து போயிற்று. அது மாதிரி இதுவும் ஓய்ந்து வடும் என்று அவர் நம்புகிறார்.

அவர் ரஷியாவுக்கு விஜயம் செய்த பிறகு ரஷியாவைப் பற்றியும் கம்யூனிஸத்தைப் பற்றியும் அவருடைய பார்வை மிகவும் கூர்மை பெற்றது.

அவர் லெனினைச் சந்தித்திருக்கிறார். அது பற்றி ஒரு கேள்விக்கு அவர் பதில் சொல்கிறார் :

"லெனின் ஆச்சரியப்படத்தக்க உறுதி படைத்தவர். ஒரு நம்பிக்கையையே உருவாக்கின்ற ஒரு சரித்திர நாயகனுக்குரிய மிக உயர்ந்த அம்சங்கள் எல்லாம் லெனினிடம் இருந்தன. ஆனால் அவர் உருவாக்கிய நம்பிக்கைதான் மிகவும் குறுகலானது"

இவ்விதம் மனம் திறந்தும், மனதில் தைக்கிற விதமாகவும் இந்தப் பிரபஞ்சசம்பந்தப்பட்ட எல்லாவற்றைப்பற்றியும் நம்மோடு பேசிக்கொண்டிருந்த ஒரு மனிதர் இப்போது இல்லை.

என்றாலும், அவருடைய மறைவிற்காக வருந்துவது ஒரு Formality தான். ஏனென்றால் அவர் தொண்ணூற்று ஏழு வயது வாழ்ந்திருக்கிறார். தன்னுடைய இறுதி வினாடி வரையும் அவர் புத்தி பூர்வமாக இயங்கிக் கொண்டிருந்தார். வாழ்க்கை மதுவின் கடைசித் துளியைக்கூட அவர் சுவைத்திருக்கிறார் அதற்காக உழைத்திருக்கிறார்.

ஒரு பொறுப்பு வாய்ந்த சிந்தனைவாதியினுடைய கடமைகளை அவர் கடைசி வரை நிறைவேற்றியிருக்கிறார். எழுதவேண்டிய கடிதங்களை எழுதி அனுப்பிவிட்டு, ஒரு கிளாஸ் விஸ்கியும் அருந்திவிட்டு அவர் தூங்கப் போயிருக்கிறார்.

எல்லா ஞானிகளுமே இறுதியில் தூங்கித்தான் விடுகிறார்கள்.

த. ஜெயகாந்தன்



மனித மனக்கோலங்கள் பற்றி :

"இந்த உலகைப்பற்றிய தவறான அபிப்பிராயங்களைக் கொண்ட ஆதிக்க உணர்வோடு கூடிய மனிதர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். ஒருவர் தான் இங்கிலாந்து பாங்கின் கவர்னர் என்று நினைத்துக்கொள்கிறார். மற்றொருவர்தான் தான் அரசன் என்று நினைத்துக் கொள்கிறார். வேறொருவரோ தானே கடவுள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். இம்மாதிரி அபத்தங்கள் படித்தவர்களால் சிக்கலான மொழியில் சொல்லப்படும்போது அவர்கள் தத்துவப் பேராசிரியர்கள் ஆகிவிடுகிறார்கள். அதே விஷயத்தை உணர்ச்சி வயப்பட்ட மனிதர்கள் தேர்ந்தெடுத்த வார்த்தைகளில் சொல்லும்போது சர்வாதிகாரிகள் ஆகிவிடுகிறார்கள்."

★ ★

ஆனந்தமான வாழ்க்கை வாழ்வதற்கு, நம்முடைய தன்னேக்குப் பெருமைக்கு, எத்தனைவிதமான முட்டுக்கட்டைகள்தான் வேண்டியிருக்கிறது! நாம் மனிதர்களாக இருக்கிறோம். அதனால் இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டதே மனிதர்களுக்காகவே தாம்; நாம் அமெரிக்கர்களாக இருக்கிறோம். அதனால் அமெரிக்காதான் கடவுளின் சொந்த நாடாம். நாம் வெள்ளையர்கள், அதனால்தான் கடவுள் கருப்பர்களான ஹாமையும் அவனது சிடர்களையும் அழித்து விட்டார். நாம் புராடஸ்டண்டு அல்லது கத்தோலிக்கர்களாக இருந்தால் ஒருவருக்கு மற்றவர் பாவிகள்; நாம் ஆண்கள், அதனால் நமக்கு பெண்கள் எல்லாம் அர்த்தமற்ற ஜென்மங்கள்; அல்லது நாம் பெண்கள். அதனால் நமக்கு ஆண்களெல்லாம் தற்குறிகள் நாம் கீழை நாட்டினர்கள், அதனால் மேலை நாட்டினர்கள் எல்லாம் காட்டுமிராண்டிகள்; அல்லது நாம் மேலை நாட்டினர்கள், அதனால் கீழை நாட்டினர்கள் எல்லாம் உபயோகமற்றவர்கள் நாம் மூளையைக் கொண்டு பணி செய்பவர்கள் அதனால் படித்தவர்கள்தான் சமூதாயத்தின் முக்கியமான பகுதி; அல்லது நாம் கரங்களால் உழைப்பவர்கள், அதனால் உடல் உழைப்புத்தான் கவுரமானது; இறுதியாக நாம் அனைவருக்கும் ஒற்றுமையான ஏதோ ஒன்று நம் எல்லோரிடமும் இருக்கிறது அதனால் நாம் நம்மைச் சேர்ந்தவர்கள், இதுமாதிரி வசதியான எதிரொலிகளுடன் தான் நாம் இந்த உலகத்தில் வாழ்க்கைப் போரை நடத்த வெளிக் கிளம்புகிறோம். இவைகள் இல்லாவிட்டால் நமது

தைரியங்கள் காணமல் போய் விடுகின்றன. இவைகள் இல்லா விட்டால், மற்றவைகள் அப்படி அப்படியே இருந்தாலும் நமக்கு தன்பயம் வந்துவிடுகிறது—நமக்கு சமத்துவ உணர்வு என்பது பழக்கப்படாதிருப்பதால், நம்மால் நாமும்கூட நம்முடைய அண்டை அகலானுக்கு நிகரானவர்கள் மட்டும்தான் என்பதை சத்தியமாகவே உணர முடியவில்லை இது முடியுமானல் அவர்கள் உயர்வாக இருந்தாலும் சரி, தாழ்வாக இருந்தாலும் சரியே—இந்த வாழ்க்கையில் போராட்டங்கள் வெகுவாகக் குறைந்துவிடக்கூடும்.

★ ★

மதங்கள் பற்றி

கிருஸ்துவர்கள் தங்களின் நம்பிக்கையே உன்னதமானது என்று கருதுகிறார்கள். மற்றவர்களின் நம்பிக்கைகள் கேடானது என்றும் நம்புகிறார்கள். எதுபோனாலும், கம்யூனிஸ நம்பிக்கையை அவர்கள் இப்படித்தான் மதிக்கிறார்கள். நான் வலியுறுத்த விரும்புவது என்ன வென்றால் எல்லா நம்பிக்கைகளுமே கேட்டையே விளைவிக்கின்றன. நம்பிக்கை என்பதை, தக்க சாட்சியமில்லாவிட்டாலும்கூட நமக்குச் சிலவற்றில் உள்ள உறுதியான பிடிப்பு என்று வரையறுக்கலாம். சாட்சியமிருக்கும் போது யாரும் நம்பிக்கை பற்றி பேசப்போவதில்லை. நாம் இரண்டும் இரண்டும் நாலு என்பதற்கோ, இந்த உலகம் உருண்டை என்பதற்கோ நம்பிக்கையை நாடுவதில்லை. சாட்சியத்திற்கு பதிலாக உணர்வுகளை நாடும் போதுதான் நாம் நம்பிக்கை பற்றி பேசுகிறோம்.

* * *

பாலுணர்வு பற்றி

பாரம்பரியப் பெருமைகளுடன் வளர்க்கப்பட ஆண்களிலும் பெண்களிலும் மிகச் சிலரே பாலுணர்வு பற்றியும் திருமணம் பற்றியும் கண்ணியமான அபிப்பிராய முடையவர்களாக இருக்கிறார்கள். கவரப்படுவதும் கட்டுப்படுவதும் பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் மதிக்கத்தக்க பண்புகளே என்பதை அவர்கள் கற்ற கல்வி அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. தம்பதிகளின் எல்லைக்குள்கூட உடலுறவு என்பது வெறுக்கத்தக்க ஒன்று என்றும், பலவீனமான மனிதர்களே இந்த விலங்குணர்சிக்கு பலியாகிறார்கள் என்றும், இதனால் பெண்கள் வேதனைக்குரிய நிலைக்குப் பணிந்து கொடுக்க நேர்கிறது என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இம்மனப்போக்கின் விளைவாக திருமண வாழ்க்கை ஆண் பெண் இருவருக்குமே நிறைவளிப்பதில்லை. ஆர்வத்துடன் கூடிய நிறைவுக்கு பதிலாக, கற்பிதமான ஒழுங்கீனம் என்னும் கொடுமையே எஞ்சி நிற்கிறது.

* * *

அரசியல் பற்றி :

"எதிர் காலத்தில் நடக்கும் எந்த உலக யுத்தத்திலும் அணு ஆயுதங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படவே செய்யும், அப்படிப் பிரயோகிக்கப் படும் அணு ஆயுதங்கள் பத்திரமான மனித வாழ்க்கை என்பதையே அதன்பின் பீதியில் ஆழ்த்திவிடும். அதனால் எல்லா உலக நாடுகளும் இதை உணர்ந்து, வெளிப்படையாக இதை ஒத்துக் கொண்டு, தங்களின் நோக்கங்கள் மற்றொரு உலக யுத்தத்தின் மூலமாக நிச்சயமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதது என்பதை உணர்ந்து, எல்லாப் பிரச்சனைகளையும், தகராறுகளையும் சமாதான மான முறையிலான பேச்சு வார்த்தைகளின் மூலமே தீர்த்துக் கொள்வோம் என்று அறிவித்துவிட வேண்டும்."

கல்வி பற்றி:

* * *

உங்களுடைய தீர்வுகளும் முடிவுகளும் காரணகாரியத்துடன் கூடியது எனின், அவற்றை அதற்குரிய வாதங்களுடன் நிர்பந்தமேதுமின்றி நீங்கள் சொல்லித் தரவேண்டும். உங்கள் வாதங்கள் உங்களுக்கு எதிராகவே செல்வதாகத் தெரிந்தால் உங்கள் முடிவுகளைக் கைவிட்டுவிட வேண்டும். ஆனல் உங்களுடைய தீர்வுகள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அங்கு வாதங்களுக்கு அர்த்தமேதுமில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும். அதை நிர்பந்தம் அல்லது அற்புதங்களின் பெயரால் திணித்து, கல்வி என்ற பெயரில் இளம் உள்ளங்களை நாசமாக்கலாம். தற்காத்துக் கொள்ள முடியாத, பக்குமடையாத, இளம் உள்ளங்களை நசுப்பிக்கும் சாதகமான நிலை இந்தக் கொடுமையில் விந்தையாக அமைந்திருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக எல்லா நாகரீகமடைந்த நாடுகளிலும் பரவலாகவோ, மிகையாகவோ இதுதான் பள்ளிப்படிப்பில் கையாளப்படுகிறது.

மரபு பற்றி:

வாழ் நாள் முழுமைக்கும் கொல்லாது, திருடாது. பொய் சொல்லாது, அவதூறு பேசாது, பெற்றோர்கள், கோயில்கள், ஆட்சியிலிருப்போர்கள் ஆகியவர்களை அவமதித்து விடாது இருந்துவிட உங்களுக்கு முடியுமானல் நீங்கள் பாரம்பரிய மரபுப்படி ஒழுக்க சிலர் என்ற மரியாதைக் குரியவராகக் கருதப்படுவீர்கள். ஒரே ஒரு தடவைகூட கருணையோ, அன்போ, பயனுள்ள காரியம் எதுவுமோ நீங்கள் செய்யாமலே போனலும் அதைப் பற்றிய கவலை ஏதும் அந்த மரபுக்குக் கிடையாது. பண்பாடு பற்றிய இந்தப் பற்றுக் குறை அளவுகோல்கள்தான் தேங்கிப் போன சமுதாய ஒழுங்குகளுக்குக் காரணங்களாகும் இவைகளே மிகப் பெரிய சமு

கக் கேடுகளுக்கு அடிப்படையாகவும் இருக்கின்றன.

**தத்துவங்கள் பற்றி :**

தத்துவங்கள் பற்றிய தார்மிகக் கணிப்பில், அறிவு பூர்வமாகவே செய்யப்பட்டு வரும் ஒரு தவறே அதன் வளர்ச்சியை வெகுவாக பாதித்துள்ளது. சமயக்கடுத்துக்களின் உண்மைகளை, தத்துவக்கள் மூலம் விளக்க முடியும் என்று நான் நம்பவில்லை. ஆனால் பிளாட்டோவின் காலத்திலிருந்து எல்லா தத்துவ ஆசிரியர்களும், கடவுளைப் பற்றியும் அதன் நிலைத்த தன்மை பற்றியும் சாட்சியங்களைத் தேடுவதையே தங்கள் தொழிலாக்க் கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய முன்னவர்கள் சொல்லிய சாட்சியங்களில் குறை கண்டு கொண்டே இருந்திருக்கிறார்கள். செயின்ட் தாமஸ் செயின்ட் ஆன்செலமினுடைய சாட்சியங்களையும், கென்ட் டெஸ்கார்ட்டஸினுடையதையும் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் புதிதாகத் தங்களுடைய சாட்சியங்கள் சிலவற்றைத் தந்திக்கிறார்கள். தங்களுடைய சாட்சியங்களை நிலைக்கச் செய்வதற்காக தவறான வாதங்களைக்கூட மேற்கொண்டிருக்கிறார்கள். கனிதப்புதிர்கள் போட்டிருக்கிறார்கள்: திடீரென்று அந்தப் புலகாங்கித பரவச சிலிர்ப்பு நிலையில் லயித்துப் போய்விட்டதாக நடித்திருக்கிறார்கள்

* * *

[ரஸ்ஸலின் இக்கருத்துக்கள் அவர் சுமார் எழுபத்திஐந்தாண்டு காலமாக எழுதியுள்ள நூற்றுக்கணக்கான புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளிலிருந்து சேகரிக்கப்பட்டவை. ஒரு விஞ்ஞானியும், தத்துவமேதையும் மனிதாமானியுமான ரஸ்ஸல், அவருக்கு முந்திய எல்லா கேட்பாடுகளையுமே சவாலுக்கு அழைத்த ஒரு முழு முதல் அறிவியல் வாதி. ஆனால் அன்பில்லாத அறிவுக்கு அவர் முதல் எதிரியும் கூட. ரஸ்ஸலை முழுதாகத் தெரிந்து கொள்ள விரும்புவோர்களுக்கு இது ஒரு தூண்டுதல் மட்டுமே முழு ரஸ்ஸலைத் தெரிய அவருடைய முழு எழுத்துக்களையும் தேடிப்படிப்பது ஒன்றே வழி].

(தமிழாக்கம் : "தேவன்")



# "குரல்கள்"

மோனக் குரலெடுத்து நானழுதேன்—அதை
முற்றும் செவிமடுக்க யாருமில்லை
மோகம் குரலெடுத்து நானழுதேன்—அலை
மோதும் சுகம்கொடுக்க ஆளுமில்லை
ஞானக் குரலெடுத்து நானழுதேன்—அதை
நாடித் தெரிந்துகொள யாருமில்லை
நாதக் குரலெடுத்து நானழுதேன்—இசை
நன்றாய் ரசிப்பதற்கு ஆளுமில்லை
தீனக் குரலெடுத்து நானழுதேன்—மனத்
தீவில் ஓடிவர யாருமில்லை
நீதிக் குரலெடுத்து நானழுதேன்—எனை
நெருங்கிப் பார்த்துவிட ஆளுமில்லை
வீணிற் குரலெடுத்து நானழுதேன்—எனை
விரும்பிப் பார்த்துவர யாருமில்லை
மீதிக் குரலெடுத்து நான்சிரித்தேன்—புவி
மீதிற் சிரிப்பினொலி கேட்டதம்மா.

"கவீந்திரன்"



# பிக்காஸோ

“ஒவ்வொருவரும் கலையைப் புரிந்து கொள்ள வேண்டும். என்கிறார்கள். ஒரு பறவையின் பாட்டை ஏன் ஒருவரும் புரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை? இரவை, மலர்களை, சுற்றி இருப்பவைகளை புரிந்து கொள்ள முயற்சி செய்யாமலே அவைகளை விரும்புகிறார்களே அது ஏன்? ஆனால் ஓவியத்தை மட்டும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமாம். ஒரு கலைஞன் தவிர்க்க முடியாத தேவையின் பொருட்டே செயல்படுகிறான் என்பதையும்; அவன் இந்த உலகத்தின் வெறும் சிறு துண்டு என்பதையும்; இந்த உலகத்தில் நமக்கு இன்ப மூட்டும் நம்மால் விளக்கபட முடியாத எத்தனையோ மற்றைய பொருள்களைவிட அதிக முக்கியத்துவம் இவனுக்கு அளிக்கக் கூடாதென்பதையும் உணரவேண்டும். படங்களை விளக்க முயற்சிக்கும் போதெல்லாம் அவர்கள் தவறையே செய்கிறார்கள்.”

**சச்சிதானந்தம்**

“கலைஞனானவன், சுற்றிலும் இருக்கும் இடத்திலிருந்து வரும் உணர்ச்சிக்களை வாங்கும் ஒரு கொள்கலன், வானிலிருந்து நிலத்திலிருந்து, ஒரு துண்டு காகிதத்திலிருந்து, சென்று கொண்டிருக்கும் உருவத்திலிருந்து, சிலந்திக்கூட்டிலிருந்து அதனால்தான் பொருட்களை வேறுபடுத்தி பார்க்கக்கூடாது பொருள்கள் பொருத்தவரை அங்கே சாதி வேறுபாடுகள் கிடையாது. நமக்கு எது நன்மையாக இருப்பதைஎங்கு காண்போமோ அங்கிருந்து அதை எடுத்துக் சொள்ள வேண்டும்—ஆனால் நம் சொந்தப் படைப்பிலிருந்து தவிர. என்னையே நான் நகல் செய்ய எனக்கு வெறுப்பாக, மிகப் பயங்கரமாக இருக்கிறது. ஆனால், எடுத்துக்காட்டாக பழைய ஓவியங்களை என்னிடம் காட்டும்போது எவை எனக்குத் தேவைப்படுகிறதோ அதை எடுத்துக் கொள்வதில் என்னிடம் எந்தவித மனச்சாட்சி உறுத்தலும் கிடையாது.”

“அழகைப்பற்றிப் பள்ளியில் படிப்பது என்பது ஒரு பித்தலாட்டம்; ஏய்ப்பு ஆகும். நம்மால் உண்மையின் ஒரு நிழலைக்கூட திரும்பிப் பெற முடியாத அளவிற்கு நாம் முழுமையாக ஏமாற்றப் பட்டோம் ‘பார்த்தினான்’, ‘வீனஸ்கள்’, ‘தேவகன்னிகள்’ ‘நார்ச்சிக்களின், அழகுகள் எல்லாமே பலவித பொய்கள். கலை என்

பது ஓர் அழகு விதியின்செயல் முறை விளக்கமல்ல. ஆனால் அது, இயல்பூக்கமும் மூளையும் எந்த அழகு விதியையும் தாண்டிக் கருக்கொள்வதுதான். நாம் ஒருத்தியைக் காதலித்தால் அவள் உறுப்புகளையா அளக்கிறோம்? நாம் நம் இச்சைகளோடு காதலிக்கிறோம்."

"கலைஞன் எது செய்கிறானோ அதுவல்ல முக்கியம்; அவன் என்னவாக இருக்கிறான் என்பதுதான் நமக்குத் தேவை."

இருபதாம் நூற்றாண்டின் ஓவியமேதைகளில்ஒருவனாய்த் திகழும் பிக்காஸோவின் வாசகங்கள்தான் மேலே கொடுக்கப்பட்டவை. அவரின் கலைப்படைப்புகளின் எண்ணிக்கையை மட்டும் எடுத்துக் கொண்டாலும் பிரமிப்பை உண்டாக்கும், வெறும் எண்ணிக்கையை மட்டுமாக இருந்திருக்குமானால் போற்றுவதில் அர்த்தமில்லை; திரும்பத் திரும்ப ஒன்றையே செய்திருப்பாரானால் பொருள் இல்லை. வியப்பை எழுப்புவது அவரின் புதியதைப் படைக்கும் மேதைத் தன்மை; அதன் வீச்சு. அவரின் ஆயிரக்கணக்கில் இருக்கும் ஓவியங்கள், படங்கள், சிற்பங்கள், சித்திரப் பீங்கான்கள்களின் பண்புகளைக் கொண்டு பல பகுதிகளாகப் பிரித்துக் குழுப்படுத்த முடியும். ஒவ்வொரு குழுவும், மேதாவிலாசம் கொண்ட தன் வாழ்நாள் முழுவதும் செலவிட்ட தனி ஓவியனால்படைத்ததுபோல்காணப்படும். அவரின் படைப்புகளை இருபெரும் பிரிவுகளாகப் பகுக்காலம்; ஒன்று: இரக்க உணர்வு நிறைந்த இளகிய உள்ளத்தை, வாழ்க்கை இன்பங்களில் ஆழ்ந்து திளைத்ததைக் காட்டுவது. இன்னொன்று: வாழ்க்கையின் கொடுமை கண்டு மிரண்டு போய் சினத்தின் சீற்றத்தோடு. வன்மையாய் அச்சுறுத்தும் சித்திரங்களை வாழ்க்கைமேல் எறிந்தது. பிக்காஸோவின் பாணியில் மாற்றங்கள் திடுமென நிகழ்கின்றன. எதிர்பாராத முடிவுகள், விட்டுச் சென்றதை நோக்கி மீண்டும் செல்வது, இப்படி, மாற்றம், திருப்பம் சூழற்சியைக் காணலாம். ஆனால் குழப்பம் உண்டாக வில்லையே ஏன்? அங்கேதான் பிக்காஸோ என்ற மாபெரும் கலைஞன் இருக்கிறான். முரண்பாடுகள் மண்டிய இவ்வுலகத்தை பிக்காஸோவின் தூரிகை தீட்டிக் கொட்டியது. அவன் மேதை-வீரியம்-இடையராது இயங்கிக் கொண்டே இருக்கிறது.

மலாகாவில் 1881 ஆண்டு அக்டோபர் 25ம் தேதியில் பிறந்தார் பிக்காஸோ. அவர் தந்தை கலைப்பள்ளி ஒன்றின் ஓவிய ஆசிரியர். இளம் பருவத்திலேயே அவருக்கு ஓவியச் சூழ்நிலை வாய்த்துவிட்டது. பதினேழுவயது ஆவதற்கு

முன்பு பிக்காஸோ வரைந்த 'பிரட்டில் இருக்கும் மனிதர்கள்' 'செருப்பு அணியாத பெண்' 'கிழத்தம்பதிகள்' ஓவியங்கள் வரைதிறன்—தொழில் நுணுக்கம்—முற்றிலும் அறிந்தவராகக் காட்டின. பிக்காஸோ கலைப்படிப்பை மேற்கொள்ளும் எண்ணத்தை அவர் பெற்றோர்கள் எதிர்க்கவில்லை. முதலில் பார்சிலோனாவிலுள்ள கல்விக் கழகத்திற்கும் பின்பு மாட்டிரட்டிற்கும் சென்றார். ஸ்பெயின் தலைநகரமான மாட்டிரட்டில் இருக்கும்போது, சேர்ந்துவிட்டு ஓவியப் பள்ளிக்குப் போவதைவிடக் கலைக்கூடத்திற்கு சென்றார். கலைப்பள்ளியின் குறுகிய படிப்புமுறை பிக்காஸோவிற்கு ஒத்துவரவில்லை. தன்விருப்பம் போல் செய்ய விழைந்தார். அதனால் அவர் படிப்பு பாதிக்கப்பட்டது. அப்போது வரையப்பட்ட 'விஞ்ஞானமும்

**கு க் ஞ ங் வ**

ஈகையும்', படம் 1898ல் நடந்த கலைக் காட்சியின், குறிப்பிடத்தக்க சிறப்பு ஓவியம் என்று போற்றப் பட்டது. அடுத்த ஆண்டு பார்சிலோனாவிற்குத் திரும்பினார். அங்கே அவரின் நண்பர் குழாம் விரிவடைந்தது. எழுத்தாளர்களும் கலைஞர்களும், சந்திக்கும் இடமான 'நான்கு பூனைகள்' என்ற காபி ஓட்டலிற்கு பிக்காஸோ அடிக்கடி சென்றார். தன் அறையில் இல்லை என்றால் அவரை அங்கேதான் காணலாம். அப்போதுதான் அவர் பலபாதிப்புகளுக்கு உள்ளானார். 1900 தொடக்கத்திலிருந்து மிக முக்கிய பத்திரிக்கைகளில் பிக்காஸோவின் பெயர் அடிபடத் தொடங்கியது. 1900ன் அக்டோபரில் ஓவியநண்பர்களுடன் பாரீசிற்குப் போக முடிவு செய்தார். ஐரோப்பிய கலையின் தலைநகரமாய்த் திகழும் பாரீசிற்குச் சென்றது இதுதான் முதல் தடவையாகும். அப்போது இரண்டே மாதங்கள் தங்கி இருப்பினும் பாரீசின் பாதிப்பு ஆழமானது. 1901, மார்ச்சில் மாட்டிரட்டில் 'இளங்கலை' என்ற இதழைத் தொடங்கினார். இவ்விதழிற்காக நிறைய ஓவியங்களை வரைந்தார். மே மாதம் பார்சிலோனா நண்பர்கள் பிக்காஸோவின் ஓவியங்களைக் கொண்ட கண்காட்சி நடத்தினார்கள். பாரீஸ் அவரை ஈர்த்துக் கொண்டிருந்தது; அழைப்பு நிர்பந்தப் படுத்திக் கொண்டிருந்தது. தன் ஓவியங்களை எடுத்துக் கொண்டு பாரீசிற்குப் பயணமானார். அங்கே அவரின் ஓவியக் கண்காட்சி முதன் முதலாக நடைபெற்றது. அக் காட்சியில் எழுபத்தைந்து ஓவியங்கள் வைக்கப்பட்டன. இவைகள் அங்கே வந்த பின்பு வரையப்பட்டவை. மாட்டுடன் சண்டை, (புல்ஃபயிட்) நடனக்

காட்சிகள், பூச்செண்டுகள், கட்டி அணைத்திடும் காதலர்கள். பாரிசின் வெவ்வேறான காட்சிகள். இவைகள் இந்த 75 ஓவியங்களில் தீட்டப்பட்டன. 'கலைப்பத்திரிக்கை' பாராட்டி எழுதியது. இவ்வோவியங்கள், பிக்காஸோ கலைவாழ்க்கையில் வந்த நீலக் காலம்' என்று அழைக்கப்படுவதை முன்னறிவிப்பாகத் திகழ்ந்தன. இந்த காலம் 1901ன் கடைசியிலிருந்து 1904 முடிவுவரை இருந்தது. இக்கால ஓவியங்களில் துயரத்தையும், மென்மையையும், மனிதாபிமானத்தையும் காணலாம். பிச்சைக்காரர்கள், துயருறும் தாய்மார்கள், நோய்வுற்ற குழந்தைகள், மென்மையான நீலநிறத்தில் வரையப்பட்டன. குளிக்கும் மங்கையர்கள் வருகின்றனர். இதயத்தைப் பிழியும் சோகம் நிறைந்த உலகைக் காண்கிறோம். இந்த நீலம் அதன் அழுத்தம் குறைந்து வெளிரத் தொடங்குகிறது வெற்றி பெறாத காதலால் தற்கொலை செய்து கொண்ட தன் ஓவிய நண்பன் நினைவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட 'இறந்த மனிதன்' 'வெளிவரச்செய்தல்' என்ற ஓவியங்கள் இக்காலக் கட்டத்தின் முக்கியமான படைப்புகள். இரண்டாவது தடவை பாரிசிற்கு சென்று தங்கியபோது கவிஞன் மாக்ஸ் ஜாக்பஸ்சை சந்தித்தார். அந்தக் காலத்திலிருந்து பிக்காஸோவின் வாழ்க்கையில் கவிஞர்களின் நட்பு மிகமுக்கிய இடம் பெற்றிருக்கிறது. மாக்ஸ் ஜாக்பஸ் நட்பு பிக்காஸோவின் கற்பனையை ஆழமாய்க் கிளறியது. பிக்காஸோவை, இலத்தின் பகுதி, மாண் மார்த்திரே இடங்களின் இரகசியங்களிற்கு அறிமுகப்படுத்தினான் மாக்ஸ். பாரிசில் நிரந்திரமாகத் தங்கிவிடும் முடிவை 1904, பிப்பரவரிவரை தள்ளிப் போட்டுக்கொண்டு வந்தார். வாழ்க்கை கடுமையாக இருந்தது; ஆனால் அதிலிருந்து புறமுதுகு காட்டி ஓடவில்லை. அதே ஆண்டு, பிற்காலத்தில் புகழ்பெற்ற கவிஞர்களைச் சந்தித்தார். அழகி ஃபிரெணட் ஒலிவியாவிடம் காதல் ஏற்பட்டது. அவளுடன் வறுமை பிடுங்கும் வாழ்க்கை நடந்தது.

1905லிருந்து பிங்க்(அதாவது கத்திரிப்பூ நிறம்) காலம்' என்றழைக்கப்படும் கட்டம் தொடங்குகிறது. இக்கால ஓவியங்களில், சர்க்கஸ்காரன், கயிற்றில் சாகசம் புரிபவர்கள், துடிஇடையாள்கள், கோமாளிகள் வருகின்றனர். இந்த ஆண்டில் அமெரிக்க எழுத்தாளரான ஜெர்ட்ருயிட் ஸ்டீனுடன் நட்பு ஏற்படுகிறது. அதே ஆண்டு இன்னொரு ஓவியமேதையான மாட்டிசே, கவிஞன் அப்போலிறியரேனுடன் தொடர்பு ஏற்படுகிறது. சேஜேன் ஓவியங்களில் ஏற்கனவே பிக்காஸோவிற்கு ஈடுபாடு உண்டு. அவ்வாண்டு பாரிசில் சேஜேன் ஓவியங்களின் காட்சி நடைபெற்றது

இவரின் பாதிப்பு பிக்காஸோவில் ஏற்படத் தொடங்குகிறது. இக்காலக்கட்டத்தின் நிறைவாய்—சிறப்பாய்த் திகழ்வது 'ஜெர்ட்டிருயிட் ஸ்டீன் படம்' என்ற ஓவியம். இக்கால க்ட்டத்தில், நீக்ரோ மக்கள், மற்றும் நாகரீகமில்லாத் தொல்பழங்குடி மக்களின் கலைகளின் பாதிப்பு அழுத்தமாய் விழுந்தது. இக்காலத்தின் பெரும் சாதனையாகவும் —உலக ஓவிய வரலாற்றில் உன்னத இடத்தை எடுத்துக் கொண்ட— 1907ல் தீட்டப்பட்ட 'அவிக்னுன் அணங்குகள் ஓவியமாகும்.

'அவிக்னுன் அணங்குகள்'—கான்வாஸில் (ஓவியம் தீட்டப்படும் துணித்தான்) ஒரு புரட்சியை உண்டாக்கியது. இதைப் போல் பெரும் பரபரப்பையும், ஓவியங்களை பெரிதும் பாதித்ததுமான மற்றைய ஓவியம் கிடையாது. முப்பதாண்டுகளாகப் பொதுக் காட்சியில் காண்பிக்க முடியாமல் இருந்தது. அணங்குகள் ஆடையின்றி காட்சி அளிக்கின்றனர் இந்த ஓவியம் பிக்காஸோவிற்கு அவரின் புரவலர்களிடமிருந்தும் மட்டுமல்லாமல், படத்தைப் பார்க்க வந்த ஓவியர்களிடமிருந்தும் எதிர்ப்பை சம்பாதித்துக் கொடுத்தது. அவர்களுக்கு அதிர்ச்சி தந்தது, அம்மணம் அல்ல; அல்லது தீட்டபட்ட அணங்குகள் பரத்தையர்கள் என்பதால் அல்ல. முதலில் 'பார்சிலோனாவின் பரத்தையர் வாழும் இடம்' என்றுதான் பெயரிடப்பட்டது. பின்புதான் அந்தப் பெயரை மாற்றினர். எதிர்ப்பின் காரணம்: ஆடையில்லா அணங்குகள் தீட்டப்பட்ட விதம் தான். அன்று வரை, ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆட்சி நடத்தி வந்த ஓவியத்தின் ஒவ்வொரு விதியையும். சட்டத்தையும் பிக்காசோ உடைத்து எறிந்தது தான். தொலைநிலை (Perspective) நீக்கப்பட்டது; பரப்பு தட்டையாக்கப்பட்டது;உடல்கள் கோணங்களாக துண்டாடப்பட்டு இருக்கின்றன. முகங்கள் மூடி அணிந்தாற்போல் உள்ளன. சுருங்கச் சொன்னால் மறுமலர்ச்சிக் காலத்தில் புனிதமாக கருதப்பட்ட கலைப் பற்று ஒவ்வொன்றும் ஒதுக்கித் தள்ளியது இந்த ஓவியம். புரட்சிகரமான வன்மையான எழுச்சியாய் இருந்தது. இந்தக் கட்டத்திற்கு எங்கிருந்தோ திடுதிப்பென்று அவர் குதிக்கவில்லை. இதற்கும் பரிணாமம் இருந்தது. அவரின் நீலம் 'ரோஜா.' காலங்களில் ஓவியத்தின் மேற்பரப்பை தட்டையாக்கிவிட்டார், ஆழத்தை எடுத்துவிட்டார். வண்ணங்களை அவர் அழகிற்காக, அலங்காரத்திற்காக விளக்கத்திற்கும் பயன்படுத்தவில்லை; மாறுகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் கையாண்டார். ஆகையால் இக்கட்டத்திற்குப் படிப்படியாக வந்து கொண்டிருந்தார். ஆனால் வழக்கம் போல, பிக்காசோவின் புரட்சி

இடியென வெடித்தெழுந்தது. இருபதாம் நூற்றாண்டு ஓவியத்தில் வரலாற்றைப்படைத்த 'கியூபிசம்' என்ற இயக்கத்தின் மிக முக்கிய பரிணாம நிலை இவ்வோவியம்.

பிக்கோசோவின் ஓவியக் கலை செய்முறை நுணுக்கம் ஆழமாய்ப் பதிந்தது இப்படம். சிறப்பு என்னவென்றால் நுணுக்கம் சிக்கனமாய் விழுந்திருக்கிறது. வெறும் கோடுகளே முகபாவங்களையும் முலைகளையும், கைகளையும் கொண்டு வந்துவிட்டன. ஆரவாரமற்ற வண்ணத்தொனி தெற்றென உடற்பரப்பைக் கூர்மையாக்கிக் காட்டுகிறது. இடப்பக்கமாக இருக்கும் மூன்று பெண்களில் ஐபீரியன் சிற்பமும், மற்றைய பெண்களில் நீக்ரோ சிற்பத்தின் பாதிப்பையும் காணலாம் ஆனால் ஓவியம் முழுவதிலும் சேஜேனின் பாதிப்புமறைந்து இருக்கிறது. இதைக் கண்ட இன்னொரு ஓவிய மேதையான பிராக் சொன்னாராம் கவி அப்போலினியரிடம், "பெட்ரோலைக் குடித்துவிட்டுத் தீயையல்லவா கக்கி இருக்கிறான் ?"

1905ஆண்டின் இடைக்காலத்திலிருந்து பிக்காசோவின் உள்ளக் கிளர்ச்சிகளிலும், வரையப்படும் பொருட்களைக்குத் தேர்தெடுப்பதிலும் ஏதோ மாற்றம் நிகழத் தொடங்குகிறது. குதிரைகளை நீருக்கு அழைத்துச் செல்லும் இளைஞர்கள், பெண்கள் தலைவாரிக் கொள்ளும் காட்சி ஓவியங்களாய் வருகின்றன. ஓவியத்தில் பரவலாக இருந்த நிறத்தின் தொனி இப்போது இறுக்கமாகச் செறிந்து வந்தது; வரைதல் கம்பீரமாய் வந்ததால் வடிவங்கள் பின்னணியிலிருந்து பிரிந்து பளிச்செனத் தென்படுகின்றன. இவையெல்லாம் 'அவிக்கனோன் அணங்குகள்' முன்வந்தவை.

பிரஞ்சு ஓவிய மேதையான பிராக்கினுடன் கொண்ட நட்பு, பிக்காசோவின் ஓவிய வாழ்க்கையில் இன்னொரு மைல் கல்லாகும். 1908–1909 காலத்தில் பிக்காசோவும் பிராக்கும் தீட்டிய ஓவியங்கள் கலை வரலாற்றில் புதிய இயக்கத்தைதோற்றுவித்தன. அது தான் கியூபிசம். கியூபிசத்தின் சாரம் இதுதான்.

கியூபிசம் புதுமை நோக்கிச் செய்த பயணத்தின் விளைவு. வடிவங்கள் துண்டாடப்படுகின்றன. அவைகள் பரப்பில் விருப்பம் போல் வைக்கப்படுகின்றன. படத்தில், வெளியை உண்டாக்கும்,உயரம்,அகலம், நீளம் அல்லது ஆழம் ஆன மூன்று பரிமாணங்களில் கடைசியானது நீக்கப்படுகிறது. ஒரு பொருளின் அல்லது காட்சியின் எல்லாப் பக்கங்களையும் ஒரு சேர சமதளத்தில் விரித்துப் போடுவது. 'கியூபிசம்' ஹீராயிக் (வீரக்) 'கியூபிசம், 'அலசல் கியூபிசம் 'கலவை கியூபிசம்' என்றும் பிரிந்து வளர்ந்தது. கியூபிசத்தின் தொடக்கத்தில் வண்ணத்திற்கு இரண்டாம் இடம்

கொடுக்கப்படுகிறது. சார் பற்ற தொனி ஓங்கி இருக்கிறது. சாம்பல் நிறம், வெளிறிய பச்சை, நிலத்தின் நிறம் இவை காணப்படுகின்றன. பிக்காசோவின் கியூபிச ஓவியங்களில் சில 'உட்கார்ந்திருக்கும் மூன்று மங்கையர்கள்' 'மண்டோலின் வாசிப்பவன்' 'கிதாருடன் பெண்' 'வயலீன்' 'ஒரு பெண்ணின் படம்' 'காதற் பாட்டு'.

மாபெரும் ஓவியக் கலைஞர்களானயேழான் கிரிஸ், வில்லா, மார்சல் துச்சாம்ப்; நாடக ஆசிரியர் யேழான் காக்தோ—இவர்களிடம் தொடர்பும் நட்பும் ஏற்படுகின்றன. ரோமில் ஓல்காகோகலுவேயை சந்தித்தார். 1910ல் நியூயார்க்கில் பிக்காசோ ஓவியக் காட்சி முதன் முதலாக நடைபெற்றது. கியூபிசத்தை ஆதரித்து அவி அப்போலினியர் புத்தகத்தை வெளியிட்டான். பிக்காசோவின் வாழ்க்கையில், முதல் உலகப்பெரும் போர் 1913 நடந்தபோது பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. அவர் தந்தை காலமானார். போரில் அவரின் நெருங்கிய நண்பர்கள் பலர் இறந்து விடுகின்றனர். அப்போலினியரும் மாண்டு போகிறான்.

1912 ஆண்டு தொடக்கத்தில் புதுடெக்னிக் ஒன்று வந்தது. அதுதான் கோலாஜ். இதற்கு விளக்கங்கள் பல கொடுக்கப்பட்டன. ஓவியத்துடன், தபால் தலைகள், கவர்கள், கந்தல் துணிகள், காகிதங்கள்—சுருக்கமாகச் சொன்னால் வேண்டாம் என்று எறியப்பட்ட எந்தப் பொருளையும் கையாண்டனர். எப்போதும் போல் தியரியைப் பற்றிக் கவலைப்படாத பிக்காசோ இந்த புதுடெக்னிக்கையும் தன் வயமாக்கிக் கொண்டார். 1916ல் இத்தாலி சென்றார். அங்கே இருந்த சிற்பங்களின் பிரம்மாண்டமான தன்மையும், ஓங்கிய மாட்சிமையும் அவர் மனதில் ஆழமாய்ப் படிந்தன.

போர் முடிவடைந்த காலத்தில் பிக்காசோவின் ஓவியம் புதுக் கிளர்ச்சி கொண்ட வளர்ச்சி கொள்கிறது. இதை 'நியோ கிளாசிக்' கட்டம் என அழைக்கிறார்கள். நடை மாறுகிறது; பாணிமாறுகிறது; தொனிமாறுகிறது. கிளர்ச்சியின் விசை இக்கால ஓவியங்களில் 'தாய்மை' தான் திரும்பத்திரும்ப வரையப்படுகிறது. அப்போது மனைவி ஓல்கா முதன் முதலாகக் கருவுற்றிருந்தாள். பிக்காசோ எங்கெங்கெல்லாமோ அக்காலத்தில் போய்வந்தார். 1920 ஆண்டின் கோடை, இளவேனில் பருவங்களில் மெடிட்டிரேனியனில் உள்ள 'ழே-யான்-லே-பீன்சில்' தங்கி இருந்ததைக் குறிப்பிட வேண்டும். அப்போது அவர் புதிய படைப்பாற்றலைப் பெறுகிறார். 1922ல் அங்கே குடியேறினார். 1924 வரை நாடகங்களுக்கு டிசைன் செய்து கொடுத்தார். அதே ஆண்டு கவியும் நாவலாசிரியருமான ஆண்டிரி பிரட்டன் நட்பு

கிடைக்கிறது. சிறிது காலத்திற்கு முன்பு பிரட்டன் தன் புதிய இலக்கியக் கொள்கையான 'சர்ரியலிசக் கோட்பாடு விளக்க அறிக்கை' வெளியிட்டிருந்தார். அவரின் மூலம் சார்ரியல் குழுவின் இளைஞர்களைச் சந்தித்தார். பிக்காசோ ஒரு சர்ரியலிஸ்ட் இல்லை என்பது உண்மைதான். ஆனால் சர்ரியலிசத்தின் பாதிப்பை அவரது ஓவியங்களில் காண முடியும். சர்ரியலிசத்தார்கள் வலியுறுத்தும் 'ஆட்டோமாட்டிசத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். ஆனால் சர்ரியலிசத்தின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டார். படிமங்களை அல்லது பொருள்களைப் பகுத்தறிவிற்கு ஒவ்வொத முறையில் பொருத்துவது. இவ்விணைப்பு சாதாரணமாக எண்ண முடியாதவை. இவ்வடிவங்களுக்கு ஊற்றாய் இருப்பது கனவுகள், தணிக்கை செய்யப்படியாத படிமம், கற்பனை, சர்ரியலிசகாரன் அகவுலகத்திற்கும், புலன்கள் அறியும் புற உலகத்திற்கும் உள்ள வேற்றுமையை அழுத்திச் சொல்லுகிறான். அவன் தன் அகக்கண்களோடு நோக்கி, அங்கே ஏற்படும் படிமங்களை வெளிக் கொணர்கிறான். அடிமனத்தில்புதைந்து கிடக்கும் நிர்ப்பந்தங்கள், இச்சைகள், நம்பிக்கைகள் தன் மனத்தையும், அது செயல்படுவதை இவைகளுக்கு வடிவங்கள் கொடுக்கிறான். மனிதன் முழுவதும் சரியாகப் புரிந்து கொள்ளாததினால், சர்ரியலசத்திற்கு அடிப்படை கிடைக்கிறது. பிக்காசோ தன் அடிமனத்தின் ஆழத்தைக் கோடுகளாலும்நிறங்களாலும் கொண்டு வரும் ஆற்றலைக் கிளறியது சர்ரியலிசம். இந்தக் காலத்தில் அவர் சொந்த வாழ்க்கை சுமுகமாக இல்லை. மனைவி ஓல்காவுடன் இசைந்து போகமுடியவில்லை. ஆகையினால் அவர் தன் மனத்தையும், உள்தூண்டல்களையும் துருவி ஆராய முற்பட்டிருக்கலாம். தன் மன அடியில், ஆதிகால மனிதனின் புணர்ச்சி இயல்பூக்கமும், மற்றவர்களை துன்புறுத்துவதால் விளையும் இன்ப உணர்ச்சியும்இணைந்து இருப்பதைக் கண்டார். 1925 லிருந்து 1933 வரை வரையப்பட்ட ஓவியங்களில் இந்த மறை முக மனப் பிரதேசத்தைக் காணமுடிகிறது. பெண் வடிவங்கள் தாக்கும் காம ஆற்றலின் உருவங்களாய் வருகின்றன; உக்கிரமானபுணர்ச்சி உணர்ச்சியால் கிழிபட்டு சித்ரவதைப் பட்டவைகளாக இருக்கின்றன. இதுவரை பிக்காசோ கலைபடைப்பில் காணப்படாத பேராசை, வஞ்சம் தீர்த்தல், பொறுமை, வெறுப்புணர்வு, வேதனை, எதிர்ப்பு பொங்கிவருகின்றன. நியோகிளாசிக்கல் காலத்தின் அவருக்கு விருப்பமான 'கடற்கரையில் காணும் பெண்கள்' அவர் மனதை விட்டு நீங்கவில்லை. ஆனால் அந்த வடிவங்கள் அடங்காக் காமத்தின் குறியீடுகளாக வருகின்றன.

பிக்காசோவின் கலையில் 1934 ஆண்டு மிக முக்யமா கிறது. அந்த ஆண்டு, முன்பு தெருவில் தற்செயலாக சந்தித்த மேரியா தெரேசா வால்டனுடன் ஸ்பெயினுக்குத் திரும்பினார். அந்தப் பயணம் அவர் கலையை மிகவும் பாதித்து. பல இடங்களில் சுற்றி திரிந்ததினால், தன் சொந்த நாட்டின் பேராற்றல், வன்மை, வீரியத்தை உணர்ந்தார். மாட்டுச் சண்டை, கோழிச் சண்டை இவைகளில் ஈடுபாடு கிளர்ந்தது. இவை ஓவியங்களாக வந்தன. ஸ்பானிஷ் குடியரசிற்குத் தன் ஆதரவைத் தந்தார். 1936 ஜுலை மாதம் உள் நாட்டுப் போர்மூண்டபோதுஸ்பானிஷ் அரசு அவரை பிரிட்டோ மியூசியத்தின் இயக்குநராக நியமித்தது மறு ஆண்டு சர்வாதிகாரி பிராங்க்கோவைக் கடுமையாகத் தாக்கி எழுதினார். அப்போது மனைவி ஓல்காவிடம் ஏற்பட்ட மாறுபாடுகளினால் அவரது ஓவியமும் பாதிக்கப்பட்டது. சீக்கிரத்தில் மணமுறிவும் நடந்தது. அவ்வாண்டு தெரேசா வால்டா குழந்தை பெற்றாள். தோராமார் என்பவளுடன் சந்திப்பு ஏற்பட்டது. அவளைத் தன் ஓவியங்களில் பல தடவை தீட்டி இருக்கிறார். பிக்காசோவின் வாழ்க்கையில் வந்த பெண்கள் எல்லோருமே அவர் கலையைப் பாதித்து இருக்கிறார்கள். தூண்டுதலாய், கிளர்ச்சியூட்டின உள்ளங்களாய் இருந்திருக்கிறார்கள். அவர்களின் சுவடுகள் அவன் கலையில் காணப்படுகின்றன.

1937ம் ஏப்ரல் மாதம் 28ம் நாள் பிக்காஸோ பாரிசில் இருந்த கர்னிக்காஎன்றசின்ன நகரம் பாசிஸ்டுக்களின் குண்டுகளால் தாக்கப்பட்டது. பிக்காசோவின் சினமும் வேதனையும் ஓவியங்களாக வெடித்து எழுந்தன. இந்த சுவர் ஓவியத்திற்கு முன்னோடியாக என்று சொல்லும்படியாக மினோடைரோமச்சி' இருக்கிறது. இது 1935 ல் செதுக்கப்பட்டது (இட்சிங்). படத்தின் இடப் பக்கத்தில் காளை முகம் கொண்டது மற்றையபாகம் மனித உடலுடன் இருக்கும் ஒரு உருவம். இவ்வுருவம் பெண் மட்டாடரை (மட்டாடர் என்ற சொல்லிற்கு பொருள் காளையுடன் போர் புரிபவர்) தாங்கி இருக்கும் குதிரைக்குமேல் இருக்கிறது; இதன் கை, சிறுமி ஒருத்தி ஏந்தி இருக்கும்விளக்கிலிருந்து வரும் ஒளியைத் தடுக்கிறது. இடப்பக்கம். பார்வை கருணை நிறைந்த, இடுப்புவரை மட்டும் துண்டு அணிந்தஏணிமேல் நிற்கும் மனிதன் ஒருவன். இவ்வுருவங்களுக்கு மேலே, கீழே நடப்பவைகளைக் கனவுபோல் பார்த்துக் கொண்டிருக்கும் பெண்கள் இருவர். 'கர்னிக்கா'வின் கூறுகள் இதில் காணப்பட்டன என்பது உண்மையானால், பல அடிப்படையான வேற்றுமை இருக்கின்றன.

'கர்னிக்கா'– ஓவிய வரலாற்றில் உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டது: 1937 ஸ்பானிஷில் நடந்த உள்நாட்டுப் போர்க் காலத்தில், ஆட்சியில் இருந்த குடியரசின் வேண்டுகோளுக்கிணங்கி செய்யப் பட்டது இவ் வோவியம். அவ்வாண்டு பாரீசில் நடந்த உலகப் பொருட்காட்சியின் ஸ்பானிஷ் நாட்டின் சார்பாக வைக்கப் பட்டது. கர்னிக்கா என்ற சிறு நகரம் சர்வாதிகாரி ஃபிராங்கோவினால் குண்டால் தாக்கப்பட்டது. தாக்குதலால் ஏற்பட்ட அழிவு பிக்காசோவை உறுக்கிற்று. அதன் விளைவு வரலாற்றை உண்டாக்கியது.

இவ்வோவியத்தைப் பற்றி விளக்கங்கள் பல கொடுக்கப் படுகின்றன. ஆனால்அவற்றின் அடிப்படை ஒன்றுதான். அது போரை அருவெறுப்பதாகும்; வன்மையும் இம்சையும் அழிவுக்குக் காரணமாக இருக்கின்றன.

இவ்வோவியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். நடுவில் முக்கோணமானபிரிவு; அதன் இருபக்கங்களில் வடிவங்களின் செங்குத்தான தன்மை. இடப்பக்கத்தில் உருவங்களின் சிக்கல் ஒன்று. இந்தச் சிக்கலில் ஒரு காளையின் கம்பீரமான முகம். முகத்தின் அடி உள்வாங்கி வளைந்து இருக்கிறது) இந்த வளைவு இடத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது, இறந்துவிட்ட குழந்தை ஒன்றை வைத்துக் கொண்டிருக்கும் ஒருத்தியின் உருவம். நடுப்பாகத்தில் குதிரை ஒன்று. அது ஈட்டியால் குத்தப்பட்டதால் வாய் பிளந்துகதறும் காட்சி. மேலே சன்னலிலிருந்து ஒருத்தி எட்டிப் பார்க்கிறாள். அவள் தலையும், ஒரு விளக்கைப் பிடித்துக் கொண்டிருக்கும் கை ஒன்றும் மட்டுமே தெரிகின்றது. கீழே மற்றொருத்தி முழங்கால் மண்டியிட்டுக் கிடக்கிறாள். முக்கோணத்தின் இடப்பக்க மூலையில், விழுந்துகிடக்கும் படைவீரன் ஒருவன் தலையும், நீட்டிய கையுமாய் இருக்கின்றன. வலப்பக்கம் கைகளை மேல் நோக்கி நீட்டிய உருவம் ஒன்று எல்லா உருவங்களும் சொல்ல முடியா வேதனையில் கிடக்கின்றன. ஆனால் இந்தக் கொடுமைக் காட்சியில், அந்தக் காளைமட்டும் தனித்து நிற்கிறது. காளையைச் சுற்றி இருக்கும்இடம்இருள்செறிந்த அதிகப்பரப்பளவில்இருப்பது அதன் தனிமையை ஆழப் படுத்திக் காட்டுகிறது. இந்த ஓவியத்தில் பேரமைதி கொண்டு, மாட்சிமையோடு இருப்பது இந்தக் காளை மட்டும்தான். பார்ப்போனை, நேரிடையாக நோக்குகிறது. இந்தக் காளை. படத்தின் மேலே மின் விளக்கு ஒன்று ஒளியை உருவங்களின்மேல் கொட்டுகின்றது. ஒளியும் இருளும் விரவிய பிரதேசங்கள் ஓவியத்தில். இதில் நாடகத்தின் குழுவிசை வெண்மை, கருப்பு, சாம்பல்நிற வண்ணம்—இவற்

ருல் மட்டும் வரையப்பட்டிருக்கிறது ஓவியம்.

இவையெல்லாம் என்ன பொருளைக் கொடுக்கிறது? கலைஞன் எதைச் சொல்ல முயல்கிருன்? இந்தக் காளை மிருகத்தன்மை அல்லது வன்மையின் குறியீடா? இந்தக் குதிரை மன்பதைக்குக் குறியீடா? அல்லது காளை ஸ்பானிஷ் குடியரசையும், குதிரை இராணுவத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறதா? பெண் ஏந்தியிருக்கும் அந்த விளக்கு, உரிமை உண்மையின் வெற்றியையும் அவற்றின் தேவையையும் காட்டுகிறதா? பிக்காசோ சொன்னுர்: "அந்தக் காளை பாசிசம் அல்ல. ஆனல் அது மிருகத் தன்மையும், இருளும் ஆகும்... அந்தக் குதிரை மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்துகிறது ... கர்னிகா ஒரு தொடர் உருவகக் கதை—ஒரு குறியீடு. இந்தச் சுவரோவியம் ஒரு பிரச்சனையின் வெளிப்பாடும் அதன் பரிகாரமும் ஆகும். இதையே ஆண்டுகள் பல கழித்து மறுத்தும் இருககிருர். "அந்தக் காளை வெறும் காளை; குதிரையும் அப்படியே குதிரை...குறியீடுகளாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்... மக்கள் எதைப்பார்க்க விரும்புகிருர்களோ அதைப்பார்த்துக் கொள்ளட்டும்" கலையானது விளக்கப்படக்கூடாது; அலசப்படக் கூடாது; சொல்லிக் கொடுக்கப்படக்கூடாது. அதைப் பார்ப்பவன் நேரிடையாக அனுபவிக்க வேண்டும். இது பிக்காசோவின் ஆழ்ந்த நம்பிக்கை. கலைஞன் தனக்குத் தெரியாமல் தன் அபிமான உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளியிடுவதால் தன் படைப்புகளுக்குப் பூடகமான நேரான அர்த்தங்களைக் கொடுக்கிருன்.

ஸ்பானிஷ் கலாச்சாரத்தில் 'காளைச் சண்டை' மிக முக்கியமானதாகும். துயரம், வாழ்வு, மரணம், வீரியம்-இவைகளின் சின்னமாக இருக்கிறது மனிதன் காளையுடன் சண்டையிடுவது. களத்தில் தன் திறமையை, சூழ்ச்சியை, வீரத்தை, பெருவலிவு கொண்ட காளையுடன் சோதித்துப் பார்க்கிருன். மனிதனும் காளைக்கும் மரணம் நேரிடும் வரை கடும்போர் ஸ்பானிஷ் கலாசாரத்தில் எல்லா விலங்குகளை விட ஆற்றல் வாய்ந்ததாய் வீரம் செறிந்ததாய் காளை கருதப்படுகின்றது. அதனல் தான் அது மனிதனின் தகுதி பெற்ற பகைவன். ஆனுல் குதிரையோ மென்மையானது. ஓவியத்தில் இருக்கும் விளக்கை ஏந்தியிருப்பவனும், காளையும் வெற்றிபெற்ற ஆற்றல்கள். துண்டிக்கப்பட்டு கீழே கிடக்கும், உடைந்த வாளை பிடித்திருக்கும் கை மிலிடெரி சாதியைக் குறிப்பது. மண்ணெண்ணை விளக்கை ஏந்தி வெளிச்சம் உண்டாகும் முயற்சியில் தோல்வியுற்ற பெண்ணின் உருவம், பழங்காலத்திய

கருத்துக்களாலும் உணர்வு களாலும் பிரச்சனைக்குப் பரிகாரம் காண முடியாது என்பதின் குறியீடாக இருக்கலாம். சுருக்கமாகக் கூறினல் ஒரு நச்சு வட்டம் பிரதிநிதித்துவப் பட்டிருக்கிறது. பரிகாரம் கருணையின் வழி அல்ல; அறிவுத் தெளிவினல் தான் முடியும். தனி மனிதனிடம் பிரச்சாரம் பெரிதளவு திணிக்கப்பட்டிருப்பதால் தனக்கு எது நல்லது கெட்டது என்று தெரியாமல் இருக்கிருன். அவன் தன்னை அழிவுச் சக்திகளிலிருந்து விடுவித்துக் கொள்ளவில்லை என்ருல் அவன் பலியாகிக் கொண்டே தான் இருப்பான்.

அமெரிக்காவில் 'மியுசியம் ஆஃப் மாடர்ன் ஆர்ட்' பெரிதளவில் பிக்காசோவின் ஓவியக் கண் காட்சி நடத்தியது.

இரண்டாம் உலகப்பெரும் போர் மூண்டது. பாரீசிற்குப் பிக்காசோ திரும்பி, போர் முடியும் வரை அங்கேயே இருந்தார். சிற்பத்தில் அவர் நாட்டம் சென்றது. 'ஓர் ஆட்டுடன் மனிதன்' என்ற புகழ் பெற்ற சிற்பம் உண்டானது அந்த காலத்தில் தான். போரில் அவரது நண்பர்கள் பலர் இறந்தனர். அவரின் ஓவியத்தை பாதித்தது. போரின் கொடுமையும், பயங்கரமும் 'சுடுகாட்டு வீடு' என்பதில் உக்கரத்தோடு வந்தன. போர் முடிவுற்றது. முடிவும், விடுதலையும் பாரீசின் சதுக்கங்களிலும் வீதிகளிலும் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்பட்டன. பிக்காசோ ஓவியத்தில் அமைதி திரும்பியது. புதுச்சோதனைகளில், புது நுணுக்கங்களில் அவரது திறன் மிளிரத் தொடங்கியது. 1947ல் பீங்கானில் அவரது கை வண்ணம் படிந்தது. பன்னிரண்டே மாதங்களில் ஈராயிரத்திற்கும் மேலான பீங்கான் கலைப்படைப்புகள் அசுரவேகத்தில் வந்தன. அவரது சொந்த வாழ்க்கையில், மணமுறிவும் காதலும் ஏற்பட்டன. பிற்காலத்தில் 'போரும் அமைதியும்' 'கொரியாவில் படுகொலை' 'ஓவியனும் அவன் மாடலும்' 'அல்ஜீரியா மாதர்கள்'– இவைகள் பேர்போனவை.

பிக்காசோவின் ஓவியக் கண் காட்சிகள் பல தடவை உலகில் பல இடங்களில் மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்டன. பிரான்சு அரசாங்கமும் பாரீஸ் மாநகரமும் பிக்காசோவின் 85வது பிறந்த நாளை முன்னிட்டு அவரின் படைப்புகளைக் கொண்ட ஒரு கண் காட்சி நடத்தியது உலகத்தில் பல இடங்களில் இருக்கும் அவரின் கலைப்படைப்புகள் சேகரிக்கப்பட்டன. 1966 நவம்பரில் இக்காட்சி நடந்தது.

ஒரு தடவை பிக்காசோ சார்த்ரேயிடம் சொன்னர். 'வேலை செய்வது எனக்கு ஒரு மருந்து'. அவர் கைகள் புதியவைகளைப் படைத்துக் கொண்டே இருக்கின்றன.

"மற்றவர்கள் தங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுது வதுபோல் நான் என் ஓவியங் களைத் தீட்டுகிறேன். என்னு டைய ஓவியங்கள் முற்றுப் பெற்றாலும் பெறாவிட்டாலும் அவைகள் என் டைரியின் ஏடு கள். எதிர்காலம் எதைத் தேர்ந்தெடுத்துக் கொள் கிறதோ அதை எடுத்துக் கொள்ளட்டும். தேர்ந்தெடுப் பது என் வேலை அல்ல. கால மானது என் கை விட்டு சீக் கிரம் சீக்கிரமாக நழுவிப் போய்விடுவதை உணர் கிறேன். இருகரை மருங்கி லும் ஒட்டி வளர்ந்த மரங்களை யும், ஒதுக்கிவிடப்பட்ட செத்த விலங்கின் சடலங்களை யும் சுமந்து செல்லும் ஆற் றைப் போலவும், அதன் நீரில் இனப்பெருக்கம் செய்து கொண்டிருக்கும் கிருமிகளைப் போலானவன் நான். இவை களை எல்லாம் என்னுடன் இழுத்துக் கொண்டு என் வழியே சென்று கொண்டு இருக்கிறேன்".

பிக்காசோ உண்மையி லேயே வற்றாத பேராறு.

---

# சுபுத்தி உதவுகிறார்

மேலை நாட்டின் இலக்கி யங்களைத்
தோலை உரித்துச் சுவைத்த ஒருவர்
'ஃபாக்னர் புரிகிறது, வார்லேன் புரிகிறது,
காஃப்கா, எலியட், இட்சன், செக்காவ்,
ஸ்டெந்தால் புரிகிறது. நானும் பார்க்கிறேன்
இந்தத் தமிழ்இலக் கியங்கள் மட்டும்
புரிய வில்லை, எனக்குக் கொஞ்சமும்
புரிய வில்லை' என்றார். பௌத்த
சந்யா சிகளுக்கு ஒருநாள் சுபுத்தி
தந்த பதிலைஇ வருக்கும் தரலாம்;
*
புரிவதற்கு ஒன்றும் இல்லை,
புரிவதற்கு ஒன்றும் இல்லை.

வே. மாலி

* அஷ்ட சஹஸ்ரிகா

# நோய்

ஜோதிர்லதா கிரிஜா

தூங்கிக்கொண்டிருந்த நான் திடுமெனக் கண் விழிக்கிறேன் அசந்து தூங்கிக் கொண்டிருந்த எனக்குத் திடீரென்று தூக்கம் ஏன் கலைந்தது? எப்படிக் கலைந்தது.

தாகம் நெஞ்சை வரட்டுகிறது. ஓகோ. புரிகிறது. அபரிமிதமான தாகத்தில் தூக்கம் அறவே கலைந்து விட்டது போலிருக்கிறது. நான் சுற்று முற்றும்பார்க்கிறேன். மீனாட்சி என் கட்டிலுக்கருகில் அதன் காலை ஒருகையால் பற்றியபடி வெறும் புடைவைத்தலைப்பைவிரித்து அதில் படுத்துக் கொண்டிருக்கிறாள் பாவம். தன்னை மறந்த தூக்கம் போலும்.

எனக்கு உடம்பு சரியில்லாமல்போனதிலிருந்து அவள் படுக்கை கூடப் போட்டுக் கொள்ளுவதில்லை. வெறுந் தரையிலேயே கையை மடித்துத் தலையணைபோல் தலைக்கு அடியில் வைத்துக்கொண்டு படுத்து விடுகிறாள். உண்மையில் அவள் உறங்கிக் கொண்டு தான் இருக்கிறாளோ, இல்லாவிடில் சும்மா கண்களை மூடிப் படுத்திருக்கிறாளோ. இரவில் நான் எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் உடனே எழுந்து விடுகிற மீனாட்சி தூங்குவதாக எப்படிச் சொல்ல முடியும்? இப்போதுகூட 'மீனாட்சி!' என்று மெல்ல நான் குரல் கொடுத்தால்போதும். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து 'என்ன வேணும்?' என்று கேட்பாள். ஆனால் அவளைத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை.

தாகம் நாக்கை வரட்டுகிறது. நான் சுவரில் மாட்டியிருந்த பெரிய கடிகாரத்தைப் பார்க்கிறேன். மணி பதினொன்றரை. எனக்கு மிகவும் வியப்பாயிருக்கிறது. மீனாட்சி எனக்குக் கஞ்சி ஆற்றிக் கொடுத்தபோது மணி பதினொன்றேகால். கஞ்சியைக் குடித்துவிட்டு, வாயின் வழவழப்பைப் போக்கிக்கொள்ளுவதற்காக ஒரு வாய் நீரையும் பருகிவிட்டு, நான் படுத்துக்கொண்டபோது மணி பதினொன்று இருபது. படுத்து இரண்டொரு நிமிடங்கள் வரை வெறுமே கண்களை மூடியவாறு வழக்கம்போல் ஏதேதோ குருட்டு யோசனைகள் செய்து கொண்டிருந்த நான் எப்போது கண்ணயர்ந்தேன் என்பது தெரியவில்லை. ஆயினும் என் தூக்கம் அதிகமாய்ப்போனால் ஐந்தாறு நிமி

டங்களுக்குமேல் நீடித்திருக்க நியாயமில்லை. அதற்குள்ளாக வா நான் இப்படித் தூங்கிப் போனேன்? இந்தமாதிரித் தன்னினைவிழந்த தூக்கம் தூங்கித்தான் எத்தனை நாட்களாய் விட்டன. அப்படியே தூங்கினாலும், என் மனத்தை வருத்திக் கொண்டிருக்கிற துயரங்களும், துயரங்களின் நிழலாய்த் தொடருகின்ற இடைவிடாக் குழப்பங்களும் பிரச்சினைகளும் அந்தத் தூக்கத்தை நான் அநுபவிக்க முடியாதபடி துன்பம் நிறைந்த கனவுகளாய் அதில் குறுக்கிட்டுக் கெடுத்து வருவது வாடிக்கையா யிருந்து வருகையில், இன்று நான் இப்படி உறங்கிப் போனதை எண்ணும் போது எனக்கே வியப்பாக இருக்கிறது.

தாகம் தொண்டையை வரட்டுகிறது. சில்லென்று ஒரு செம்புத் தண்ணீர் குடிக்க வேண்டும் போல் நெஞ்சும் வாயும் வரளுகின்றன.

இத்தனை நாட்களாய் இதோ அதோ என்று என்னுடன் கண்ணுமூச்சி விளையாடிக் கொண்டிருக்கிற சாவு இன்றைய இந்த ஆழ்ந்த தூக்கத்தின்போது நேர்ந்திருக்கக் கூடாதா என்று என் மனசு ஏங்குகிறது. எவ்வளவு நிம்மதியான சாவாக இருந்திருக்கும். கடந்த இரண்டு மாதங்களாக எமனுலகைப் பல தடவைகள் எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பி விட்ட எனக்கு 'ஒன்று உடம்பு தேறிப் பிழைக்க வேண்டும், இன்றேல் உடனே செத்துத் தொலைந்து விட வேண்டும்' என்று தோன்றி விட்டது. இந்த அறுபது நாட்களில் என் மனைவியையும், எனக்கு உடம்பு சரியாயில்லை என்பதற்காகவே கைக் குழந்தையோடு கிளம்பி வந்திருக்கிற மூத்த மகளையுந்தவிர என் பிள்ளைகள் நால்வரும் என் முடிவு விரைவில் நேர்ந்து தொலைக்காதா என்று ஏங்குவதாகவே என் மனசுக்குப் பட்டுக் கொண்டிருக்கிறது.

குடும்பத்தில் யாருக்காவது உடம்பு சரியில்லாமற்போனால் சீக்காளியைக் கவனிக்க வேண்டிய கடனும் பொறுப்பும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்குத்தான் என்பதுபோல், வழக்கமான அரட்டைகளையும் கேலிக் கெக்கலிப்புக்களையும் இம்மியும் குறைத்துக் கொள்ளாமல்—நான் ஒருவன், பெற்ற தகப்பன், படுத்த படுக்கையாய்க் கிடக்கிற நினைவினால் சிறிதும் பாதிக்கப்படாமல்—தம் அன்றாட அலுவல்களைச் செய்து வருகின்ற பிள்ளைகளைப்பற்றி நினைக்கும்போது என் நெஞ்செல்லாம் கசந்து வழிகிறது. கடவுளே. சாகிற நேரத்தில் இவர்களைப் பற்றிய கசப்பான நினைவுகள் என் மனத்தில் எழாமலிருக்கட்டும். நன்றி கெட்ட இந்தப் பிள்ளைகள் பற்றிய எண்ணங்கள் இந்நேரத்தில் தோன்றினால் என் நெஞ்சுகூட வேகுமோ, வேகாதோ.

தாகம்நாக்கைவரட்டுகிறது. நான் சற்றே ஒருக்களித்துக் கொண்டு மீனாட்சியைப் பார்க்கிறேன். மீனாட்சியின் சீரான மூச்சுக்கள் அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாளோ என்ற ஐயத்தை என்னுள் எழுப்புகின்றன. அவள் தூங்கிக் கொண்டிருந்தாலும் நான் மெதுவாக அவள் பேரைச் சொன்னாலும்போதும், உடனே எழுந்து விடுவாள். ஆனாலும் அவளைத் தொந்தரவு செய்வதா?

ஐயோ, இதென்ன இப்படி தாகமெடுக்கிறது? நெஞ்சும் தொண்டையும் ஏனிப்படி உலர்ந்து போகின்றன? திடீரென்று என் மனத்தில் கிலியா விடுதலையுணர்வா என்று நானே வகை பிரிக்க முடியாத ஓர் உணர்ச்சி கொந்தளிக்கிறது. ஓகோ. இதுதான் மரண தாகமோ... அப்படித்தான் இருக்கும்.

சாகப்போகிறவனின் இறுதி விடாய் என்பதற்காக அதைத் தணித்துக் கொள்ளாதிருந்து விட முடிகிறதா? குளிர்ந்த நீரைக் கை கையாக அள்ளிப் பருக வேண்டுமென்ற வேட்கை வினாடிக்கு வினாடி என்னுள் தீவிரமடைந்து வருகிறது. மீனாட்சியை எழுப்பினால் அவள் சுடுநீர்தான் தருவாள். என்னை வருத்துகிற வேட்கை வெந்நீரால் தணியக் கூடியதல்ல. மீனாட்சிக்குத் தெரியாமல் அந்த அறையின் மூலையில்வைக்கப்பட்டிருக்கும் பானைத் தண்ணீரைப் பருகி விட வேண்டியதுதான். மரண தாகத்தைத் தணித்துக்கொள்ளாமல் மரணமா? கூடாது.

மீனாட்சியை எழுப்பினால் குளிர்நீர் கிடைக்காதென்ற காரணத்தினாலேயே அவளை எழுப்ப விரும்பாத நான் அசந்து தூங்குகிற அவளைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று ஒரு பொய்யான காரணத்தைக் கற்பித்துக் கொண்டு மெதுவாகப் போர்வையை விலக்கிவிட்டு எழுந்து உட்கார்ந்து கொள்ளுகிறேன். அம்மாடி. முதுகில்தான் என்ன வலி. உடம்பு முழுவதுமே—எதையோ வெட்டி முறித்து விட்டு வந்தாற்போல்—புண்ணாய் வலிக்கிறது.

தொண்டை வரண்டு போகிறது. போர்வையை முழுவதும் அகற்றிவிட்டு நான் மெதுவாகக் கால்களைத் தொங்கப் போட்டுக்கொள்ளுகிறேன். விருட்டென்று கட்டிலை விட்டு உடனே இறங்க முடியாதவாறு கால்களில் ஒரே குடைச்சல். அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தால் தேவலைபோல் உடலெங்கும் ஓர் அசதி; அலுப்பு.

சுவர்க் கடிகாரத்தில். பதினொன்று முப்பத்தைந்து ஆகிறது. கட்டிலிலிருந்து இறங்கி அறை மூலையிலுள்ள தண்

ணீர்ப் பானையை அணுகக் கடந்த ஐந்து நிமிடங்களாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு என்னை வியப்பிலும் வேதனையிலும் ஆழ்த்துகிறது. ஏனிப்படி? அலுப்புத்தான். வேறென்ன? கட்டிலிலிருந்து கீழிறங்கி ஓசைப்படாமல் சுவரோரம் சென்று பானையிலிருந்து தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பிவந்து கட்டிலில் ஏறிப்படுப்பதற்குள் மணி பன்னிரண்டுகூட ஆகி விடுமோ. சே. அதெப்படி? இப்போது என்னை வதைத்துக் கொண்டிருக்கிற மரண தாகத்தில் இன்னும் இருபத்தைந்து நிமிடங்கள் இந்தப் பாழும் உயிரால் தாக்குப்பிடிக்க முடியுமா?

தாகம் நாக்கை வரட்டுகிறது. சே. ஏன் இவ்வளவு வரட்சி? எதற்காகத் தாங்க முடியாத இந்தத் தாகம்?... அதுதான் மரணதாகம் என்று இப்போதுதானே தெரிந்து கொண்டோம்? அதற்குள் பாழும் மறதி வந்துவிட்டது. இந்த மறதி இருக்கிறதே, அது எப்போது வரக்கூடாதோ அப்போது வருகிறது. எப்போது வரவேண்டுமோ அப்போது வருவதில்லை.

இனிமேலும் அலுப்பையும் அசதியையும் சாக்காகக் கொண்டு தண்ணீர் குடிக்காமலிருக்க முடியாது. என் இனிய உயிரின் இந்த இறுதி விடாயைத் தீர்த்துக்கொண்டுவிடவேண்டியதுதான். நான் என் வலுவையெல்லாம் திரட்டிக்கொண்டு மெல்ல இறங்கித் தரையில் நிற்கிறேன். அவிழ்ந்து கொண்டிருக்கிற வேட்டியை ஒரு கையால் பற்றியபடி நானோரடி எடுத்து வைக்கிறேன்... அட, சை! உயிர்தான் இன்னும் கொஞ்ச நேரத்தில் போய்விடப் போகிறதே. என் உடலில் கட்டியிருக்கிற வேட்டியைக்கூட உருவி எடுத்துக்கொண்டு தானே சுடுகாட்டுப் புலையர் என்னை எரிக்கப் போகிறார்? உண்மை அதுவாயிருக்கையில், வேட்டியை நழுவாமல் பிடித்துக் கொள்ளுகிற அளவுக்கு மான வெட்கமென்ன வேண்டிக்கிடக்கிறது, மாண வெட்கம்! அறிவு செய்த சண்டித்தனத்தை மனம் பொருட்படுத்தாததால் என் கை வேட்டியை இன்னும் இறுகப் பற்றிக்கொள்ளுகிறது.

இடக் கை வேட்டியைப் பற்றியிருக்க, நான் மிக முனைந்து இன்னும் ஓரடி எடுத்து வைக்கிறேன். கால் தானாக இயங்காத மாதிரியும், தொடைக்கு மேலே பூட்டுக் கழன்று வலக்கால் உடலிலிருந்து வேறுபட்டு எவ்வித உணர்ச்சியுமின்றித் தொங்குகிறுப்போலவும் எனக்குத் தோன்றுகிறது. வலக்கால் உணர்ச்சியின்றிக் கட்டை போலிருந்த நிலை என்னுள் கலவர மூட்டுகிறது. இடக்கால் சரியாக இருக்கையில் வலக்கால் மட்டும் உடலிலிருந்து பிய்ந்து விட்டமாதிரி

உணர்ச்சி யிழந்து மரத்துப் போவானேன்? வேட்டியைப் பற்றியிருந்த கை சற்றே நடுங்குகிறது. அந்த நடுக்கத்தின் விளைவாய் இடக் கையிலிருந்து வேட்டியின் ஒரு முனை நழுவுகிறது மறு முனைமட்டுமே கைப் பிடியில் இருக்க, வேட்டி அவிழ்ந்து தொங்குகிறது. சுடுகாட்டுப் புலையர் எப்படியும் என்னை ஆடையற்ற நிலையில்தானே எரிக்கப் போகிறார் என்ற அறிவின் வாதம் மறுபடியும் நினைவுக்கு வந்த போதிலும், ஒரு முனை மட்டும் இடக்கையி லிருக்க, தரையில் விழுந்து புரளும் வேட்டியை எடுப்பதற்காக நான் குனிகிறேன். ஐயோ... இந்த இடுப்பு ஏன் கொஞ்சமும் குனிந்து கொடுக்க மாட்டேன் என்கிறது?

மீனாட்சி விழித்துக் கொண்டால் பரவாயில்லை. அவளிடமிருந்து சற்றுத் தள்ளிக் குழந்தையைக் கையால் அணைத்தபடி படுத்துக்கொண்டிருக்கும் என் மகள் பாகீரதி விழித்துக் கொண்டு என் அலங்கோலத்தைப் பார்ப்பதற்கு முன்னால் எப்படியாவது குனிந்துங் வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு விடவேண்டும். மீனாட்சியைக் கூப்பிட்டால் அவள் உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து என் உதவிக்கு வந்து விடுவாள். ஆனால், ஒவ்வொரு தடவையும் இரவில் நான் மீனாட்சியை அழைக்கிற போதெல்லாம் மகள் பாகீரதியும்கூட விழித்துக் கொண்டுவிடுகிறாள். இப்போது மீனாட்சியை நான் கூப்பிட்டால் பாகீரதியும் எழுந்து வுடுவாளே... எப்படியாவது சிரமப்பட்டுக்குனிந்து தரையில் காலடியில் கிடக்கிற வேட்டியின் மறு முனையைப் பற்றி எடுத்து அதைஅணிந்து கொண்டு விடவேண்டியது தான்.

தாகம் நாக்கைவரட்டுகிறது இடுப்பில் விண் விண்ணென்று தெறிக்கிறமரணவாதனையைப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்த வண்ணம் அங்குலம் அங்குலமாய்க் குனிகிறேன். ஒவ்வோர் அங்குலக் குனிவுக்கும் இடுப்பில் ஏதோ ஓர் எலும்பு முறிகிற மாதிரி நோகிறது. இடுப்பைப் பிடித்துக் கொண்டிருக்கிறது போலும். இந்தச் சின்ன வலியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லையே. பெண்கள் எப்படித் தான் பிள்ளைப்பேற்று வலியைத் தாங்கிக் கொள்ளுகிறார்களோ. என் கண்கள் என்னையுமறியாமல் எட்டுக் குழந்தைகள் பெற்ற என் மனைவியையும், மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி, நாலாவதாக ஒன்றைச் சுமந்து கொண்டு, ஐந்து, ஆறு, ஏழு என்று இன்னும் பெறப்போகிற என் மகளையும் திரும்பிப் பார்க்கின்றன. ஆண் பிள்ளைகள் கட்டுப்பாட்டோடு இல்வாழ்க்கையை அநுபவித்தால், வீடு ஒருசின்ன மருத்துவ விடுதியாக மாறுவதைத் தவிர்க்கலாமே என்று நான் கசப்போடு நினைத்துக்

கொள்ளுகிறேன். ஆரோக்கியமான குழந்தைகளை நீண்ட இடைவெளி விட்டுப் பெறுகிற பெண்கள் என்றைக்கும் இளமையோடு நோய்நொடியில்லாமல் வாழலாமே. உடல் நோயால் ஏற்படுகிற மன நோய்களையும் தவிர்க்கலாமே.

ஆண் பிள்ளைகள் மட்டுமென்னவாம்! மனக் கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டால்அவர்களும்தான் ஆரோக்கியமாக வாழலாம். சாகிற காலத்தில் சங்கரா சங்கரா என்பதுபோல், நான் என் கட்டுப்பாடின்மை மூலம் மீனாட்சியின் இடைவிடாத உடல் நலக் குறைவுக்கும்—ஏன்? என்னுடைய நோய்க்கும் கூடத்தான்—காரணமாகி விட்ட கேவலத்தை நினைத்துப் பார்த்துக் கூனிக் குறுகிப் போகிறேன். கையாலாகாத கிழவனாகி இரத்தம் சுண்டிப் போன நிலையில், நான் இல்லறத்தில் கடைப் பிடித்திருக்க வேண்டிய இச்சையடக்கத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கிறேன். என் அறிவு கெட்டதனத்தை நினைக்கையில் எனக்கே வேதனை பிடுங்கித் தின்கிறது. சே. இப்போது அதைப் பற்றி எண்ணுவதால் ஏதாவது லாபமுண்டா? இளமையின் திமிரில் நான் கொழுத்துக் கிடந்தபோது இதைப்பற்றி ஒரு கணமாவது நியாய உணர்வோடு சிந்தித்துப் பார்த்ததுண்டா?... என்னை நானே வெறுத்துக் கொள்ள முடிந்த நிலை என்னுள் அமைதியைத்

# வைராக்யம்

—:0:—

கவிஞனின் புலம்பலுக்குக்
கவிதை வடிகால்;
எனது புலம்பலை
எப்படி இயம்ப?
கலைஞனின் உணர்ச்சிக்குக்
கைத்தொழில் வடிகால்
எனது உணர்வை
எதனில் வடிக்க?
இன்பமும் துன்பமும்
இணைந்தே வந்தால்
சொல்லுக்குச் செயலுக்கு
எங்கே போவேன்?
ஏக்கமும் நிறைவும்
எதிரெதிர் வந்தால்
இதயத்தில் எதற்கு
முதலிடம் கொடுப்பேன்?
ஆதரவும் சீற்றமும்
அடுத்தடுத்து வந்தால்
எதற் கென்று அழுவேன்?
எதற் கென்று சிரிப்பேன்?
கவிஞனும் இல்லை; நான்
கலைஞனும் இல்லை;
ஆயினும் நான்வெறும்
மானுடன் இல்லை;
ஏறுக்கு மாறாக
எதிர்ப் படுபவற்றை
மனதைக் காலியாக்கி
ஏற்பேன்; வெல்வேன்!

"சாதனா"

தோற்றுவிக்கிறது. தன் தவறுகளை உணர்ந்து தன்னைத் தானே பழித்துக் கொள்ளுகிறவனுக்கு ஆண்டவனின் மன்னிப்பு உண்டல்லவா?

ஆனால் செய்த தவறுகளுக்காக என்னதான் வருந்தினாலும், அவற்றுக்குரிய தண்டனையினின்று தப்புவதென்பது மட்டும் நடக்காத காரியமென்றும், இம்மையில் தண்டனைகளை அநுபவிக்கும் முன் மூச்சுப் பிரிந்துவிடின், மறுமையில் நம் பாவ புண்ணிய மூட்டைகளை நாம் சுமந்தே தீர வேண்டுமென்றும் என் 'ஹிந்து மனம்' எனக்குச் சுட்டிக் காட்டுகிறது. நம் தவறுகளை எண்ணி நாம் வருத்தப்படுவதாகச் சில நேரங்களில் நினைக்கிறோமே, அது வெறும் ஏமாற்று வித்தையோ என்று கூடத் தோன்றுகிறது. மனச்சாட்சியை ஏமாற்றுவதற்காக மனம் கற்பிக்கிற மாயத்தோற்றமே இந்தக் கழிவிரக்கமெல்லாம் என்று படுகிறது. இல்லாவிடில், தன் தவறுகளைப் பற்றித் தனக்குள் அடிக்கடி வருந்துவதாக எண்ணிக் கொள்ளுகிற மனிதன் அவற்றைத் திரும்பத் திரும்பச் சாகிறவரை செய்து கொண்டிருப்பானேன்.

அம்மாடி ...... சிறுகச் சிறுக எப்படியோ குனிந்து தரையில் கிடக்கிற வேட்டியின் மறுமுனையை வலக்கையால் பிடித்து எடுத்து விடுகிறேன். திரும்பவும் நிமிர்வது பிரும்மப் பிரயத்தனமாய்த் தோன்றுகிறது. ஒவ்வோர் அங்குலமாய்க் குனிந்தது போல் ஒவ்வோர் அங்குலமாக நிமிர வேண்டியதுதான் என்று நினைத்துச் சிறிது சிறிதாக நிமிர முனைகிறேன் ஒவ்வொரு நிமிர்வுக்கும் உள்ளே இடுப்பெலும்புகள் ஒவ்வொன்றாக முறிகிற மாதிரி வலி உயிர் போகிறது. பல்லைக் கடித்துக் கொண்டு ஒருவழியாக நிமிர்ந்து நிற்கிறேன்.

இரு கைகளும் வேட்டியின் இரு முனைகளைப் பற்றியிருக்கின்றன. நான் வேட்டியைக் கட்டிக் கொள்ள முற்படுகிறேன். இடக்கையால் வேட்டியின் ஒரு முனையை இடையின் வலப்பக்கத்தில் பதிவாக வைத்து விட்டு, வலக்கையால் அதன் மறு முனையை இடப் பக்கம் கொண்டு வந்து செருக முயலுகையில் எனக்கு ஓர் உண்மை புலப்படுகிறது-வலக்கை வேலை செய்யவில்லை என்ற உண்மை. வலக்காலைப் போலவே வலக்கையும் தன்னிச்சையாய் உணர்ச்சியின்றித் தோளில் தொங்குவது போல் தோன்றுகிறது, விரல்களால் மட்டும் எப்படி வேட்டி முனையைப் பிடித்துக்கொள்ள முடிந்தது என்று யோசித்ததன் விளைவாக, மூச்சுப் பிரிகிற வேளையில் என்னைப் பக்கவாதம் வந்து தாக்கி விட்டதோ என்று புதிதாக முளைத்த அச்சம் பொருளற்றது என்று புரிகிறது. நீண்ட நேரம் ஒரே நிலையில் ஒருக்களித்துப் படுத்துக் கொண்

டிருந்ததால் உடம்பின் வலப் புறம் மரத்துப் போயிருக்கிற தென்றும், அது பக்க வாதத் தால் அல்லவென்றும் என்னை நானே சமாதானப் படுத்திக் கொள்ளுகிறேன். உண்மை யும் அது தான்.

எப்படியோ கஷ்டப்பட்டு வலக்கையின் முழங்கையால் இடுப்பில் வேட்டியை அழுத் தியபடி இடக்கையாலேயே வேட்டியைக் கட்டிக் கொண்டு விடுகிறேன். ஒரு கை வசதி இல்லாத நிலையில் வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொள்ள முடியவில்லை தான். தொள தொள வென்று தொய்கிறது வேட்டி. ஏதோ இந்த மட்டும் சுற்றிக் கொள்ளவாவது முடிந் ததே என்று மனம் மகிழ்ச்சி யுறுகிறது.

பின்னர் இடக்கையால் வலக் கையைத் தோளிலிருந்து தொடங்கி விரல் நுனிவரை நீவி விட்டுக் கொள்ளுகிறேன். மேலிருந்து கீழும், கீழிருந்து மேலுமாக இவ்வாறே வக்ல காலையும் தொடையின் தொடக்கத்திலிருந்து கணுக் கால் வரை உருவி விட்டுக் கொள்ளுகிறேன். நான்கு தட வைகள் காலையும் கையையும் பிடித்து விட்டுக் கொண்டு அவற்றில் இரத்த ஓட்டத்தை ஏற்படுத்துவதற்குள் இடக் கை அலுத்துக் களைத்துப் போகிறது. சே. இனிமேல் நரம் எதற்கும் லாயக்கில்லை.

தாகம் நாக்கை வரட்டு கிறது. தாங்க முடியாத நீர் வேட்கையால் மேலண்ணம், தொண்டை, நெஞ்சு எல் லாமே வறளுகின்றன. நான் மறுபடியும் சிரமத்துடன் ஓரடி எடுத்து வைக்கிறேன். ஏன் திடீரென்று இப்படி வேர்க்கிறது? தை மாதச் சிலு சிலுப்பில் இப்படி வேர்த்துக் கொட்ட வேண்டிய அவசிய மென்ன?......சே. இது கூட எனக்குப் புரியாமல் போய் விட்டதே. மரண விடாயைப் போல் மரண வேர்வைதான். சாகிற தறுவாயில் உடம்பி லுள்ள அழுக்கெல்லாம் வேர் வையாகவும், சிறு நீராகவும், மலமாகவும் வெளியேறி விடு மென்பது நான் அறியாததா? கெட்ட நீர் இவ்வழிகளில் வெளியேறுமற் போனால், செத்த சிறிது நேரத்துக் கெல் லாம் அது வெளியேறத் தொடங்கு மென்றும், அதன் விளைவாக உடம்பில் வியாபிக் கிற துர்நாற்றத்தால் ஈர்க்கப் பட்டுத்தான் ஈக்களும் எறும்பு களும் இன்னோரன்ன பிற சீவ ராசிகளும் பிணத்தை மொய்க்கமென்றும் நான் கேள்விப்பட்டதில்லையா என்ன?

முகமெங்கும் வேர்வைத் துளிகள் முத்து முத்தாக அரும்பி நிற்கின்றன. பின் கழுத்துப்புறத்தில் துளித் திருந்த வேர்வை வழிந்து ஓடத் தொடங்கியதால் முது கில் ஏதோ ஊர்கிறாற்போல் ஒரு குறுகுறுப்பு பரவுகிறது. நான் முதுகை நெளித்துக் கொள்ளுகிறேன். பனியன் மார்புப்பக்கங் கூட ஈரித்துப்

போய்த் தெப்பலாய் நனைந்து விடுகிறது. பனியன் உடலோடு உடலாக ஒட்டிக் கொள்ளுகிறது. தொடையிலிருந்து வியர்வை வழிந்தோடி முழங்கால் வழியே இறங்குகிறது.

சின்னவனாயிருக்கையில், உப்புசமும் உடல் வீக்கமுமாக, துர்நீரால் ஊதிப் போயிருந்த எனக்கு என் தகப்பனார் வேது பிடித்து விட்டதும், தலையோடு கால் கனத்த கம்பளிகளால் மூடப்பட்டு, சாராய விளக்கின் மேலே நான் நாற்காலியில் அமிர்ந்திருக்க, எனக்கு இப்படித்தான் வேர்த்துக் கொட்டித் தரையெல்லாம் வேர்வை சிற்றாறு போல் வழிந்தோடியதும், 'போறும்ப்பா' என்று நான் முறையிட்டதும், 'இருடா, படவா! அரை மணியாவது மூட்டில் இருந்தால்தாண்டா நல்லது. இல்லேன்னா வேது பிடிச்சுக்கிட்டு பிரயோசனமில்லேடா' என்று அப்பா அதட்டி விட்டு, எங்கே நான் போர்வைகளைத் தள்ளி விட்டு ஓடிவிடுவேனோ என்று எனக்குக் காவலாக என் பக்கத்திலேயே நின்றதும் எனக்கு இப்போது ஞாபகம் வருகின்றன. மாசற்ற அந்த அன்பை நினைத்தாலும் என் கண்கள் கலங்குகின்றன. என் தந்தை என்னை நேசித்ததற்கு எந்த வகையிலும் குறையாதவாறு நானும் என் பிள்ளைகளை நேசித்தேன்; நேசிக்கிறேன். ஆனால், இந்தப் பிள்ளைகள்! நான் என் தகப்பனாரின் மேல் காட்டிய நன்றியிலும், பாசத்திலும், மரியாதையிலும் நாலில் ஒரு பங்கு கூட இவர்கள் என்னிடம் காட்டுவதில்லை. நாம் நம் பெற்றோரை இன்று எவ்வாறு நடத்துகிறோமோ அப்படித்தான் நம் குழந்தை குட்டிகள் நாளைக்கு நம்மை நடத்தும் என்று சொல்கிறார்களே, அது என்னைப் பொருத்தவரை எவ்வளவு பொய்த்துப் போய் விட்டது. சேச்சே. இதைத்தான் முன்வினைப் பயன் என்றும் கரும வினை என்றும் சொல்லுகிறார்களோ, நல்லவனாக வாழ்கிறவன் வாணாள் முழுவதும் துன்புறுவதையும், தீயவனாக வாழ்கிறவன் எல்லா வசதிகளுடனும் குறையின்றி இன்பமாக வாழ்வதையும் பார்க்கையில் நம் ஹிந்து நன்னெறி நூல்களில் கூறப்படும் முற்பிறவி, மறு பிறவி, கரும வினை ஆகியவற்றையெல்லாம் நம்ப வேண்டித்தான் வருகிறது.

வேர்வை ஆறாய்ப் பெருக, தாகமும் தொண்டையை வரட்டுகிறது. தற்செயலாகக் கடிகாரத்தைக் கவனித்து நான் திடுக்கிடுகிறேன். பதினொன்றேமுக்கால், இந்தப் பதினைந்து நிமிட நேரத்தில் நான் மொத்தம் நான்கைந்து எட்டுக்களே எடுத்து வைத்திருக்கிறேன்! இந்தப் பெரிய அறையின் கோடியில் வைக்கப்பட்டிருக்கிற தண்ணீர்ப் பானையை நெருங்குவதற்குள்

பொழுது விடிந்துவிடும் போலிருக்கிறதே.

மீனாட்சியைக் கூப்பிட்டால் தானென்ன? உடம்பிலிருந்து பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிற வேர்வையைத் துடைத்துவிட்டு அவள் குடிக்க நீரும் கொடுப்பாளே. அத்துடன் தன்னைக் கூப்பிடாமல் கட்டிலிலிருந்து இறங்கி நடந்ததற்கு என்னைக் கடிந்து கொள்ளவும் செய்வாள்.

இன்னும் சிறிது நேரத்தில் சாகப்போகிற நான் போகிற நேரத்தில்கூட அவளை அழைத்துத் தொந்தரவு கொடுப்பது சரிதானா? எனக்கு வாழ்க்கைப்பட்ட இவள் என்னிடம் வந்து சேர்ந்ததிலிருந்தே எனக்காக உழைத்த வண்ணமாக இருக்கிறாள். மூச்சுப் பிரிகிற வேளையில்கூட இவளை எழுப்பி ஏவி வேலைவாங்குவதா? தூங்கட்டும்.

தாகம் நாக்கை வாட்டுகிறது. நான் இன்னும் இரண்டு எட்டுக்கள் எடுத்து வைக்கிறேன். போகின்ற நேரத்தில் மீனாட்சியின் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டு உயிரைவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று இந்தப் பாழும் மனசு அடித்துக்கொள்ளுகிறது. அவளை எழுப்பலாமா? வேண்டாம். அவளை எழுப்பினால் அவள் தண்ணீர் கொடுக்க மறுத்து, வெந்நீரல்லவா கொடுப்பாள்? அதனால் எப்படியாவது அந்தப் பானையருகே சென்று அதிலிருந்து



## நீங்காத நினைவே...

உன் நினைவாக நான்
இங்கு இருப்பேன்
என் நினைவாக நீ
அங்கு இருப்பாய்
உன் கனவாக
நானங்கு இருப்பேன்
என் வினையாக நீ
இங்கு இருப்பாய்.
நானங்கு வந்தால்
நீயாரை நினைப்பாய்?
கண்முன்னே கண்டால்
கனவென்ன ஆகும்?
நீ இங்கு வந்தால்—என்
நினைவெங்கு போகும்?
நீ முன்னிருந்தால்
வினை உன்னிலொடுங்கும்!
நீ அங்கேயே இரு
நான் இங்கேயே இருக்கிறேன்.

"சித்ர"

நாலு குவளைத் தண்ணீரையாவது விடாய் தீரக் குடித்துவிட்டுப் பிறகு திரும்பி வந்து கட்டிலருகே நின்று அவளை எழுப்புவோம். ஆனால், பானையருகே போய்ச் சேருவதற்குள்—அல்லது தண்ணீரைக் குடிப்பதற்குள்—அல்லது குடித்துவிட்டுத் திரும்புவதற்குள் உயிர் போய்விட்டால் என்ன செய்வது? மீனாட்சியின் மடியில் தலைவைத்துப் படுத்தபடி அவளது புனிதக் கண்ணீர் என் உடலை நனைக்க, நிறைவோடு உயிரை விடுகிற மகிழ்ச்சி எனக்குக் கிடைக்காமல் போய்விடுமே ...அப்படி ஒன்றும் ஆகாது. இன்னும் கொஞ்சம் விரைவாக அடி எடுத்து வைத்தால் அந்தப் பானையை ஒரே நிமிடத்தில் அணுகிவிடலாம். அதிலிருந்து மளமளவென்று நாலு குவளைத் தண்ணீர் குடிக்க எவ்வளவு நேரமாகப்போகிறது? அதுவரை எப்பாடு பட்டாவது இந்த உயிரைப் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

அட, அப்படியே உயிர் போய்விட்டால்தான் என்னவாம்? எப்படியும் உயிர் போன பிறகு மீனாட்சி என் மீது கண்ணீரைக் கொட்டப் போகிறாள். உயிர் போய்க் கொண்டிருக்கையிலேயே, தன்னை விட்டுப் போய்விடும் நிலையிலிருக்கிற என் மீது அவள் தன் கண்ணீரைப் பொழியவேண்டுமென்றும், அந்தச் சுகானுபவத்தில் மூழ்கித் திளைக்க வேண்டுமென்றும் ஏனிந்த ஆசை? சே, செத்துக் கொண்டிருக்கையில் கூட மனிதனுக்கு ஆசைகளா?

ஆனால், ஒருவிதத்தில் நான் எவ்வளவோ தேவலை. சிலர் வாய்க்குவாய் 'சாவு வந்தால் தேவலை' என்று நாலுபேர் காதுகேட்க முணுமுணுப்பார்கள். சாவுதான் உலகத்து இன்னல்களுக்கெல்லாம் ஒரு விடிவை ஏற்படுத்துகிறதென்றும் ஆழ்ந்த தூக்கம் தன்னினைவற்ற மயக்கத்தில் மனிதனை ஆழ்த்தி விடுகிற மரணமே அவனுக்கு விமோசனமளிக்கிறதென்றும், அது இன்னும் தங்களுக்கு வராமலிருப்பதற்காக வருந்தி ஏங்குவதாகவும் கதைக்கிற மனிதர்களில் பெரும்பாலோர் சாவு தங்களை நெருங்கிக் கொண்டிருக்கிற நிலையில் எப்படி அடியோடு மாறிப் போகிறார்கள்?

தாங்கள் அரைகுறையாய்ச் செய்து வைத்திருக்கிற சில வேலைகள் முழுமை பெறும் வரையிலாவது தாங்கள் சாகாதிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்றும், உலகத்தின் சின்னச் சின்ன அணுக்களின் அசைவுகள், அசையாமைகள் ஆகியவை முதற்கொண்டு பெரிய பெரிய நிகழ்ச்சிகள் வரை ஆண்டவனின் ஆளுகைக்கும் அவன் போட்டு வைத்திருக்கிற கணக்குக்கும் உட்பட்டவை என்றும், எனவே தங்கள் மறைவால்

குடிமுழுகிப் போய்விடாது என்றும், தாங்கள் இறந்த பிறகும் அதது அதனதன் நியதிப்படி நடக்குமென்றும், தாங்கள் இருப்பதனால் மட்டுமே அந்த நியதியில் எவ்வித மாறுதலேயும் சுய முயற்சியால் தோற்றுவிக்க முடியாதென்றும், இவைபோன்ற இன்னபிற வேதாந்த முழக்கங்களையும் அள்ளி வீசுகின்ற மனிதர்கள் சாவு தங்களை மிக விரைந்து நெருங்கிக்கொண்டிருக்கிற வேளையில் தாங்கள் உடல் வலிமையோடு இருந்த நாளில் முழக்கிய வேதாந்தங்களையெல்லாம் நினைவு கூர்வார்கள் என்ரு எண்ணுகிறீர்கள்? இடையவே கிடையாது. 'ஆண்டவனே, இன்னும் கொஞ் சநாட்கள் இருக்க எனக்கு அருள் செய்' என்றல்லவா மனிதன் வேண்டிக் கொள்ளுகிருன்? அடப்பாவி மனுஷா! 'நாராசம்' என்று தெரிந்தும் அதில் இன்னும் உழலவன்ரோ ஆசைப்படுகிருய்?

நல்லவேளை, நான் அந்த மூடக் கும்பலில் சேரவில்லை. நான் சாகவே விரும்புகிறேன். இந்த இரண்டு மாதங்களாகப் பலதடவைகள் மருத்துவரால் வைக்கப்பட்ட கெடுக்களைத் தாண்டி நான் உயிரோடு இருப்பதே எனக்குச் சலிப்பைத் தருகிறது. ஒன்று முழுமையாக நோயினின்று விடுபடவேண்டும், இன்றேல் அதற்கு உடனே இரையாகி விடவேண்டுமென்று நான் இறைவனை வேண்டாத நாளே இல்லை. ஆனால் என் வேண்டுகோளில் பின்னதே முன்னதைவிட மேலோங்கி நிற்கிறது. ஏனெனில் நான் வாழ விரும்பவில்லை.

என் சாவை வரவேற்று அதற்காகத் தவமிருக்கும் என் பிள்ளைகளை, 'அடேய், நன்றி கெட்ட பயல்களா! நான் பிழைத்துக்கொண்டு விட்டேன் பார்த்தீர்களா? என் சொத்துக்கள் உங்களை வந்தடைய இன்னும் சிறிது காலம் ஆகும்' என்னும் பொருள் ததும்ப ஒரு வெற்றிப் பார்வை பார்க்கிற ஆசை மனத்தின் ஒரு மூலையில், நோயின் தொடக்க காலத்தில், ஓட்டிக்கொண்டிருந்தாலும் அதை உதறி வெல்லுகிற அளவுக்கு என் மனத்தில் ஞானம் பிறந்து ரொம்ப நாளாகிவிட்டது.

இந்தப் பிள்ளைகள் என்னை உதாசினம் செய்வதையாவது சகித்துக்கொள்ள முடிகிறது. என் மனைவிக்கு—தங்களைப் பெற்றெடுத்து, வளர்த்து, தாங்கள் பொழிகிற அலட்சியத்துக்குப் பதிலாக மாசற்ற அன்பையே பொழிகிற மீனுட்சிக்கு—உரிய மரியாதையை அவர்கள் அளிக்காமலிருப்பது தான் என்ருல் தாங்கவொண்ணுததாயிருக்கிறது. அதனுல் தான் சொத்தில் ஒரு கணிசமான பகுதியை மீனுட்சிக்கும் மீதியை என் பிள்ளைகளும் பெண்ணும் சமமாகப் பகிர்ந்துகொள்ளுமாறும் உயி

வெழுதி வைத்திருக்கிறேன். நான் உயிலில் என்ன எழுதியிருப்பேன் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக அன்பில்லாத இந்தப் பிள்ளைகள் தாம் எப்படியெல்லாம் நேரடியாகவும் மறைமுகமாகவும் முயன்றார்கள்! அநாகரீகம் பிடித்தவர்கள். படிக்காத நான் இவர்களைப் போலின்றி—என் பெற்றோரை மிகவும் நேசித்து அவர்களுக்குரிய மரியாதையைக் காட்டினேன் என்பதை இன்று நினைத்துப் பார்க்கிறபோது எனக்குத்தான் எவ்வளவு ஆறுதலாகவும் பெருமையாகவும இருக்கிறது.

நான் உயிலில் எழுதியிருந்ததை வெறும் ஊகத்தின் பேரிலோ அல்லது வேறு எப்படியோ கண்டுபிடித்த இந்த எமகாதகப் பயல்கள் என்மனைவிக்கும் பெண்ணுக்கும் என் சொத்தில் பங்கு கொடுத்தது தங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதைச் சாடைமாடையாக எனக்கு எப்படியெல்லாம்உணர்த்தினார்கள். தங்கள் தாய்க்கு ஒரு கணிசமான தொகையை நான் ஒதுக்கி வைத்தது-தங்களை அவமானப் படுத்துவதாகும் என்று கொக்கரித்தார்கள். என்கண் முன்னாலேயே தாயைக் காக்கின்ற இவர்கள் நான் போன பிறகு அவளை நன்றாக வைத்துக் கொள்ளுவார்களென்ற கூற்றை நான் நம்பவேண்டுமாம். அழகுதான், என் கையால் என் கண்களையே அவித்துக்கொள்ளுவதுபோல் தான்.

என் பெண் கணவன் வீட்டுக்குப் போய்ப் பல நாட்களாகின்றனவாம். இந்தக் குடும்பத்திலிருந்து பிரிந்துபோய் வேறொரு குடும்பத்தோடு சேர்ந்துவிட்ட மக்களுக்கு நான் சம பங்கு எழுதிவைத்தது சரியில்லையாம். எப்படி இருக்கிறது பாருங்கள். என் மூத்த மகள் பாகீரத் நன்றி கெட்ட இந்தத் தம்பிகளை எப்படித் தூக்கிச் சுமந்திருக்கிறாள். பெற்ற தாய்க்கு அடுத்தபடி பெறாத இன்னொரு தாயாக இருந்து, தனக்குப் பிறகு பிறந்த சிறிசுகளையெல்லாம் எவ்வளவு அக்கறையோடும் அன்போடும் பராமரித்தாள். தவறு செய்த இந்தப் பயல்களை நான் தண்டிக்க முற் பட்ட போதெல்லாம் குறுக்கே வந்து விழுந்து அவள் எத்தனை தடவைகள் அவர்களை என்னிடமிருந்து காப்பாற்றி யிருக்கிறாள். தன் தம்பிகளின் தவறுகளை மூடி மறைத்து எத்தனை தடவைகள் அவள் இவர்களுக்காகப் பரிந்துகொண்டு வந்திருக்கிறாள். இந்த வெட்டிப் பயல்களுக்கு வேட்டி முதற் கொண்டு துவைத்துப் போட்டு, கணவன் வீடு செல்லுகிறவரை அவர்களுக்கு வகிடெடுத்து வாரிவிட்ட என் இனிய மகளுக்கு என் சொத்தின் ஒரு பகுதியை நான் எழுதிவைத்தது அபத்தமாம். 'ஏதோ கொஞ்சங் கொடுத்

தால் போதாதோ. எங்களுக்குக் கொடுக்கிற அளவு அவளுக்கும் கொடுக்கவேண்டுமா என்ன' என்று இந்தப் பயல்கள் தங்களுக்குள் பேசி முறுக்கிறார்கள். நன்றிகெட்ட நாய்கள்...சேச்சே...நாய் எவ்வளவு நன்றியுடையது? அதையும் இவர்களையும் ஒப்பிடுவதா? அவர்களைப்பற்றிய சிந்தனையில் நாயைப் பற்றியா நினைப்பது...

தாகம் நாக்கை வரட்டுகிறது. நான் திரும்பி அறை வாயிலைத் தாண்டிக் கூடத்தை நோக்குகிறேன். என் அருமந்தப் பிள்ளைகள் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்பன் பாடுபட்டுத் தேடி வைத்திருப்பவைகளைப் பங்கு போட்டுக் கொள்ளுவதைத் தவிர வேறெந்தப் பொறுப்பும் தங்களுக்கு இல்லை என்பது போல் அவிழ்த்துவிடப்பட்ட காளைகளாய் ஊரை மேய்ந்து வருகிற என் வாரிசுகள் நன்றாகக் கண்ணுறங்கிக்கொண்டிருக்கிறார்கள. இவர்களைப் பெற்ற பாவத்துக்காக அடுத்த பிறவியில் நான் இன்னும் என்னென்ன இன்னல்களையெல்லாம் அநுபவிக்கப் போகிறேனோ, இல்லை, போன பிறவியில் நான் செய்த பாவச் செயல்களின் பயனாக இவர்களையெல்லாம் நான் பெற்றேனோ. போன பிறவியில் நன்றிகெட்ட மகனாயிருந்து என் தகப்பனாரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டேனோ. இல்லாவிடில் நான்—இந்தப் பிறவியில் என் பெற்றோர் மெச்சிய நல்ல மகனாக இருந்திருந்தும்—இப்படிப் பட்ட பிள்ளைகளைப் பெறுவானேன்.

சேச்சே ...... சாகப்போகிற நேரத்தில் ஏன் இப்படி என் குழந்தைகளை நானே வெறுக்கிறேன்? இது கேவலமான அறியாமையல்லவா? விருப்பும் வெறுப்புமற்ற வேதாந்த நிலையில் நின்று மனத்தைத் துன்ப உணர்ச்சிகளற்ற வெறுமையாக்கிக்கொண்டு இறைவனை மட்டுமே நினைத்துத் தொழுகின்ற பரிபக்குவத்தில் நினைக்க வேண்டிய திருக்க, யார் யாரை வெறுப்பது? சேச்சே......என் குழந்தைகளே, அகந்தையாலும் அன்பின்மையாலும் நீங்கள் இழைத்த அநீதிகளையும் காட்டிய அவமரியாதைகளையும் நான் மன்னிக்கிறேன். நீங்கள் மனந் திருந்தி அன்பு நெறியில் செல்ல ஆண்டவன் அருள் புரிவானாக. உங்களைப்போன்ற பிள்ளைகள் உங்களுக்குப் பிறவாமலிருக்கட்டும். என்னிடம் நீங்கள் காட்டத் தவறிய அன்பையும் மரியாதையையும் உங்கள் பிள்ளைகள் உங்களிடம் காட்டுவார்களாக.

தாகம் நாக்கை வரட்டுகிறது. வேர்வை வடிவது கொஞ்சங் கொஞ்சமாகக் குறைவதுபோல் தோன்றுகிறது. பிள்ளைகளிடமிருந்து கண்களைத் திருப்பிய நான் மிகவும் சிரமப்பட்டு இன்னும் ஓரடி எடுத்துவைக்கிறேன்

இன்னும் இரண்டே அடிகள் எடுத்துவைத்தால் போதும்; பானையை அணுகிவிடலாம். ஆனால், ஐயோ, இதென்ன? கால்கள் ஏனிப்படி ஆடுகின்றன? கைகளும் நிலை கொள்ளாமல் வெட வெடவென்று ஆடுகின்றன. தொண்டையின் வரட்சி இப்போது மிகத் தீவிரமாயிருக்கிறது.

தாகம் நாக்கை வரட்டுகிறது. கை கால்கள் மட்டுமின்றி உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை உடம்பே ஆடிக்கொண்டிருந்த நிலையில் நிற்பதுகூடத் தகராறாகிவிடும் போலிருக்கிறது. நிற்பதே முடியாமற்போய் அடியற்ற மரம்போல் சாயவேண்டிய தளர்ச்சியில் அங்கமெல்லாம் பதற நின்றுகொண்டிருந்த நான் நடந்துபோய்த் தண்ணீரைப் பானையிலிருந்து எடுத்துக் குடிப்பதாவது? நடக்கிற காரியமா? அப்படியே தரையில் உட்கார்ந்துகொண்டு மீனாட்சியைக் கூப்பிடுவதுதான் புத்திசாலித்தனம் என்று தோன்றுகிறது. ஆனால் உட்காரவும் முடியவில்லை. நிற்கவும் முடியவில்லை. இதென்ன கோரம்......

தாகம் நாக்கை வரட்டுகிறது. கீழே விழுந்து கபால மோட்சமாகி விடுவோமோ என்று நினைக்கையில் அச்சத்தால் இதயம் படக் படக்கென்று படுவிரைவாய் அடித்துக் கொள்ளுகிறது. 'மீனாட்சி, மீனாட்சி' என்று கூப்பிட முற்படுகிறேன். ஆனால் நாக்கோ புரள மறுக்கிறது. மிகுந்த வலுக்கட்டாயமாக உதடுகளையும் நாக்கையும் அசைக்க நான் எடுத்துக்கொண்ட முயற்சியில், வாயிலிருந்து உருத்தெரியாத குளறல்தான் மிக மெல்லிய குரலில் வெளிப்படுகிறது. உருப்படியில்லாத அந்தக் குரல் என் காதுகளிலேயே சரியாக விழவில்லை. குரல் அந்த அளவுக்குக் கம்மிக் கிடக்கிறது. மீனாட்சியின் காதுகளில் அது விழுந்திருக்காது. கிர்ரென்று தலை சுற்றுகிறது. சின்னஞ் சிறுவயதில் நீண்டநேரம் தட்டாமலை சுற்றிவிட்டு ஒருநாள் நான் நின்றபோது, யாரோ என்னைப் பிடித்துப் பிடித்துத் தள்ளுவதுபோல் என்னைப் பீடித்த கிறுகிறுப்பும், சுற்றியிருந்தவை எல்லாம் சுழலுவதுபோல் தோன்றிய தோற்றமும் இப்போது எனக்கு நினைவு வருகின்றன.

தாகம் நாக்கை வரட்டுகிறது. ஐயோ......நான் விழப் போகிறேன்...விழுந்து கொண்டிருக்கிறேன் ...... குளறக்கூற முடியாதபடி குரல் அடைத்துப் பேசுகிறது.

திடீரென்று, "பாகீ! எழுந்துவந்து அப்பாவைப் பாருடீ." என்ற மீனாட்சியின் ஓலம் என் காதருகே கேட்கிறது. அடுத்த கணம் மீனாட்சியின் மென்மையான அன்புக் கைகள் என்னைப்பற்றித் தாங்கிக் கொள்ளுகின்றன. மீனாட்சி தற்செயலாக விழித்துக் கொண்டாள்

போலும். எனக்குகேற்பட்டிருந்த மரண விடாயும், அதன் விளைவாக நான் பட்டுக்கொண்டிருந்த அவஸ்தைகளும் தூங்கிக்கொண்டிருந்த அவளுடைய உணர்வைத் தட்டி எழும்பியிருந்திருக்க வேண்டும் என்று நான் நினைத்துக் கொள்ளுகிறேன். இந்த நினைவால் என் மனசு புளகித்துப் போகிறது. நல்லவேளை, நான் கீழே விழவில்லை.

தாகம் நாக்கை வரட்டுகிறது. "அப்பா! அப்பா!" என்ற பாகீரதியின் அழுகைக் குரல் என் காதருகில் ஒலிக்கிறது. நான் கண்களைத் திறந்து இருவரையும் பார்க்கிறேன். என் முகத்தில் புன்னகை தவழுகிறது. இருவரையும் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டுமென்ற ஆசையைத் தீர்த்துக்கொள்ள முடியாதபடி என் கண்ணிமைகள் என் வலிய முயற்சியை மீறித் தாமாக மூடிக்கொள்ளுகின்றன.

"என்ன செய்யிறது?" "எதுக்காக எழுந்து நடந்திங்க? பாத்ரூமுக்குப் போறதுக்காகவா?" ஒருகுரல் கூப்பிடக் கூடாதா?" "நாங்க சும்மாக் கண்ணை மூடிக்கிட்டுத்தானே தூங்காமெ படுத்திருக்கிறோம்?" என்று பொங்கிவரும் அழுகையினூடே இருவரும் மாறிமாறிப் பேசுகிறார்கள்.

நான் தண்ணீர் வேண்டுமென்று மிகக் கஷ்டப்பட்டு இடக்கையின் நான்கு விரல்களை உள்மடித்துக் கட்டைவிரலைமட்டும் உதட்டருகே நீட்டிச் சைகையால் உணர்த்துகிறேன். "பாகி! பிளாஸ்க்லே வெந்நீர் இருக்குது பாரு. எடுத்துக்கிட்டுவா."

நான் 'வெந்நீர் வேண்டாம்' என்ற பாவனையில் கையை அசைத்துவிட்டு மிகுந்த சிரமத்தோடு கண்களைத் திறந்து சுவரோரத்தில் வைக்கப்பட்டிருந்த பானையைச் சுட்டிக் காட்டுகிறேன்.

"ஐயோ... உடம்பு சரியில்லா தப்ப பச்சைத் தண்ணியா?" என்று பாகீரதி அதட்டுகிறாள்.

நான் பிடிவாதமாக மறுபடியும் தண்ணீர்ப் பானையைச் சுட்டிக் காட்டுகிறேன்.

மீனாட்சிக்கு இது எனது இறுதி விடாய் என்பது விளங்கிவிட்டது போலும், என் உடம்பில் கசிந்திருந்த வேர்வையை ஒரு துணியால் துடைத்தபடி, "பரவாயில்லை, போடி. போய்ச் சற்று தண்ணியை எடுத்துக்கிட்டுவா... குடிக்கட்டும்." என்று சொல்லிக்கொண்டே விம்முகிறாள்.

இவ்வளவு ரகளையிலும் என் பிள்ளைகளில் ஒரு பயல்கூட விழித்துக் கொள்ளவில்லை. கிடக்கின்றான்கள்......

பாகீரதி வாய் வாயாக ஊற்றிய தண்ணீரை நான் ஆவலோடு பருகுகிறேன்... திடீரென்று வாயிலிருந்த தண்ணீர் தொண்டைக்குக் கீழே இறங்காமல் வாயிலேயே

தங்கிவிடுகிறது. கண்கள் செருகிக் கொள்ளுகின்றன.

"ஐயோ!" என்ற மீனாட்சியின் ஓலமும் அப்பா என்றஎன் இனிய மகளின் அழுகைக் குரலும் வெகு தூரத்திலிருந்து கேட்பவைபோல் மிக மெதுவாக எனக்குக் கேட்குன்றன. என் தலை 'லொடக்' என்று சரிகிறது. அதற்குப்பிறகு எனக்கு எதுவுமே தெரியவில்லை......

---

# கன்னிகையின் குளிர்

வண்ணத் தூரிகை மெல்ல நனைந்தது
வந்தது பெண்ணெனும் ஓவியம்—என்
எண்ணக் கனவுகள் சொல்லிய படியே
இனித்தது! அதில்ஒரு காவியம்!

சின்ன இடையினில் எத்தனை அசைவுகள்
சித்திர மேனியின் நாட்டியம்!—அவள்
கன்ன மிரண்டிலும் கலந்தது செந்நிறம்
கற்பனை யானது பாட்டிலும்!

கொங்கை இரண்டிலும் கோபுர தரிசனம்
அங்கம் பருவ ஆலயம்!—புனித
கங்கை நதிக்குளிர் போல சுகந்தரும்
தளிருடல் எனக்கொரு நூலகம்!

அல்லி விழிகளின் ஆயிரம் பார்வைகள்
அத்தனை யும்அவள் ஆளுகை!—அந்த
முல்லை படர்ந்திடப் போவது வும்,இந்த
மன்னவனின் மன மாளிகை!

புதுவை அமலன்

## மறுவாழ்வு

கருணைக்கடவுளே, உனது படைப்புகள்
ஒவ்வொன்றினுக்கும்
காலம் குறித்தாய்
அவை புத்துயிர் பெற்றிட, நம்பிக்கை கூட்டிட
உன்னுடைய செய்கை தேர்ந்த நற்செய்கை.
விழுந்திடும் சூர்யன், உதயம் உண்டு.
தேய்ந்திடும் நிலவு, பௌர்ணமி உண்டு.
உதிர்ந்திடும் இலைகள், வசந்தம் உண்டு.
தணிந்திடும் கடல், புயலும் உண்டு.
என்னுடை தெய்வமே—
நான் உனை கேட்பது—
ஈனத்தனம் தான்—
எனக்கு நீ தந்தது என்ன?

ஆர். சுவாமிநாதன்

## கழிவிரக்கம்

கச்சிதமாய், கத்தி முனையாய்
கால் சட்டை
கனத்து மினுக்கும் காலணிகள்
கண்களின் வழியே
வண்ணங்கள் தேடி
கடற் கரைச்சரிவில்
உலா வர—
காலை முத்தமிடத் துணிந்த
அலைகளுக்கு பயந்து
நாசூக்காய் நகர்ந்தேன்
மனிதக் கழிவு மிதிப்பட்டது
கடல் அலையோ
கைகொட்டிச் சிரித்தது.

பாலகுமாரன்




பாறைக்குள் தேரை
பனையுள்ளே நீரை
யாரய்யா அறியார் ?
யார்தான் அறிவர் !
பாம்பின்கால் பாம்பறியும்
இது,
வசனம் ! எனக்கோ, விசனம் ! !
நீவி நெளித்து முடித்த கொண்டை ;
நீல விழிகளும் துடிக்கும் கெண்டை ;
ஆவியினைச் சுண்டும் ;
ஆ...... !
ஒன்றல்ல ; இரண்டு...
இரண்டும் ஒன்றுமோ ?
ஒருத்தி குலப்பெண்—
அடுத்தவளோ விலைப்பெண்.
விடுதிக்கு உவமை !
வித்தியாசம் யாரறிவார் ?
ஒய்யாரக் கொண்டைதான்
ஒரச்சுமந்த தாழம்பூ
உள்ளேதான் ஈறும்பேனும் ?
இது,
வசனம் ! எனக்கோ விசனம் ! !
உணர்விற்கும் ஊமைக்கும் போராட்டம் !
உள்ள அறிவிற்கும் போலிக்கும் பெயர்மாற்றம் !
உணர்வின் சுழிப்பிற்கு இலக்கணமா ?
சை-! அது கொடுமை...
திறமைக்குப் போர்வை
தனக்குள் பொய்மை
ஆமைக்கும் முயலுக்கும் போட்டி
வெற்றி யாரடைவர் ?
யாரறியார் ? யாரறிவர் !
முயலுக்கு மமதை ; ஆமைக்குச் சமதை !
கேவலம் ;
இனிமுயல் உறங்குமோ ?
இது,
வசனம் ! எனக்கோ, விசனம் ?

# சுயதரிசனம்

தரிசனத்திற்கு முன் :

படைப் பாளிகளின் அனுபவங்கள் எழுத்தாக மலரும் போது. இலக்கியங்கள் பிறக்கின்றன இலக்கியகர்த்தக்களின் ஆத்மா பேசினுல் அது மகத்தான ஒரு அனுபவமாக ஆகிவிடுகிறது.

தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த படைப்பாளிகளின் ஆத்மாக்கள் இப்பகுதியில் பேசப்போகின்றன.

இந்தச் சுய தரிசனத் தொடரைத் துவக்கி வைக்கும் பொறுப்பை நீண்ட காலமாக மௌனத்தில் லயித்துவிட்ட மௌனியிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. மௌனியின் மௌனமே கலைந்தால் மற்றவர்களும் அசைந்து விடுவார்கள் என்பது நம்பிக்கை அடுத்து யாருடைய சுயதரிசனம் வரும் என்பதைச் சொல்ல இயலாது. ஆனுல் எல்லாப் படைப்பாளிகளுடைய சுயதரிசனங்களுமே கட்டாயம் இடம் பெறும். இந்த மௌனி யின் சுயதரிசனம் தானுகப் பிறந்து விடவில்லை.

திரு. சிதம்பர சுப்ரமணியம் மற்றும் அசோக மித்திரன் ஆகியவர்களின் பக்க பலத் தோடுதான் மௌனியிடமிருந்து இந்த சுயதரிசனத்தைப் பிறப்பிக்கச் செய்ய முடிந்தது.

—நிர்வாக ஆசிரியர்.

## மௌனி

சுயதரிசனம் என்பது உள் நோக்கிப் பார்க்கும் ஒரு வேலை உள் நோக்குதல் என்பது Eternal search ஆகும். வேண்டும் என்று நினைத்து இதைச் செய்வதில்லை. தானுகவே நடந்து கொண்டு தானிருக்கிறது. இந்தத் தேடலின் முடிவு Self Satisfaction தான்; சுய திருப்திதான். இந்த உள்நோக்கில் பல பிரிவுகள் உண்டு. ஆத்மதிருப்தி என்பது கூட இந்தப் பிரிவுகளின் ஒரு முடிவு மட்டும் தான்.

அந்தக் காலத்தில் இலக்கியம் படிப்பதில் ஒரு ஆசை இருந்தது. தேசிய எழுச்சியின் பரபரப்பின் விளைவாகவும் இது நேர்ந்திருக்கலாம். விஞ்ஞானத்தைப் படிப்பதில் இல்லாத ஆத்மதிருப்தி இலக்கியம் படிப்பதில் இருந்தது.

இலக்கியம் என்ருல் என்ன? தன்னுடைய அனுபவத்தை இன்னொருத்தன் தானுக சொந்தமாக்கிக்கொண்டு அனுபவித்தால் எப்படி இருக்கும் என்பதைக் காட்டும் தகுதி இருப்பதுதான் இலக்கியம். அதனுல்தான் ஒருத்தர் எழுதினதை மற்றவர்கள் படிக்க விரும்புகிருர்கள். எங்கள் குடும்பமே காங்கிரஸ் பக்தர்களின் குடும்பம்தான். மகாத்மா காந்தி அப்போது கண்முன் பிரத்யட்சமாக இருந்த போதிலும் மூர்த்தி

வழிபாடு அப்போது ஏற்பட்டு விடவில்லை. விவாதத்திற்குரிய பெரிய மர்மதராகத்தான் அவரும் இருந்தார்.

தான் யார், என்பதை Express பண்ணிப்பார்க்கும் முயற்சிதான் இலக்கியமாகப் பரிணமிக்கிறது.

அந்தத் தேடலின் லட்சியம் தான் சுய தரிசனம். இந்தத் தேடலில் தெளிவு கிடைக்க இலக்கியம் கைகொடுக்கிறது. இலக்கியம் என்பதே தேடலின் வெளிப்பாடுதான். அதில் கிடைக்கும் ஒரு லயம்தான் ஆத்ம திருப்தி. இறுதியில் நிலைப்பது மௌனம்தான். சொற்களற்ற நிலை.

கவி முத்தி யோகியாகிறான் என்பார் கு. பா. ரா. கவிதான் யோகியாகப் பரிணமிக்கிறான் என்பதை இது காட்டுகிறது யோகியினால் இலக்கியவாதிக்கு லாபம் உண்டு. சுய தரிசனம் என்பதற்கே இலக்கியம் தான் ஒரு நல்ல வழியாக இருக்கிறது. யோக சாதனைக்கும் அதுவே வழியாக இருப்பதுதான் இதில் விசேஷம். எனக்கு சமஸ்கிருதம் தெரியாது. ஆங்கில இலக்கியத்தில் கிடைத்த அனுபவத்தின் காரணமாக, மனப் போக்கில் பல விதப்பரிணாமங்களைப் பிரித்துக்கொள்ள துணை கிடைத்திருக்கிறது. டாஸ்டாவஸ்கி கூட இப்படித்தான் பல தடவை சொல்கிறார்.

தெருவில் போகிறவர்கள் எல்லாம் கூட, எல்லா அனுபவங்களையும் சொல்லலாம். ஆனால் அதை இலக்கியமாகச் சொன்னால் மற்றவர்களின் மனதுக்கு, அதே நிலையில் அந்த உணர்வை மாற்றிவிட முடிகிறது. அதுதான் இலக்கியத்தின் சிறப்பு, தகுதி எல்லாம்.

குருடனுக்கு பாலின் கலரைச் சொல்ல முடியாது. ஆனால் எழுத்தின் மூலமாக குருடனின் அனுபவங்களை ஒட்டியே அதை அவனுக்கு உணர்த்திவிட இலக்கியத்துக்கு முடியும்.

இதனால்தான் நாங்கள் Literature Hons ல் அப்போது அதிகமாகச் சேர்ந்தோம்.

மணிக்கொடி காலம் இதற்குக் கை கொடுத்தது. அப்போது எழுதியவர்களிடையே ஒரு குடும்ப நெருக்கம் இருந்தது. ஒருத்தருக் கொருத்தர் எழுதினது பிடிக்கலே என்று சொன்னால் கூட, "என்னமோ எழுதிப் பார்த்தேம்பா. ஆனால் வரலையே" என்று பதில் சொல்லும் மனப் பக்குவம் அன்று இருந்தது. இப்போது அந்த Tolarance எழுதுகிறவர்களுக்கு இல்லையே.

ஆங்கில இலக்கியங்களைப் படிக்கும் போது கிடைக்கிற இன்பம் நாம் எழுதும் போதும் கிடைக்கிறதா என்று பார்த்துக்கொள்வதில் Frank discussion இருந்தது.

வாழ்க்கை வசதி கிடையாத காலம். வேலை வாய்ப்புக்களும் இப்போதைய நிலையைவிடக் குறைச்சல். என்றாலும் Frustration என்பது இருக்காது.

இந்தக் காலத்தில் அது அதிகமாகத் தெரிகிறது.

அந்தக் காலத்தில் ஒருத்தரை ஒருத்தர் கடுமையாக விமர்சித்தால் கூட மன வருத்தங்கள் இதனால் வந்ததில்லை.

பிச்சமூர்த்தி எனக்கு Senior எனக்கு அவரிடம் உள்ள ஈடுபாடு காரணமாக அவரைக் கூட "இதென்ன பேத்தியிருக்கார்" என்று நேருக்கு நேர் சொன்னாலும் பேசாமல் சிரித்துக் கொண்டு போய்விடுவார்.

படித்துக் கொண்டிருந்த காலத்தில் நாமும் சிறுகதை எழுதிப்பார்க்கலாமே - என்ற ஆசைதான் எழுத்துக்குக் கொண்டு போய் விட்டது.

. அதுபோல சிதம்பர சுப்ரமணியம் வீணை வாசிக்கக் கற்றுக் கொண்டார் Easthatic & Artistie Satisfaction தான் இப்படியெல்லாம் செய்ய வைத்தது. இந்தச் சூழ்நிலையில் தான் எழுத்துக்கள் பிறந்தன.

எங்களுக்குள்ளும் உள்ளூரில் 'குரூப்'கள் இருந்தன. அப்போது எழுதிக் கொண்டிருந் தவர்களிடமெல்லாம் "நான் எழுதியிருக்கிறேன் பார்" என்று காட்டியிருக்கிறேன்.

நேராக எடிட்டர்களிடம் கதை கொடுத்தால் கேவலம் என்று கூடப்பட்டது. அதனால் ராமையாவைத் தெரிந்திருந்தும் நேராக நான் மணிக்கொடிக்கு அனுப்புவதில்லை. அவருடைய நண்பரிடம் கொடுத்துத்தான் கொடுக்கச் சொல்வேன் ஸ்டாம்ப் வைத்து அனுப்ப மாட்டேன். போடா விட்டாலும், திரும்ப அனுப்பா விட்டாலும் பரவாயில்லை என்று விட்டு விடுவேன்.

Artist inignation காரணமாகவும், தன்னதைப் போடலேயே என்கிற குறையாலும் பலர் பல குறைகள் சொல்வார்கள். நாணயமில்லாதவன் என்றெல்லாம் திட்டுவதுண்டு மற்ற குறையெல்லாம் இருந்தால் சொன்னால் தாங்குவோம். ஆனால் Artist-னுடைய ஆத்மாவைத் தொட்டால் சும்மா விட மாட்டோம். அதையாரும் தொட்டதும் இல்லை. அதனால் தான் ஒருத்தருக் கொருத்தர் பகையே வந்ததில்லை.

இதைப் பற்றி அதிகமாகச் சொன்னால் இன்பக் கனவு மாதிரி விரிந்து கொண்டே போய்விடும் போலிருக்கிறது இப்போது தோன்றுபவைகளை, முன்பு அனுபவப்பட்டதைவிட நினைத்துப் பார்க்க நன்றாகத்தான் இருக்கிறது.

ஆனால் என்னால் தமிழில் தோன்றுவதை எல்லாம் சொல்ல முடியவில்லை. சமஸ்கிருதத்தினால் கொஞ்சநாள் தள்ளியது. இப்போது ஆங்கிலத்தைக்கொண்டு ஓடுகிறது தனியாகத் தமிழில் நினைக்கிறதை முழுதாகச் சொல்ல எனக்கு முடியவில்லை. அதுதான் என்னுடைய இப்போதைய நிலை.

★

சென்ற இதழ் தொடர்ச்சி.

# அனுபவம்
## EXPERIENCE

### வெ. சாமிநாதன்

இந்த என் உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் கட்டளையிட முடியாது. நீங்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கவோ, வேண்டவோ முடியாது. நான் அதை நிச்சயிப்பவனில்லை. அது அமைந்த, அமையும் விதத்தில் அதை ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தத்தில் நான் இருக்கிறேன். என் உலகத்தைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது போல, அம் முயற்சியில் உங்களையும் உங்கள் உலகங்களையும் புரிந்து கொள்ள நான் முயற்சிப்பது போல, நீங்களும், என்னையும் என் உலகத்தையும் புரிந்து கொள்ள முயற்சிக்கவேண்டும். நாமெல்லாம் அச்சு வெல்லங்களாக ஆக்கப்படவில்லை. அவ்வாறாக ஆக்கப்பட்டிருப்பதாக நினைக்கும் அல்லது ஆக்க நினைக்கும் அரசியல் சித்தாந்தங்கள், "மக்கள்! மக்கள்!" என கோஷமிடும் demogogues, பத்திரிகைகள், ஸ்தாபனங்கள், அரசாங்கங்கள், 'ஜனநாயக' கொள்கைகள் நம்மிடையே உண்டு. இக் கோஷங்கள், சித்தாந்தங்கள் நம்மிடையே ஒரு பவித்ரஸ்தானத்தைப் பெற்றுவிட்டன. நாம் அச்சு வெல்லங்களாக வாழ்வதில் பெருமை அடைகிறோம். அது நமக்குப் பல சௌகரியங்களைக் கொடுப்பதால். போகட்டும், நான் சொல்லவந்த விஷயத்தின் இழை அறுகிறது. என் உலகம், நான் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் நிர்பந்திக்க முடியாது என்று சொன்னேன்.

என் உலகத்தில், அதில் நான் கண்ட உங்களின், உங்களிடமிருந்து அறிந்த உங்கள் உலகத்தின், அர்த்தங்களின், அநுபவத்தின், வாழ்க்கையின் பல பரிமாணங்களைப் பற்றிச் சொல்லவேண்டும். இப்பரிமாணங்களைப் பற்றியும், குணங்களைப் பற்றியும்கூட, நீங்களோ, நானோ ஏதும் கட்டளையிட உரிமை நமக்கு இல்லை. பரந்த வெளியின் மோனத்தில், அதன் ராக்ஷஸத்தில் நான் சிக்குண்டதும், செக்காவின் குதிரை வண்டிக்காரக் கிழவன் குதிரையிடம் அழுது தன் சோகத்தைத் தீர்த்துக்கொண்டதும் ஒரு பரிமாணம், a dimension in feelings, emotions.

ஒருநாள் என் காரியாலயத்தின் மாடியில் அதன் பால்கனியில் நின்றுகொண்டிருந்

தேன். நல்ல பலத்த மழை பெய்து ஓய்ந்திருந்தது. சாலையின் இருமருங்கிலும் சிறுசிறு வாய்க்கால்களாக மழைநீர் ஓடிக்கொண்டிருந்தது. அங்கங்கே மழைக்காக கடைகளின் சார்ப்புகளில் ஒதுங்கியிருந்தவர்கள் வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தனர். மடிந்த மழையின் சாரலும் சிறிது சிறிதாக மறைந்தது. மாலை தங்கவெயிலின் குளிப்பில் எல்லாமே, கடைகள், சிறுவாய்க்கால்கள், வீட்டுச் சுவர்கள், வெற்றுவெளி, எல்லாமே தங்கத்தில் குளித்து, அருவியின் பக்கத்தில் நீர் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருக்கும், இன்னும் புட்வை மாற்றிக் கொள்ளாத பெண்ணை எனக்குத் தோன்றிற்று. பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த எனக்கு கீழிருக்கும் பூமி, குளித்துக் கொண்டே செல்லும் மனிதக் கூட்டங்கள், தங்கமாக ஜொலிக்கும் வானவெளி எல்லாவற்றிலும் நான் ஒரு காட்சியை, கண்டு கொண்டிருக்கவில்லை. நான் கேட்டு அனுபவித்துக் கொண்டிருந்தேன். சூரியனின் பொன் கிரணங்கள் தந்தியாக மீட்டும் ஓர் இசை வானவெளியில் நிரம்பி வழிந்து வாய்க்கால்களாக ஓடுவதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அந்த சங்கீதத்தின் சப்த உரு, அதன் இழை ஓட்டம் எனக்குத் தெரியும். ஆனால் அது என்ன ராகம், அது தன்னைக் கட்டுப்பத்டுத்திக்கொள்ளும் தாளம் என்ன, கர்நாடக சங்கீதமா, ஹிந்துஸ்தானியா அல்லது பெதோவனின் ஏதாவதொரு ஸிம்ஃபனியா, வால்ட்ஸா (Waltz) என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு அக்கரை இல்லை. அவசியம் இல்லை. ஏனெனில் என் அநுபவத்திற்கும் இக் கேள்விகளுக்கும் உறவு இல்லை. ஆனால் அது சங்கீதம்தான்.

இந்த சங்கீதத்தின் சப்த ரூபம் உங்களுக்கு இனம் காணமுடியாததாக இருக்கலாம். உங்களுக்குப் பழக்கமான உருவில்தான் இருக்க வேண்டும் என்று என்ன நிர்பந்தம்? உங்களுக்கு பழக்கமான சப்த உரு உங்கள் பக்கத்தில் இருப்பவருக்குப் பழக்கமற்றதாக இருக்கலாம். உங்களுக்குப் பழக்கமான சப்த உருதான் சங்கீதம் என்று ஏதும் தெய்வ சாந்நித்யம் உண்டா? ஏற்பட்டு, சம்பிரதாயமாக ஆகிவிட்ட உங்கள் கர்நாடக இசையைப் போன்று ஒரு system ஆகிவிட்ட சங்கீத முறைகள் எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாது. இன்று வரை உள்ள systemகளின் எண்ணிக்கையோடு சங்கீத உலகம் தன்னை வரையறை செய்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் சட்டம் விதிக்க முடியுமா? "இன்றுவரை உள்ள" என்று நீங்கள் சட்டம் விதிக்கும்போது, இன்று நீங்கள் வாழ்வதின் காரண

மாக, இன்று நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும் நிர்பந்தம் காரணமாக என்பதை நான் உணர்கிறேன். உங்களுடைய இன்றைய வாழ்வின் சந்தர்ப்பத்தை தெய்வ சாந்நித்யமாகக்கொண்டு, காலத்தையும், உங்களைத் தவிர்த்த உலகத்தையும் உங்கள் குறைபாட்டுச் சிறைக்குள் அடைக்கும் உங்கள் அகங்காரம் எவ்வளவு மூர்க்கத்தனமானது என்பது உங்களுக்குத் தெரிவதில்லை. மேலும் எந்த சங்கீதமும் இன்று உள்ள system–களில் ஏதோ ஒன்றின் பிறப்பாகத்தான் இருக்கவேண்டும் என்று ஏதும் தெய்வ சாந்நித்யம் உண்டா? அப்படியானால் உங்கள் கர்நாடக சங்கீதமும், மற்றும் உலக சங்கீத முறைகள் அனைத்தும் ஏதோ ஒரு ஆதிப்பிறப்பான முறையின் பிறப்புகள் தாமா?

உங்களுக்குத் தெரியாததாகவே இருக்கட்டும், பழக்கமில்லாததாகவே இருக்கட்டும். எந்த சங்கீத முறையின் சார்பும் இல்லாததாகவே இருக்கட்டும். இது சங்கீதம் தான். இதையும் நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். இதன் அர்த்தத்தையும் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். உங்களுக்குப் பழக்கமான கர்நாடக சங்கீத எல்லைக் கோட்டிற்குள் நின்று கொண்டு அல்ல. எந்த சங்கீத எல்லைக் கோடுகளையும் மறந்துவிட்டு நான் உங்களுக்கு அறிவிக்கும் உலகத்தையும், என் அநுபவத்தையும், அந்த அநுபவத்தின் வெளிப்பாடாக, உங்களுடன் பரிவர்த்தனை கொள்ளும் கருவியாக, குறியீடாக, நான் அளிக்கும் அதன் சங்கீத உருவத்தையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் இதில் நான் உங்கள் நிர்பந்தத்திற்கு இணைய செய்யக்கூடியது ஏதும் இல்லை. என் அநுபவம், நான் கண்ட உலகம், அநுபவத்தின் போது நான் உணர்ந்த 'நான்'. நான் இப்போது அளிக்கிறேனே அந்த சங்கீத ரூபமாகத்தான் எனக்குக் கிடைத்தது. அதையே நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். உங்கள் நிர்பந்தத்திற்குப் பணிவதோ, உங்களுக்குப்புரியுமாறு செய்யும் முயற்சிகளோ, எனக்கும் என் உலகத்திற்கும், என் அநுபவத்திற்கும் உண்மையல்லாத ஒன்றை என் பரிவர்த்தனையில் பிறப்பித்துவிடும். எனவே, என் உலகத்தைப் பற்றி நான் அளிப்பதுதான் விதி. அதுதான் என் பாஷை. அதுதான் என் அநுபவம். அதுதான் நான். உங்களுக்கு இப்போது உடன் புரியாது. இருந்தாலும் கேட்டுக்கொள்ளுங்கள். அதுதான் நீங்களும் கூட.

இது புதிய விஷயம் இல்லை. நான் ஏதேச்சாதிகாரம் செலுத்துவதாக நீங்கள் எண்ணக்கூடாது. நீங்கள் பல விஷயங்களில், புரிந்து கொண்டு உங்களைக் கட்டுப்




என்னுடைய குருஜி அடிக்கடி சொல்வார்: "கும்பலுக்கு எல்லாமே ஒரு வேடிக்கை தான்." அவர் ரொம்ப அனுபவஸ்தர். சென்னைப்பட்டணத்தை அவருடைய கூர்மையான திருஷ்டி மூலை முடுக்குகளில் எல்லாம் அலசியிருக்கிறது. அவர் எக்ஸிபிஷனில் பறக்கவிடும் பாக்கு விளம்பர பலூனைப் பார்க்கும் கும்பலையும், ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்டில் சேலை உரிந்துவிட்ட காட்சியை வேடிக்கை பார்க்கும் கும்பலையும், மூர்மார்க்கெட்டில் மோடி வித்தைக்காகக் கூடும் கூட்டத்தையும் வைத்துச் சொல்கிறார் போலும் என்று அப்போது நான் பேசாமலிருந்தேன். ஏதாவது குறுக்கே பேசினால் கடுப்பாக ஏதாவது சொல்லிவிடுவார். ரொம்ப 'ஷார்ப்'பானவர். வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ளாமல் நான் சும்மா இருந்து விடுவேன்.

ஒருநாள் சென்டிரல் லைப்ரரி பக்கமாக பொழுது போகாமல் புத்தகம் மேயப்போனேன். வெளியே ஒரு விளம்பரப் பலகையில் இலக்கிய விசாரம் நடப்பதாகப் போட்டிருந்தது. அடி சக்கை, அட்வர்டைஸ்மெண்டோடு இலக்கிய விசாரம் நடக்கிற அளவுக்குதமிழ்த் திருநாடு டெவலப் ஆகியிருக்கிறதே என்று மேலே போய் உட்கார்ந்தேன்.

அச்சமயம் ஒரு பெரிய எழுத்தாளரை கூண்டில் ஏற்றியிருந்தார்கள். பெரிய எழுத்தாவர் என்றால் கன பரிமாணங்களை நீங்கள் பாட்டுக்குக் கற்பனை பண்ணிக்கொள்ளக் கூடாது. இலக்கியத்தில் பெரியதாக சாதித்தவர்.

நான் போன சமயத்தில் கேள்விக்கணைகள் பறந்து கொண்டிருந்தன.

"வியட்நாமிலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அட்டூழியத்தை எதிர்த்து நீங்கள் ஏன் எழுதவில்லை."

எழுத்தாளர் "அதைவிடத் தன் மனசை எதுவோ ஒன்று அதிகமாகத் தாக்கியதால் அதைப்பற்றி எழுதினேன்; நான் வியட்நாமுக்குப்போன தில்லே. என்னை நீங்கள் அனுப்பி வைப்பதாயிருந்தால் கூட ஏகாதிபத்தியத்தின் அட்டூழியம் எனக்குப் போதுமான அளவு உறைத்தாலொழிய நான் எழுதமாட்டேன்என்று" வினயமாகத் தெரிவித்துக் கொண்டார்.

கூடியிருந்தவர்களில் முக்கால்வாசி முகங்களுக்கு ஒரு களவாணியைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டமாதிரி ஓர் எக்களிப்பு. உதடுகளில் இளக்காரம்.

'ஹோ, நீர் என்னய்யா எழுத்தாளன். வியட்நாம் பிரச்சனையைப்பற்றி துளிக்கூட ரத்தம் கொதிக்காத எழுத்தாளன்' என்ற மாதிரி ஒரு பாவனை.

"நீர் தேசியப் போராட்டம் நடந்த காலத்தில் என்ன செய்து - கொண்டிருந்தீர்?" அடுத்த வஸ்தாது குறுக்கிட்டார்.

"ஐயன்மீர், நான் அப்போது பள்ளிக்கூடம் படித்துக் கொண்டிருந்தேன்."

"ஓஹோ, போராட்டத்தில் கலந்து கொண்டதில்லையா?"

"இல்லே, என் பாட்டி அப்போதெல்லாம் என்னை வெளியே அனுப்ப மாட்டாள். கோஷ்டம் போடுவது, கொடி பிடிப்பது என்றால் என்னை லேசில் விடமாட்டாள்."

"உமது பாட்டி?"

"ஆம், எனது பாட்டி"

முன்வரிசைப்பிரமுகர்களின் முகத்தில் வெற்றிப் புன்னகை அரும்பிற்று. நமது எழுத்தாளர் தனது பாட்டிக்கு எவ்வளவு அடக்க ஒடுக்கமானவர் என்று கண்டறிந்த ஆனந்தம்.

"அந்தத் தேசியப் போராட்டத்தைக் குறித்து நீர் அப்புறமாகக் கதை ஒன்றும் எழுதவில்லையா?"

"இல்லே, அதற்குள் போராட்டம் முடிந்து விட்டது. அப்புறமாக எழுதினால் நடந்து விட்ட கல்யாணத்துக்கு மேளம் வைப்பது போல என்று சும்மா இருந்து விட்டேன்."

"மார்க்ஸ் என்ன சொல்லியிருக்கிறான் தெரியுமா?" என்று ஒருவர் குறுக்கே புகுந்தார்.

அவருக்குரிய இடத்தை ஆக்கிரமிக்கும் யோசனையோடு இன்னொருவர் பாய்ந்தார்.

"கலை மக்களுக்காகவா, கலை கலைக்காகவா?"

"கலை என்பது என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் என்பது யார் என்று புரிந்து கொள்ள வேண்டும். கலைக்குப் பயன் ஆனந்தம், ஆனந்தம் ஆனந்தத்திற்காகத்தான் இருக்கும். ஆனந்தமே அந்தரததிலே தொங்காது. அது மனிதனுக்குத்தான்ஏற்படும் காங்க்ரீட் ஸ்லாப்புக்கோ, கட்சிக் கொடிக்கோ ஏற்படாது." என்ற ரீதியில் அவர் பதில் சொல்லிக் கொண்டு போனார்.

"இந்த சமுதாயச் சீரழிவை திரை கிழித்துக்காட்ட, அதல பாதாளத்தில் புதையுண்டிருக்கும் அடித்தட்டு வர்க்கத்தினரை மேலே உயர்த்த நீர் ஒன்றும் எழுதவில்லையா?"

"நான் எழுதியவுடனே சமுதாயச் சீரழிவுத்திரை கிழிந்துவிடுமா?" என்று அவர் பவ்யமாகக் கேட்டார். அந்த விஷயம் அதுவரை அவருக்குத் தெரியவில்லை, என்பது ஆச்சரியமே!

நான் என் தொடைமேல் ஒரு காகிதத்தை வைத்து கழுதைப் படம் ஒன்று போட்டுக்கொண்டிருந்தேன், எனக்கு ரொம்ப நீளமான கொட்டாவி வந்தது. தலை இடிப்பது மாதிரி இருந்தது.

குருஜிக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒருவர் ஒருமுறை எங்கேயோ சொன்னார். "சமுதாயத்தை உயர்த்த நான் ஜாக்கி இல்லை" ஜாக்கி என்றால் ரேஸ் கோர்ஸ் ஜாக்கி அல்ல. கார் வீலைத் தூக்கும் ஜாக்கி. அது ஞாபகம் வந்தது. குபுக்கென்று சிரித்து விட்டேன். கூடியிருந்தவர்கள் எல்லோரும் என்னை ஒருமாதிரியாகப் பார்த்தார்கள். என் சித்த ஸ்வாதீனத்தைக் குறித்து அவர்கள் சந்தேகப்படுகிற மாதிரி தோன்றிற்று.

கைக்குட்டையால் வாயைப் பொத்திக்கொண்டு எழுந்து வெளியே வந்தேன். நடக்க நடக்க சிரிப்பு பிய்த்துக் கொண்டு கிளம்பிற்று.

ஜாக்கி—என்ன பொருத்தமான உதாரணம்! குருஜியின் நண்பர் கிராதகப் பேர்வழி தான்.

சிரிப்பைச் சமாளித்துக் கொண்டேன்.

என்னமோ எனக்கு எழுத்தாளரை மிகவும் பரிதாபத்தோடு திரும்பிப் பார்க்கத் தோன்றிற்று.

ஏண்டா பேனு பிடித்துக் கொண்டிருக்கிறாய்? வியட்நாமைப்பற்றி, தேச விடுதலையைப்பற்றி, சமுதாயச் சீரழிவைப்பற்றி எழுதாத நீ இன்னும் உயிர் வாழலாமா? மூட்டைப்பூச்சி மருந்து டிமாண்ட் ஆகிவிட்டதா? என்று பதினைந்து இருபது பேர்வழிகள் உள்ளுக்குள் கேட்டுக் கொண்டிருப்பார்கள் போலிருக்கிறது.

பாவம் எழுத்தாளர்! இப்படியெல்லாம் தமிழிலக்கியத்தில் பிற்காலத்தில் சட்டஷரத்துகள் உற்பத்தியாகும் என்று ஆரம்பத்திலேயே தெரியாமற் போய்விட்டது. இல்லாமற் போனால் இந்த ஜோலிக்கு வந்திருப்பாரா?

ஆமாம், இங்கே என்ன இலக்கிய விசாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்? என்று திரும்பி வரும்போது கேட்டுப் பார்த்துக் கொண்டேன். ஒன்றும் விளங்க வில்லை.

இலக்கியமானது கலவி போல, தனியாக அறைக்குள் மனசுக்குள் தனக்குள்தான் அனுபவிக்கத்தக்கது என்று எங்கேயோ பஸ் ஸ்டாண்டில் ஒரு சமயம் சொல்லக் கேட்ட

ஞாபகம்.

குருஜி சொன்னது கவனம் வந்தது. "பையா, கும்பலுக்கு எல்லாமே ஒரு வேடிக்கை தான்" எவ்வளவு வாஸ்தவ மான வார்த்தை?

"சரி. கும்பலில் போய் ஏன் நாம் சிக்கிக்கொள்ள வேண் டும்."

'நமக்கும் கும்பலைக் கொஞ் சம் வேடிக்கை பார்கத் தோன்ருதா?'

"அப்படியானால் சரி. சரிக் குச் சரி." என்று தீர்மானித் துப் புறப்பட்டேன்.

எதிரே எனக்குப் பரிச்சய மான எழுத்தாள நண்பர் ஒரு வர் வந்தார்.

"என்ன பாக்ஸர், போன தடவை சால்ட் கொட்டாரத் திலே அந்த ஹெவி வெய்ட் ஆதிகேசவனை என்னமா அடிச்சிங்க?" என்று ஐஸ் வைக்கத் தொடங்கினர்.

"நிறுத்தும், நீர் எழுத் தாளன் தானே?"

"ஆமாம்"

"கதை எழுதியதுண்டா?"

"ஊம்..."

"வியட்நாம் பற்றி?"

"ஊ ஹூம்"

"பஞ்சத்தைப் பற்றி?'

"......?"

"படியரிசி பற்றி?"

"......?"

"ஏகாதிபத்திய சுரண்டல், பிற்போக்கு வாதம், பூர்ஷ்வா சதி பற்றி?"

எழுத்தாள நண்பருக்குச் சந்தேகம் வந்து விட்டது. உதட்டைப் பிதுக்கியவாறே கேஸ் ரொம்ப மோசம் என்று சிலேடை தொனிக்கத் தலை யாட்டினர்.

"இவற்றைப்பற்றி யெல் லாம் நீர் எழுதாதிருக்கும் பட் சத்தில் இன்றே போய் எழு தும், இல்லையேல் பொழுது விடிந்தால் உம்மைக் கூண்டில் ஏற்றி விசாரிப்பார்கள்." என்று எச்சரித்து விட்டு நான் பஸ்ஸைப் பிடிக்க ஓடினேன்.



# அயோக்கி

நகுலன்

ஒரு வெள்ளிக்கிழமை சீனுவும் அவன் தாயார் சரஸ்வதி அம்மாளும் வெளித் திண்ணையில் மிகவும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மணி 10–30 நல்ல வெய்யில் தெருவில் ஜனசஞ்சாரமில்லை. ஆகாயம் நல்ல நீலம். ஒரு வெள்ளை மேகம்கூட இல்லை. சீனுவின் தகப்பனார் சங்கரய்யர் கடைத்தெருவுக்குப் போயிருந்தார். அதனால்தான் ......சீனு தொடர்ந்து சிந்திக்கவில்லை. ஒருவேளை அதிகமாகச் சிறு கதைகள், நாவல்கள், கவிதைகள் படிப்பதின் விளைவாக இருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால்அதுஅப்படியில்லை என்பதும் அவனுக்குத் தெரியும். உண்மையைவிட, வாழ்க்கையைவிட, வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது அப்படி ஒன்றும் விலகி நிற்கவில்லையே. சரஸ்வதி அம்மாள் குரல் அவனைத் தட்டி எழுப்பியது. "என்னடா சீனு, கதை ஏதாவது எழுதத் திட்டமிடுகிறாயா? ஒன்றும் வேண்டாம்" என்றாள். அவன் ஒன்றும் சொல்லவில்லை. ஒருமுறை அவன் அம்மா சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது. "சீனு, இது ஒன்றும் வேண்டாம். ஒருவரும் படிக்கமாட்டார்கள். நாலு பேர் கூட வாழ்ந்தால் இதெல்லாம் அப்படித்தான் இருச்கும். உன் அப்பாவைத்தான் பாரேன்... ..." என்று சொளல வந்தவள் நிறுத்திக்கொண்டாள். அவனும் "ஏன்?" என்று கேட்கவில்லை. நாலுபேர் சேர்ந்தால் எந்தத் துறையிலும் என்ன நடக்கும் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் வாழ்க்கை கசக்கிறது என்று வாழ்க்கையை உதறிவிட முடிகிறதா என்ன? அவன், தெருவில் ஒரு நாய் எலும்புந் தோலுமாக நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு ஓடிப்போய்க்கொண்டிருப்பதை அர்த்தமில்லாமல் பார்த்தான். சரஸ்வதி அம்மாவா, உனக்குக் காப்பி என்றால் பிடிக்குமே. குடித்துவிட்டு வரலாம்" என்றாள். காப்பி வழக்கத்தைவிட, நன்றாக இருந்தது. மறுபடியும் வாசலில் வந்து உட்கார்ந்தார்கள்.

வாசல் கதவைத் தள்ளிக்கொண்டு ஒரு "மாமி" வந்தாள். பருமனுமில்லாமல்,

ஒல்லியாகவுமிராமல் ஒரு தேக வாக்கு. ஒரு வெள்ளை ரவிக்கை, நாலைந்து இடங்களில் ஒட்டுப் போட்டுத் தைத்த ஒரு பச்சைப் புடவை. நல்ல சிவப்பு.

வந்தவள் சரஸ்வதி அம்மாவிடம் "இதுதானே சங்கரய்யர் வீடு" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"நீங்கள்தானே சரஸ்வதி அம்மா?"

"நீங்கள்தான் சீனுவோ? நீங்கள்தானே காலேஜில் M. A க்குப் படிக்கிறீர்கள்?"

"நீங்கள் யார்? தெரியவில்லையே."

"போன மாதம் திருச்சிக்குச் சிதம்பரய்யர் பிள்ளை கல்யாணத்திற்குப் போயிருந்தேன். அங்கு உங்கள் பெண் ராதையைப் பார்த்தேன். அவளும் என் மாமா—உண்டியல் வியாபாரம் நடத்துகிறாரே வேணுவய்யர்—அவர் பெண் லக்ஷ்மியும் ஒன்றாகப் படித்தார்கள். உங்க பெண் இப்ப ஸிலோனிலே இருக்காளாமே. அவள் புருஷனுக்குக்கூட பெரிய வேலை கவர்ன்மெண்டில் வருமான வரி இலாக்காவில்—என்று சொன்னாள். அவ பையன்க ரண்டுபேரையும் பார்த்தேன். நல்ல புத்திசாலிக் குழந்தைகள் ஐயோ, ஆனா அடிக்கிற லூட்டி. உங்க பெண்ணுக்கு ஆனாலும் பொறுமை ஜாஸ்திதான், மாமி. அவகிட்டக்கூடச் சொன்னேன். உங்களைப் பார்த்தாச் சொல்றேன்னு."

சீனு இடைமறித்தான். "ஏன் மாமி, இதெல்லாம் சொல்றதுக்கா இந்த வெயில்லெ வந்தேள்."

சரஸ்வதி அம்மாள் ஒன்றும் பேசவில்லை. தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த மாமி "அம்பி, நீ அப்படித்தான் கேட்பாய். உனக்கென்ன தெரியும்?"

சீனுவுக்கு அவள் உரிமைப்—பேச்சு பிடிக்கவில்லை. ஆனால் தெருவைப் பார்த்துக் கொண்டே இருந்த சரஸ்வதி அம்மாள் அந்த அம்மாவைப் பார்க்காமலேயே "சொல்லுங்கள், மாமி!" என்றாள்.

"என்னவோ மாமி, நம்ப பெரியவா சும்மாவாசொன்னா? பெண்ணாய்ப் பிறப்பதே பாவம். அதுவும் பெண்ணாப் பிறந்து வாழ்க்கைப்பட்டு, வாச்சவன் சரியாக அமையாட்டா, போரும், போரும்! கேளுங்கோ, அம்மா! நீங்க கேள்விப் பட்டிருப்பேள்—திவான் நாகசாமி ஐயரைப் பத்தி, அவா தம்பிக்குத்தான் வாழ்க்கைப்பட்டேன். இவரும் மூக்கும் முழியுமா நன்னாத்தான் இருந்தார். படிப்புத்தான் வரலை. கார்ப்பரேஷன்லெ வேலையா இருந்தார். ஆனா சொத்து இருந்தது. ஆனா, மனுஷன் குடிக்கிறதுன்னா மாமி இப்படியா குடிப்பான். நீங்க கூடப்பார்த்திருப்பேள். ஒரு குளோஸ் கோட்டும் மூக்குப் பொடி கலர்லெ ஒரு குல்லாய்; சில சமயம் நன்னாக் குடிச்சிட்டுக்

கார்ப்பரேஷன் லாரிலெ அக்கிரகாரத்திலெ வீட்டு வாசல்லெ வந்து இறங்குவார். அக்கிரகாரத்திலெ இவரைக் கண்டா எல்லாருக்கும் பயம். வைய ஆரம்பிச்சா வாயிலெ என்ன வார்த்தை தாண்டு இல்லெ. மாமி, இவரொட நான் பட்டது, 10, 15 இல்லெ 25 வருஷம் அவதிப்பட்டேன். அவர் சாகிறபோது இப்ப இருக்க வீடுதான் மிச்சம். பின்னெ நான் கஷ்டப்பட்டது. என் பெண்ணை ஒரு நாலு கிளாஸ் படிக்க வைச்ச கஷ்டம், அவர் அண்ணா செத்த பிறகு, அந்தக் குடும்பம் பாம்பேக்குப் போயிடுத்து. சொந்தக்காரர் ஒத்தரும் திரும்பிப் பார்க்கலெ. கடைசியா அவளை இந்த ஊரிலெ உள்ள 'கோமள விலாஸ்' ஹோட்டல் ஹெட் குக்குக்குத்தான் கொடுத்தேன்.

அவளுக்கு இஷ்டமில்லெ. பின்னெ என்ன பண்றது மாமி? வேணு ஐயர்கிட்ட சொன்னதும் — அதுதான் சரின்னார். அவர் கலியாணத்திற்கு வரவில்லை. சேஷனும் இந்த வீட்டுக்கு ஆசைப்பட்டுத்தான் என் பெண்ணுக்குத் தாலி கட்டினான். எப்படியும் ஒரு ஆண் துணை வேண்டியிருக்கே, மாமி. இப்பெல்லாம்னா பெண்கள் வேலைக்குப் போறா. அவள் அப்படிப் படிப்பிலும் சுட்டியில்லெ.

ஆக்கம்

பின்னெ என்ன பண்றது? இப்ப இரண்டுபேருக்கும் என்னைப் பிடிக்கவில்லை. அவனுக்கு ஒரு அதிகப் பத்தாப் போயிட்டேன்; அவளுக்கு நான் அவளுக்குத் தலைகுனிவு ஏற்படுத்திட்டேண்டு, இன்னிக் காலமெ ஒரு புடவையை எத்தனை நாள்தான் மாத்தி மாத்திக் கட்டிக்கிறதுன்னு சொன்னதும் அவன் பண்ணின கூத்து; அவர்கூடத் தேவலை. தங்கம் வாயைத் திறந்து ஒருவார்த்தை பேசலை. அந்த அம்மாள் தன் புடவைத் துண்டால் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

சரஸ்வதி அம்மாள் ஒன்றும் பேசாமல் எழுந்து போய் பூஜை அறையில்கிடந்த நீலப் புடவையைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்து விட்டு "போய் வாருங்கள், மாமி" என்றாள். அந்த அம்மாள் மீண்டும் தன் கண்ணைத் துடைத்துக்கொண்டு புடவையை வாங்கிக்கொண்டு சென்றாள்.

சீனு "வெறும் வேஷம்."

"சீனு, இருக்கலாம். ஆனா வேஷம் போடாட்டா நம்ப ஒத்தராலெயும் ஒருநாள்கூட உயிரை வெச்சிண்டு இருக்க முடியாது."

அப்பொழுது கேட்டைத் திறந்துகொண்டு தபால்காரன் ராமசாமி வந்தான்.

அம்மாவிடம் மணிஆர்டர் பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டு "இப்பப் போறாங்களே அந்த அம்மாவை உங்களுக்குத் தெரியுமா?" என்று சரஸ்வதி அம்மாவிடம் கேட்டான்.

"ஏன்?"

"எங்க தெருவிலெதான் இருக்காங்க. தினம் வீட்லெ வந்து கதை கதையாச் சொல்லி அழுவாங்க. பலவாட்டி வீட்லெ சண்டை பிடிச்சுக்கிட்டு இப்படித்தான் வெளியே போயிடுவாங்க."

அம்மா ஒப்புப் போட்டுக் கொடுத்த ரசீதையும் வாங்கிக் கொண்டு அவன் போனான். அவன் போனதும் கடைத் தெருவிலிருந்து திரும்பி வந்த சங்கரய்யர் தன் மனைவியிடம் "பெரியவன் பணம் அனுப்பி விட்டானா! சரி, பீரோவிலெ வை" என்று பூஜை அறை தாண்டி சமையல் அறையில் இருந்த பானைத் தண்ணீரில் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பி வந்தவர் "சரசு! பூஜை அறைக் கொடியில் இருந்த உன் நீலப் புடவை எங்கே?" என்றார்.

சரஸ்வதி அம்மாள் ஒன்றும் சொல்லவில்லை.

அப்பொழுதுதான் சீனுவுக்கு அவன் தகப்பனாருக்கு வேலை போய்ச் சரியாகப் பதினைந்து வருஷம் ஆயிற்று என்பது ஞாபகம் வந்தது.

# பாதிநாள்

'கொட்டிக் கொண்டு போயேன்'டா'
　　'தட்டு கொண்டு வாயேன்'மா'
'தொட்டுக் கொள்ளப் போடேன்.மா'
　　'கட்டை விரலைத் தொட்டுக்கொள்'
'பள்ளிக் கூடம் போ'றேன்'மா'
　　'பாதை பார்த்துப் போய்வாடா'
'கையில் கட்டித் தருவாயா?'
　　'கையைக் கனக்கும் வேண்டாம்'டா'
'மத்தி யாணம் வருவேன்'மா'
　　'வெயிலில் வந்து சாகாதே'
'மத்தியானம் வருவேன் நான்'
　　'பத்துப் பானை தேய்ப்பதற்கா?'

ஞானக்கூத்தன்

# ஒத்தி சிந்தனை

[பலதரப்பட்ட கேள்விகளை, எது பற்றியும், மனம் விட்டுக் கேட்கலாம். அதே போலவே பதில்களும் அமையும்.] —ஆசிரியர்

கே: தன்னங்காரம் எனக்கில்லாமல் போக வேண்டும் என்று நான் நினைப்பதே ஒரு தன் முனைப்பாகி விடும் போலிருக்கும் போது, தன்னகங்கார மற்ற நிலை என்பது மனித வாழ்க்கையில் சாத்திய மானது தானா?

கோ. சுந்தரம், சென்னை-17.

ப: தன்னை அறிதல் என்பது வேறு. தன்னகங்காரம் என்பது வேறு. தன்னைப் பற்றிய அறியாமை மிகுகிறபோது தான் தன் அகங்காரம் வருகிறது. மனித வாழ்க்கை சாத்தியமில்லாமல் போவதே தன்னகங்காரத்தினால் தான். தன்னை அறிய அறிய தன்னகங்காரம் அழியும்.

தன்னகங்காரம் சில சமயங்களில் தவிர்க்க முடியாதது. குழந்தைகளைப் பூச்சி காட்டுவதற்கு பெரியவர்கள் முகமூடி அணிந்து கொள்வது மாதிரி, அறிவாளிகளும், ஞானிகளும் தன்னகங்காரம் கொண்டவர்கள் போலக் காட்டிக் கொள்வார்கள். அது ஒரு விளையாட்டுத்தான். அகங்காரிகள் அறிவாளிகளாக இருப்பதில்லை.

கே: 'செத்தபாம்பு' போன்ற கதைகள் ஞான ரதத்தில் வெளிவருமானால் உங்கள் பத்திரிகையை வாங்குவதை நான் நிறுத்தி விடுவேன். இனிமேல் இதுமாதிரி கதைகள் வெளிவராது என்று உத்திரவாதம் தருவீர்களா?

எஸ். ராஜன், சேலம்.

மாட்டேன். நீங்கள் இனிமேல் ஞான ரதத்தை வாங்க வேண்டாம். முடிந்தால் வாங்காமலிருந்து பாருங்கள். எனக்குத் தெரியும் செத்த பாம்பு மாதிரி கதைகள் வருகிறதா என்று பார்ப்பதற்காக

நீங்கள் தான் முதலில் வாங்குவீர்கள் என்று.

இலக்கிய உலகத்தில் இந்த மாதிரி மிரட்டல்களுக்கு மரியாதை இருக்காது, நீங்கள் ஏதோ கோபத்தில் இது மாதிரி எழுதியிருப்பீர்களேயானால், இப்போது நிதானமாக யோசிக்கும் போது உங்களுக்கே வெட்கமாக இருக்கும்.

ஒரு பத்திரிகை வாங்குவதும் வாங்காமலிருப்பதும் உங்களுடைய சொந்த விஷயம். இதை நீங்கள் எனக்கு எழுத வேண்டிய அவசியமில்லை. 'தயவு செய்து வாங்குவதை நிறுத்திவிடாதீர்கள். இது மாதிரியெல்லாம் இனிமேல் வராது' என்று வாக்குறுதி அளிப்பதைவிட வேறு ஏதாவது செய்யப் போகலாம் நாங்கள். கோழைகளும் கூழைக் கும்பிடுப் பேர்வழிகளும் இலக்கியம் வளர்த்ததாக எங்கேயும் நாம் பார்த்ததில்லை. இந்த விளையாட்டிற்கெல்லாம் வேறு பத்திரிகைகள் இருக்கின்றன. அங்கே வைத்துக்கொள்ளுங்கள்.



கே: செக்ஸ் இருந்தால் தான் சீரியஸ் இலக்கியம் என்பது ஞான ரதத்தின் கோட்பாடா?

ப: நீங்கள் செக்ஸ் என்பதற்கு என்ன அர்த்தம் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது. இலக்கியம் வெறும் இலக்கியமாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு கோட்பாடுகளேதும் எங்களுக்கு இல்லை. செக்ஸ் இல்லை என்ற ஒரு காரணத்திற்காக, எப்படி எழுதியதெல்லாம் இலக்கியம் என்று ஏற்றுக் கொள்ள முடியாதோ, அதே மாதிரி செக்ஸ் இருப்பதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது.

செக்ஸை ஒரு கவர்ச்சியாகக் கொள்ளாமல், ஒரு பிரச்சனையாகக் கொள்வதை நாங்கள் வரவேற்கிறோம். வறுமை ஒரு பிரச்சாரமாகக் கொள்ளப்படாமல் அதனை ஒரு வாழ்க்கைப் பிரச்சனையாகப் பார்ப்பது மாதிரி செக்ஸையும் பார்ப்பதில் தவறில்லை. செக்ஸ் உணர்ச்சியைப் புறக்கணித்து விட நாங்கள் யாரும் சாமியார்கள் அல்ல. சாமியார்களும் கூடத் தங்களைப் பொறுத்தவரைப் புறக்கணிக்கலாமே தவிர எல்லாருடைய இடுப்பு

வேட்டிக்கும் காவல் நிற்கக் கூடாது, அது நடை முறை சாத்தியமும் அல்ல; நாகரீக மும் அல்ல

செக்ஸ் மனவீனம் (Sex Avertion) எனபதே செக்ஸ் சம் பதப்பட்ட ஒரு வியாதிதான்?

கே: தன்னலம் பேணுதல் என்பது ஒரு பாவச் செயலா

நல்லுசாமி, கோவை.

ப: தான் என்பது தான் மட்டுமில்லை என்ற உணர்வு இருக்கு மானால் தன்னலம் பேணுதல் ஒரு பாவச் செய லாகாது.

கே: விபத்துக்கள் தவிர்கப் பட முடியாதவைகள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

மணியன், சென்னை-4.

ப: ஆம். தவிர்கப்பட்டவை களுக்கு விபத்துக்கள் என்று நாம் பெயரிட முடியாது.

நேர்ந்த பிறகுதான் விபத் துக்கள் என்று நமக்குத் தெரி கின்றன. விபத்துக்களைத் தவிர்த்துத் தவிர்த்துக் கடை சியில் ஒரு விபத்தின் மூலம் புதிய எல்லைகளைத் தொடுவது தான் வாழ்க்கை. விபத்துக் கள் அழிக்க மட்டும் செய்வ தில்லை. ஆக்கவும் செய்கின் றன.

கே: குடும்பக் கட்டுப் பாட் டுப் பிரச்சாரத்தினால் குழந் தைகள் குறைவாகப் பிறக் கின்றன என்று நிஜமாகவே நீங்கள் நம்புகிறீர்களா?

ப: நாளடைவில் இந்தப் பிரச்காரத்தினால் பலன் ஏற் படும் என்றே நம்புகிறேன்.

கே: இந்தியாவில் பொது வாழ்க்கை என்பது இந்த அள வுக்கு மலினப் பட்டுப் போன தற்கு அடிப்படையான கார ணங்கள் என்ன என்ன என்று தாங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

ஜெயபால், மதுரை.

ப: உண்டு. இந்தக் கேள்வி பொதுவாக இருப்பதனால் நானும் பொதுவாகவே சுருக்கமாகப் பதில் சொல்லி விட்டேன். இந்தியப் பொது வாழக்கையின் வீழ்ச்சி பற்றிய இன்னும் ஸ்தூலமான கேள்வி வருமேயானால் இதைப்பற்றி விரிவாகச் சொல்ல முடியும்.

கே: முறையான கல்வி யென்று நாங்கள் நம்பிப் படித் துக் கொண்டிருப்பதெல்லாம் ஆழ்ந்து பார்த்தால் முறை யற்ற கல்வியே என்று சென்ற இதழில் கூறியிருக்கிறீர்களே அப்படியானால் முறையான கல்வி என்பது இந்தப்பரந்த உலகில் எந்த நாட்டிலுமே இன்று வரை ஏற்படவில்லை என்கிறீர்களா?

S. ஹரிஹரன், சிவகங்கை

ப: நம்முடைய நாட்டி லுள்ள முறையான கல்வி பற்றிய குறைபாடுகளையும் நான் குறிப்பிட்டிருந்தேன் என்றாலும், ஒரு படைப்பாளி என்பவனுக்கு எந்த முறை யான கல்வியும் பயன்பட வில்லை. சுய சிந்தனையின் அடிப் படையிலே படைப்பு நிகழ்வ தால் இவனுடைய சுயேச்சை யான பார்வைக்கு முறைகள் என்று சொல்லப்படுபவை

எல்லாமேஏதோ ஒருவிதத்தில் எங்கேயோமுரண்படலாம்.நம்முடைய முறையான கல்வி அநேகம் பேருக்கு, அநேகச் சமயங்களில் அதற்கு முரண்படுகிறது என்றேநான் சொன்னேன். இந்தப் பரந்த உலகில் எங்கே யாவது முறையான கல்வி இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. பார்க்க வேண்டிய அவசியமும் எனக்கு வரவில்லை. அது எங்கேயும் இருக்கிறது. படைப்பாளிக்கு அதுஒன்றுதான் அடிப்படைத் தேவை என்ற வாதத்தில்அது எந்தக் அளவுக்கு முறையற்றது—படைப்புக்கு — என்றேன். முறையான கல்வி எங்கும் உண்டு.

கே: அன்பு வைப்பது என்பது எல்லோரும் ஆசைப்படத்தக்க ஒன்றல்ல. நெருப்புக் கனலை அகலாது அணுகாது நெருங்குவது போலத்தான் அன்பெனும் கனலையும் அணுக வேண்டும் என்றுநான் நினைக்கிறேன். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

கனலி, சென்னை-36

நீங்கள் எதன் மீது அன்பு வைக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது. நெருப்பின் மீது அன்பு வைத்தால் நீங்கள் சொல்கிற மாதிரித்தான் இருக்க வேண்டும்.

அன்பு, ஆசை, காதல் இது எல்லமோ ஒரு உணர்ச்சியைப் பற்றிய பல மனோ நிலைகளின் வெளிப்பாடுகள் தான். இவை ஒரு மனிதனுடைய சுய மதிப்பையும், சுய அன்பையும் மீறுகிற பல சமையங்களில் பெருமையும் படுகிறது. சிறுமையும் படுகிறது. இவை எல்லா வற்றையும் Balance செய்கிற அறிவு குறையாமலிருக்கும் போது அது நிதானமாகவும் இருக்கிறது. நிலையாகவும் இருக்கிறது.

கொலைகளும், யுத்தங்களும் கூட அன்பினாலும் காதலினாலும் ஏற்பட்டதுண்டு. இது ஒரு Relative term அணுக வேண்டுமா அகல வேண்டுமா என்பதை எல்லாம் ஒரு ஆதாரத்தின் மீதுதான் பேசவேண்டுமே ஒழிய பொதுவாகச் சொல்வது தவறான பொருளையும் தந்துவிடும்.

கே: கதைகள் எழுதும் போது குறியீடுகள் (Punctuations) கவணிக்கப்பட வேண்டுமா?

அண்ணாமலை விசுவநாதன், திருப்.

ப: அது படைப்பவனின் விருப்பத்தைப் பொறுத்தது. ஜேம்ஸ் ஜாய்ஸிடம் அதெல்லாம் இருக்காது என்று சொல்கிறார்கள். மனதின் நினைவுக்கு கமாவா, முற்றுப்புள்ளியா?

கே: நீங்கள் உங்கள் ரசனைக்குப் பிடித்த படைப்பாளிகள் என்று கருதும் பிறமொழி படைப்பாளிகள் யார் யார்? தமிழ் படைப்பாளிகள் யார்?

ப: நன்றாக எழுதும் யாருமே எனக்குப் பிடித்த படைப்பாளிகள்தான். பெயர்களைச் சொல்வதன் மூலம் பல பெயர்களை விட்டு விட நேரும் என்கிற அச்சம் எனக்கு எப்போதும் இருப்பதால் நான்

பெயர்களைச் சொல்வதில்லை. நான் படிக்கும்போது படைப்பாளியின் பெயரை மறந்தே படிக்கிறேன்,

கே: நான் தமிழ்ப் புத்தகங்கள் படிப்பதில்லை என்று நீங்கள் ஒரு கூட்டத்தில் பேசினீர்களாமே! பின் எதற்காக தமிழில் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?

அ. ரங்கராஜன், சென்னை-5

ப: தமிழ்ப் புத்தகங்களை நான் படிக்கிற அளவுக்கு, நான் படித்துப் பயன் பெறுகிற அளவுக்கு இங்கே யாரும் எழுத மாட்டேனென்கிறார்கள் என்ற குறையிலேயே நான் சொன்னேன்.

என்னை விடவும் திறமைக் குறையானவர்களுடைய புத்தகங்களைப் படிக்கும்போது என்னுடைய முயற்சி தடைப்பட்டு, என்னுடைய திறமை குன்றிப் போகுமே என்கிற பயத்தினால் நான் படிக்காமல் இருக்கிறேன்.

'நான் தமிழில் படிப்பதே இல்லை' என்று தமிழைப்படிக்காமலே பெருமைக்குக் கூறிக் கூறிக்கொள்கிற 'தந்த கோபுர வாசி'களை இந்தத் தரையில் இழுத்துப் போடுவதற்காக நான் தமிழில் எழுதுகிறேன். அப்படிப் பலரை நான் தமிழ் வாசகர் உலகில் இழுத்து விட்டிருக்கிறேன். அந்த மாதிரி என் நண்பர்கள் என்னையும் இழுக்க வேண்டும் என்கிற ஆசையில் அப்படிச் சொன்னேன் தமிழில் எழுதி விட்டார்கள் என்பதற்காக இங்கே வருகிற குப்பைகளையெல்லாம் கட்டி என்னால் மாரடிக்க முடியாது.

கே: சுத்தமான தமிழில் நீங்கள் ஒரு கதையாவது எழுதியதுண்டா? இல்லை என்றால் ஏன்?

சுத்தத்தமிழன், கும்பகோணம்.

ப: சுத்தமாக இந்த உலகத்தில் ஒரு பிள்ளைகூடப் பிறந்ததில்லை. சுத்தத்தமிழா? நான் எழுதினால் எந்த அசுத்தமும் சுத்தமாகி விடுகிறதே! பிறந்த குழந்தையின் உயிர்தான் சுத்தம்; உடம்பு அல்ல அதுமாதிரி பிறக்கிற கதைகள் இலக்கியச் சுத்தமாக இருந்தால்போதும் மொழிச்சுத்தம் அவ்வளவு முக்கியமில்லை.

தமிழ்மட்டும் சுத்தமாக இருந்து அதில் இலக்கியமில்லை என்றால் சும்மாக் கழுவி, பூவிட்டுப் பொட்டும் வைத்துக் கிடத்தியிருக்கும் பிணத்திற்கு அது ஒப்பாகும்.

என்னுடைய கதைகள் நஞ்சுக் கொடியோடு, நாற்ற நீரோடு, உதிரக் கவிச்சியோடு, உரத்துக் குரலுடன் பிறக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

கே: எனக்கு உங்கள் எழுத்தைப் பிடிக்கும். உங்களையும் உங்கள் பேச்சுக்களையும் பிடிக்க மாட்டேனென்கிறது; ஏனிப்படி?

கவிதா, காயல்பட்டினம்.

ப: மிக்க நன்றி. நான் சம்பந்தப்பட்ட ஏதோஒன்றாவது உங்களுக்குப் பிடித்திருக்கிறதே! பிடிக்கிறது? பிடிக்க

வில்லை என்ற வார்த்தைகள் எல்லாம் அர்த்தமற்றவை. நாம் தற்காலத்தவர்என்பதால் எங்கேயோ ஒரு இடத்தில் சந்தித்துத்தான் ஆகவேண் டும். அதுதான் முக்கியம்.

கே: ஃபிராய்டு மாதிரி மனித வாழ்க்கையின் சகல நிலைகளையும் நிர்ணயிப்பது செக்ஸ்தான் என்று நீங்களும் நம்புகிறீர்களோ?

நீலகண்டன், திருவாரூர்.

ப: உண்மையைத் தேடிச் செல்ல ஒரே பாதைதான் இருக்கிறது என்று நான் எங் கேயும்சொல்லவில்லை. ஃபிராய் டின் நிர்ணயிப்பும் நம்முடைய வளர்ச்சிக்கு உதவுகிறது என்று நம்புகிறவன் நான். ஃப்ராய்டைமுற்றூகஏற்கவோ அல்லதுமறுக்கவோ எனக்குத் தகுதி இருப்பதாக நான் கருத வில்லை.

கே: நீங்கள் புலனடக்கம் உடையவர்களைமதிப்பீர்களா? அல்லது புலனனுபவமிக்க வரை மதிப்பீர்களா?

ப: இரண்டு பேரையும் மதிப்பேன். இரண்டின் பேரா லும் வேஷங்கட்டி ஆடுகிற பொய்யர்களை நான் மதிக்க முடியாது. புலன்னனுபவ மிக்கவர்கள் என்று உங்கள் கண்களுக்குத் தெரிபவர்கள் அதில்பலர்புலனுணர்வு அற்ற வர்களாகவும் இருக்கலாம். புலனடக்கம் என்பதும் ஒரு புலனுணர்வுதான். புலனடக் கப் பிரச்சாரம் மிகவும்அசிங்க மானது. நிர்ப்பந்தம் மிகவும் கொடுமையானது. நீங்கள் புலடனக்கம் என்று எதை யெல்லாம் சொல்லுகிறீர்கள் என்று தெளிவாகமல், சாதா ரண அர்த்தத்தில் லாகிரி உபயோகிப்பது, உல்லாசம் விரும்புவது, செக்ஸ் உறவு களில் திளைப்பது—என்பவற் றைக் குறிக்கிறீர்கள் என்று எடுத்துக்கொண்டு பதில் சொல்லுகிறேன்.

கே: என்னிடம் அட்டண் டர்களாகக்கூட வேலை பார்க் கத் தகுதி இல்லாத சிலர் எம். ஏ. படித்தவர்களாக இருக்கிறூர்கள் என்கிறீர்களே. கல்வியினுல் வரும் அகங்காரத் தைச் சாடுவதற்கு இப்படி ஒரு அகங்காரம்தேவைதானு?

வி. செல்வராஜ்,
அருப்புக்கோட்டை.,

ப: இப்படி நான் சொல் லும்போது அட்டண்டர்வேலை பார்ப்பவர்களைக் குறைவாக வோ, எம். ஏ. படித்தவர்களை இழிவாகவோ கருதிச் சொல்ல வில்லை. Master of Arts என்று பட்டம் வாங்கிய ஒருவன், கலைத்துறையில் எதையும் படைக்கிறவனுக இல்லாமலி ருப்பது மட்டுமல்லாமல், படைக்கிறவனுக்கு உதவி யாளனுகப் பணி செய்யக்கூட லாயக்கில்லாதவனுக இருக் கிறுன் என்று அந்தக் கல்வி முறையில் உள்ள 'கலை வெறு மை'யைக் குறிப்பிடக் கூறி னேன். இப்படி நான் கூறியது என் அகங்காரத்தினுல் அல்ல. படைப்புக்கு உதவாத,சற்றும் பயன்படாத,ஒரு டம்பத்தைப் பார்த்துச் சிரிக்கிற படைப் பின் அகங்காரமாயிருக்கலாம் அது. நிச்சயம் என்னுடை அகங்காரமல்ல அது.

# ஞானரதம்

## சந்தா இயக்கம்பற்றிய

# அறிவிப்பு

அன்புள்ள வாசக நண்பர்களுக்கு,

ஞானரதத்திற்கு சந்தா இயக்கம் ஒன்று துவக்கப் பட்டுள்ளது. குறைந்தது 2000 சந்தாக்களை யாவது இந்த மாதத்தில் சேர்ப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம்.

ஞானரதத்தின் எல்லா வாசகர்களுமே பதிவு பெற்ற சந்தாதாரர்களாகவும் இருக்கவேண்டும் என்பதே நமது குறிக்கோள். அதுதான் ஞானரதம் போன்ற சுயேட்சை யான பத்திரிகைக்கான — பலமான அடிப்படையுமாகும் அதற்கு வசதியாக இருக்கவேண்டும் என்றே கையடக்க மான தொகையான ரூ. 5/- ஆண்டுச் சந்தாவாக நிர்ண யிக்கப்பட்டு, அடக்க விலைக்கே அளிக்கப்படுகிறது.

எனவே எல்லா ஞானரதம் வாசகர்களுமே, மற்ற வர்கள் வந்து நினைவு படுத்தும் வரை காத்திராமல் இந்தப் பொது வேண்டுகோளையே தத்தமக்கான தனிக் கோறிக்கை யாக ஏற்று, இன்றே தங்கள் சந்தாவை அனுப்பி வைக்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் சந்தாவை அனுப்பியபின், ஞானரதத்தின் ஒவ்வொரு வாசகரும் குறைந்தது இரண்டு நண்பர்களை யாவது சந்தாதாரராகும்படியும் செய்யுங்கள்.

ஞானரதத்துக்கு நன்கொடைச் சந்தா அளிக்க விரும் பும் நமது நெருங்கிய நண்பர்கள் ரூ. 50/-க்கு மேல் தங்கள் விருப்பப்படி நன்கொடை ஆயுள் சந்தாவாக அனுப்பலாம்.

சந்தாக்களை 'நிர்வாக ஆசிரியர், ஞானரதம், சக்தி இல்லம், சென்னை-36. என்ற முகவரிக்கு மணியார்டர் மூல மாகவோ செக்மூலமாகவோ அனுப்பலாம்.

அன்புள்ள,

தேவ. சித்திரபாரதி.

நிர்வாக ஆசிரியர்.

# இந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை மட்டும்

அசோக மித்திரன்

"இந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை மட்டும் நான் வராமல் சமாளித்துக் கொண்டு விடுகிறீர்களா!" என்று அவள் மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொண்டாள். அதை வேண்டுகோள் என்று சொல்லிவிட முடியாது. அவளுடைய குரலில் லேசாகத் தொனித்த அலச்சியத்தை மறைக்க அவள் அதிகம் பிரயாசை எடுத்துக் கொள்ளவில்லை. அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. அவன் உடனே அவனுடைய நாடகக் குழுவுக்கு ஒரு புதுக் கதா நாயகியைத் தேட ஆரம்பிக்க வேண்டும்.

அவள் புன்னகை புரிந்தபடிதான் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் விவரமறியாத குழந்தையினுடையது போலத்தான் பிரகாசித்தன. சிவந்த பூரித்திருந்த அவளுடைய உதடுகள் அவளுடைய பல்வரிசைமின்ன சிறிது இடைவெளி விட்டிருந்தன. அவளை மறுதளிக்க முடியாது என்று அவள் நன்கு தெரிந்து கொண்டவளாக இருந்தாள்.

அவன் ஏதோவாறு முனகினான். அவளுக்கு எஜமானனாகவும் ஆசானாகவும் அவளுடைய எதிர்காலத்தைச் சமைப்பவனாகவும் பல தருணங்களில் அவளுடைய பெண்மைக்கு உரியவனாகவும் அவன் இருந்த மூன்று வருட காலத்தில் அவளை அவ்வளவு அழகுடையவளாகவும் திண்ணமுடையவளாகவும் அவன் கண்டதில்லை. மூன்று வருடங்கள் முன்புதான் அவனுடைய கதாநாயகியும் அந்த ஸ்தானத்துடன் கூடிய எல்லாமாகவும் இருந்த இந்திரா ஒரு நாள் மெல்ல 'அடுத்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் நானில்லாமல் பார்த்துக் கொள்கிறீர்களா?' கேட்டிருந்தாள். அப்போதே அவன் இன்னும் ஒரு வார காலத்திற்குள் அவனுடைய குழுவிற்கு ஒரு புதுக் கதாநாயகியைத் தேடிப் பிடித்தாக வேண்டும் என்று உணர்ந்திருந்தான். அப்போதுதான் எவ்வளவோ காலத்திற்குப் பிறகு அவனுடைய ஒரு நாடகம் வெற்றியாக ஏற்கப்பட்டு அவனோடும் அவனுக்காகவும் உழைத்துக் கொண்டிருந்தவர்கள் மிக உற்சாகத்துடன் இருந்தார்கள். சமூகவட்டாரங்களில் அவன் பெயர் அடிபட

தொடங்கியிருந்தது. பத்திரிகைகள் சிறிது விஸ்தாரமாகவே அவன் நாடகத் துறைக்குப் பெரும் தொண்டு செய்து வருவதாக எழுத ஆரம்பித்திருந்தன. ரேடியோக் காரர்கள் ஒரு கருத்தரங்குக்கு அவனை அழைத்திருந்தார்கள். சில அமெச்சூர் நாடகக் குழுக்கள் தங்களுடைய நாடகங்களுக்கு அவனைத் தலைமை தாங்க அழைத்தன. ஒரு அறைதை ஆசிரமத்துக் காரியதரிசி நன்கொடைக்காக அவனிடம் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். இப்படியெல்லாம் உருவாகிக் கொண்டிருக்கும் தருணத்தில்தான் இந்திரா அவனை நேருக்கு நேர் முகம் பார்த்து ஒருஞாயிற்றுக்கிழமை மட்டும் நாடகத்திற்கு அவள் வரமால் இருக்க அனுமதி கேட்டாள். அப்போதே அவனுக்கும் தெரியும், அவளுக்கும் தெரியும் அவனுடைய உலகம் குலைந்து விட்டது, சிதைந்து விட்டது, பாழாகி விட்டது என்று, அவனுடைய கதாநாயகி குழுவை விட்டுப் போய் அவன் உலகம் பாழாவது அதுதான் முதல் தடவை என்றில்லை. ஆனால் இந்திரா அப்படி ஒரு நாடக பாணிச் செயலை நாடக அரங்கிற்கு வெளியே அவனுக்குச் செய்வாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவளே அப்படிச் செய்தாள், அவள் செய்தால் யாரும் செய்யக் கூடும், உண்மையில அப்படித் தான் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நாடகக் குழுவிலேயே அந்த மாதிரி செய்ய மாட்டாதவனும் செய்ய முடியாதவனும் அவன் ஒருவன் தான். காரணம் அவன்தான் கதாநாயகன், அவன்தான் டைரக்டர், அவனேதான் சொந்தக்காரன்...

அவன் தெளிவாக ஒரு வார்த்தை உச்சரிக்க முடியாமல் அவளையே உற்றுப் பார்த்துக் டுகாண்டிருந்தான். அவளும் புன்னகை மாறாமல், அவள் கண்களில் இயல்பாக ஜ்வலிக்கும் ஒரு குழந்தைக்குரிய ஒளியுடன், அழகாக, உருண்டு, திரண்டு, வெறி உண்டாக்குமாறு, திண்ணத்துடன் நின்று கொண்டிருந்தாள். உண்மையில் நம்ப முடியாத அளவுக்கு மாறுதல் அவளிடம் ஏற்பட்டு விட்டது. மூன்று வருடங்கள் முன்னால் அவளை ஒரு ராத்திரியில் அந்தத் துறையில் சுத்த அயோக்கியன் என்றாலும் தவிர்க்க முடியாத அந்த ஏஜண்டு அவன் முன் நிறுத்தியபோது மக்குக்களில் மக்காகத்தான் அவளிருந்தாள். அப்போது அவளுக்குப் பதினாறுதான் நிரம்பியிருக்கும். பயந்தவளாக இருந்தாள். அவன் பார்வையில் ஒவ்வொரு அங்கமும் சுருங்க நின்றாள். அப்போது அவன் எழுந்திருக்கவும் முடியாத சோர்வில் இருந்தான். சற்று நேரம் முன்புதான் இந்திரா அவனை விட்டுப் போயிருந்தாள். அவனுடைய இருபத்தேழு வருட நாடக

அனுபவத்தில் இந்திராதான் மிகச் சிறந்த கதாநாயகியாயிருந்தாள். அவளே போய் விட்டாள். அவள் போனால் அப்புறம் எது போனாலும் ஒரு பொருட்டல்ல. அவன் இன்னொரு கதாநாயகியைத் தேடிப் போக நீண்ட பயணம் எடுத்துக் கொண்டால் நிச்சயம் சிதறிப் போய்விடுவான். அப்போது அந்த ஏஜண்டு இவளை அவன் முன் நிறுத்தினான். இவள் குளிரிலும் பயத்திலும் நடுங்கிக் கொண்டிருந்தாள். அவன் இவளைப் பார்த்தான், சரி என்றான், ஒரு புது கதாநாயகி உருவாக ஆரம்பித்தாள். அவளிடம் பிரமாதமான கலைத்திறமை இருக்கும் என்று அவன் எதிர்பார்க்க ஒன்றும் இல்லை. ஆனால் அவன் மிகவும் சோர்ந்து போயிருந்தான். நிகழ்காலத்திலிருந்து, எதார்த்தத்திலிருந்து, நிராசையிலிருந்து அவன் தப்பித்துக் கொள்ளத் தவித்துக் கொண்டிருந்தான். அது மூன்று வருடங்களுக்கு முன்னால். ஆனால் அவனால் நிகழ்காலத்திலிருந்து, அவன் நிலையிலிருந்து தன்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இந்தப் புதுப் பெண்ணுடைய குளறு வாயை வைத்துக் கொண்டு, கூன் முதுகை வைத்துக் கொண்டு, மேடைக் கிலியைக் வைத்துக் கொண்டு, எடுத்ததெற்கெல்லாம் அழ ஆரம்பிக்கும் சுபாவத்தை வைத்துக் கொண்டு மீண்டும் உழைக்க ஆரம்பித்தான். அவன் உண்மையாக, கடுமையாக, களைப்பில்லாமல் உழைத்தான், அவனால் எது செய்தாலும் நாடகத்தில் மட்டும் அவனுக்குத் திருப்தியளிக்காததையும் அளிக்காதவர்களையும் மேடையேற்ற முடியாது. அவளுக்கும் ஒரு நல்ல கதாநாயகியாக வேண்டும் என்ற ஆசை இருந்தது. பொறுமையான, தொடர்ச்சியான, கடுமையான பழக்கம் ஏற்படுத்தியதில் அவள் ஓரளவு அவளுடைய மட்டித்தனத்தை ஒதுக்கி வைக்க முடிந்தது. உடலவில் அவள் மிகவும் விரும்பத்தக்கவளாக இருந்தாள். உடலளவில் அவள் மிகவும் விரும்பத்தக்கவளாகவே வளர்ச்சி பெற்றாள். முதல் வருடத்தில் சொல்லிக் கொடுத்ததை அப்படியே செய்து காட்டி யார் கண்டனத்திற்கும் உட்படாமல் இருந்தாள். இரண்டாவது ஆண்டில் அங்கொருவர் இங்கொருவர் அவளைப் பாராட்டினார்கள், மூன்றாண்டு முடிவதற்குள் ஜனம் அவள்மேல் உருகி வழிய ஆரம்பித்தது. என்ன அழகு, என்ன கம்பீரம், என்ன உணர்ச்சி, என்ன அனாயாசம், பிறவி நடிகை, கலைவாணியின் அவதாரம், வரலாறு காணாத அற்புதநடிப்புத் திறன், இந்திய நாடக சரித்திரத்தின் தலை சிறந்த சே.,க ரச விற்பன்னள், ராமப் பிரம்மத்தின் எவ்வளவோ கதாநாயகிகளில் இவளைப்போல் சிறந்தவல்ளிலை...... அது சாதனை, இப்போது இந்திரா

இல்லாதது குறித்து யாருக்கும் ஒரு நினைவுக் கீறல்கூட இல்லை, இப்போதைய நாடகம் அமோகமாக நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு பெரிய நாடகங்களுக்கு ஏற்பாடுகள் ஆரம்பித்தாகிவிட்டது, அப்போது இந்த மட்டிப்பெண் தன்முன் நெளிந்து வந்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் தான் வராமல் இருப்பதற்கு அனுமதி கேட்கிறது. யாருக்குத் தெரியாது நீண்ட பெரிய கார்கள் அவள் வீட்டின் முன்னால் நிற்க ஆரம்பித்து விட்டன, . எவனெவனோ கொழுத்த அசிங்கமானவன் தூங்கி வழியும் நேரத்திலெல்லாம் உள்ளே போய் வருகிறான், அதே ஏஜண்டு அவளுக்கு எழுதவென்ன தெரியும் அவளுடைய கையெழுத்தை மூன்று சினிமா ஒப்பந்தங்களில் வாங்கி விட்டான் என்று? அவனுடைய நாடகக் குழுவிற்கு அவள்தான் அதிகமாகக் கூலி வாங்கும் கதாநாயகியாக இருக்கலாம்,ஆனால் அது அவளுக்கு ஒரு காட்சிக்கு நாற்பது ரூபாய் மேல் தராது, இப்போது சினிமாத் தயாரிப்பாளர்கள் அவள் வீட்டு முன்னால் அலைய ஆரம்பித்து விட்டார்கள், அவள் ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைப் பார்க்கலாம், பெரிய பங்களா வாங்கலாம்,சோப்விளம்பரங்களுக்கு அவள் முகத்தைப் பிரசுரிக்கச் செய்து கொள்ளலாம், தேசப் பொருளாதாரத்தை ஆட்டி வைக்கும் முதலாளிகளின் இரவு விருந்துக்குப் பின் நிகழும் அந்தரங்க பேச்சு வார்த்தையில் அடிபடலாம். அதெல்லாவற்றுனுடையபடிக்கட்டில் அவள் இருந்தாள், ஏன், உலகமே இன்னும் இரண்டாண்டு காலத்தில் அவள் காலடியில் விழுந்து கிடக்கலாம்!

இரண்டாண்டு காலத்தில் உலகமே காலடியில் விழுந்து கிடக்கக் கூடிய அவளை அவன் வெறித்துப் பார்த்தான். அவள் அடுத்த ஞாயிற்றுக் கிழமை ஒரு தினம் பற்றித் தான் கேட்டாள். எப்போதும் அப்படித்தான் அதுஆரம்பமாகும் ஆனால் அவனுக்குத் தெரியும் அவள் போயே விடுவாள் என்று. அவன் மீண்டும் ஒரு மட்டியைப் பொறுக்கி எடுக்க வேண்டும், மீண்டும் அவளை வைத்துக் கொண்டு இல்லாத பாடுபட்டு ஒரு கதாநாயகியைத் தயாரிக்க வேண்டும். சினிமாக்கள் இருக்கும் சினிமாக்கள் எப்போதுமே இருக்கும், அவளும் ஒரு மூன்றாண்டு காலத்தில் ஒரு பக்குவம் ஏற்பட்டவுடன் போய்விடுவாள். அப்புறம் இன்னொருத்தியைத் தேர்ந்து எடுக்க வேண்டும். அவளும் போய்விடுவாள், மறுபடியும் இன்னொருத்தி, அவளும் போய்விடுவாள்,அப்புறம் இன்னொன்று, அதற்கப்புறம் இன்னொன்று, இன்னொன்று இன்னொன்று எனறு அவன் களைத்து, அலுத்து, சலிப்புற்று.ஒரு காசுக்கும் பயனற்ற கிழவனாகி. அப்படியும் அவன்

நாடகக் குழுவுக்கென ஒரு கதாநாயகி மிஞ்ச மாட்டாள்.

அவள் உருட்சியுடன், திரட்சியுடன், பூரிப்புடன், இன்னும் அந்தப் புன்னகையுடன் காத்து நின்று கொண்டிருந்தாள். அவளை எக்கேடு கெட்டுப்போ என்று சொல்லி விட அவனுக்கு வலி ஏற்படும் என்று தோன்றவில்லை. ஆனால் எல்லா வலியையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு வெறித்தனமான ஒரு வேகம் அந்த வேகத்தை அந் நாள்வரை அந்தத் தாங்க முடியாத அளவுக்கு அவள் அவனுக்கு உண்டுபடுத்தியதில்லை. அதுதான் அந்தக் கணமே அவள்மீது பாய்ந்து அவளைக் கசக்கிப் பிழிந்து தரதரவென்று படுக்கையறைக்கு இழுத்துச் செல்ல வேண்டும் என்பது.

## எழுதாத கவிதை

எரியாத விளக்கு
தெரியாத முகம்
முடியாத கோலம்

?

### அடுத்த இதழில்

விவேகானந்தாவின் 'சாதனாஸ்' பின்னேக்காக வருகிறது.

# எங்கோ— யாரோ— யாருக்காகவோ...

ஜெயகாந்தன்

நகரத்தின் சந்தடிகளையெல்லாம் தாண்டுகிறவரைக்கும் அவள் தலை நிமிரவே இல்லை. தன் முழங்காலின்மீது முகத்தைப் புதைத்துக் கொண்டுவந்தவள் அதே நிலையில் என் பக்கம் முகத்தைத் திருப்பி கண்களை விரித்து என்னைப் பார்த்தாள். அவள் பார்க்கிற தினுசிலிருந்து இவள் நம்மை ரசிக்கிறாள் என்று நான் தெரிந்து கொண்டேன்.

ஒரு பெண்ணினால் ரசிக்கப் படுவது ரொம்ப சுகம்தான். அதுவும் ஒரு ஆண், பெண்ணை ரசிக்கிற மாதிரி ஒரு பெண் என்னை ரசிப்பதுஎனக்கு எப்போதுமே சுகமாகத்தான் இருக்கிறது காரை ஒட்டிக்கொண்டே இருந்தவன் குறுக்கே ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரன் புகவே திடீரென்று 'பிரேக்'கை மிதித்தேன்.

"யம்மாடி" என்று கூவிக் கொண்டே அவள் முன்புறம் மோதிக் கைகளை ஊன்றிக் கொண்டு சிரித்தாள். அவள் சிரிக்கும் போது அந்தப் பற்களும் முகமும் ஒரு டூத் பேஸ்ட் விளம்பரக் காரியை நினைவூட்டியது.

நகரத்தின் எல்லையைத் தாண்டியதும் அதற்காகவே காத்துக் கொண்டிருந்த மாதிரி நண்பர் அவள் தோளைத் தொட்டுச் சொன்னார்:

"ஊரைத் தாண்டி வந்துட்டோம்..."

அவள் தலை நிமிர்ந்து பின் பக்கம் திரும்பி நண்பரைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தாள்: "எப்படா ஊரு தாண்டுவோம்னு காத்துக்கினு இருந்தீங்களா?" என்றாள். நண்பர் சிரித்துக் கொண்டே சிகரட் புகையை அவள் முகத்தில் ஊதினார் போலிருக்கிறது.

'ஐயே...தூ' என்று கையால் புகையை வீசி முந்தானையால் மூக்கை மூடிக் கொண்டு இந்தப் பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டாள். நண்பர் பின்னாலிருந்து. அவள் மோவாயைக் கையிலேந்தி மறுபடியும் அவள் எதிர்பாராத விதமாய் அவள் முகத்தில் புகையை ஊதி

விட்டார்.

பாருங்க... மூஞ்யிசிலே புகைவிடறதெ?" என்று என்னிடம் புகார் செய்தாள்.

நண்பர் மறுபடியும் புகையை ஊதினர் :

"ஐயே... பாருங்க இவரை... சும்மா சும்மா அதே மாதிரி பொகையெ உடருரு... எனுக்கு வவுத்தெப் பொரட்டுது... நான் வாந்தி எடுத்துடு வேன்..." என்று சிணுங்கிய வாறே சிரித்தாள்.

"நான் நண்பரைப் பார்த்தேன். அவர் பீர் போதை நன்கு ஏறி நல்ல குஷியில் இருக்கிருர் என்று தெரிந்தது.

"வேண்டாம். அவளைத் தொந்தரவு செய்து அவள் 'மூடை'க் கெடுத்துவிடாதீர்கள்" என்று நண்பரிடம் நான் ஆங்கிலத்தில் சொன்னேன்.

"நீங்க—இப்ப பேசனது இன்ன 'பாஷை? பிரான்ஸா, இங்கிலீஷா?" என்று கேட்டாள் அவள்.

"ஏன்—உனக்குப் 'பிரான்ஸ்' தெரியுமா?;' என்று அவளை மாதிரி கேட்டேன்.

"எனக்குத் தெரியாது. எங்க வூட்லே தெரியும்—அந்த ஆளு இங்கே போலீஸ் வேலை செய்யிது என்ருள்.

"உங்க வூட்லேன்ன—உன் புருஷனு?" என்று கேட்டார் நண்பர்.

"ம்ஹூம்" என்று அவள் பலமாகத் தலையை ஆட்டினள்: "இவுரு என்னை இட்டாந்துட்டாரு... எம் புருசங்காரன் வேற... அவுரு நெல்லிக்குப்பத்திலே இருக்காரு."

"நெல்லிக்குப்பம்?—எங்கே இருக்கு" நண்பர் என்னைக் கேட்டார். அதுதான் எனக்கும் சொந்த ஊர். இருந்தாலும் அதை இவள் முன்னல் சொல்லுவதும் இந்த நேரத்தில் செல்லுவதும் அவசியமில்லாதது என்று நினைத்துக் கொண்டேன்.

"இங்கேருந்து பன்னிரண்டு மைல் இருக்கும்" என்று நண்பருக்கு விளக்கினேன்.

"அப்ப உனக்கு நெல்லிக்குப்பத்துக்குப் போகணுமோ? கொண்டுபோயி உடரேும்" என்று அவளை உற்சாகப் படுத்துவது மாதிரி சொன்னர் நண்பர்.

"ஐயையோ... அந்தப்பக்கம் என்னெப் பாத்தா கொடுவாக் கத்தியாலே வெட்டிப் போட்டுடுவான் எங்கமாமன்—மாமனுக்குத்தான் கட்டிக் குடுத்தாங்க என்னை... சாமி உங்களுக்குப் புண்ணியம் உண்டு; அங்கே எங்களுச்சும் கொண்டி உட்டுடாதீங்க; நானு இங்கேயே எறங்கிக்கறேன்" என்ருள் அவள்.

"சீ சீ! சும்மாத்தான்—உங்க ஊருன்னு சொன்னியேன்னு கேட்டோம். எங்களுக்குஎன்ன ஆகணும், உன்னை அங்கே கொண்டு போயி உட்டு?..." என்ருர் நண்பர்.

சரி, எங்கே என்று தெரியாமல் ஏதோ ஒரு ரோடில் நாம் போய்க் கொண்டே இருந்தால்—இதற்கு என்ன முடிவு? எங்கே முடிவு? இவளை வேறுகூட

ஏற்றிக் கொண்டு? நண்பர் இதைப் பற்றியெல்லாம்யோசிக்கறதாகவே தெரியவில்லை. ஏதோ நம்மோடு ஊரிலிருந்தே உடன் வந்து, கூடவே திரும்புகிற ஒருத்தியுடன் பேசுகிற பாவனையில் தன்னை மறந்து சம்பாஷித்துக் கொண்டு வந்தார்.

ஆளரவம் இல்லாத ஒரு புளிய மரத்தடியில் நான் காரை நிறுத்தினேன்.

" என்ன கார் நின்னுட்டுது " என்று கேட்டாள் அவள்.

" யாரும் பாக்காத இடத்துக்கு வரணும்னு சொன்னே— கொண்டுவந்துட்டேன். இனிமே உன்பாடு, உன்னை இட்டாந்திருக்காரே இவுருபாடு" என்று கதவைத் திறந்து கொண்டு கொஞ்சம் காற்றுட சாலையில் இறங்கி நின்று நானும் ஒரு சிகரட்டைப் பற்ற வைத்தேன்.

" ஹை! பேச்சைப் பாரேன் பேச்சை... இவுரு இட்டாந்தாராம்—இவுரு கொண்ணுந்து உட்டுட்டாராம். இப்படி சொன்னுக்கா, இவுரு சும்மா 'டைவர்' மாதிரின்னு நானு நெனைச்சிக்குவேனும்... இந்த வெள்ளாட்டு எல்லாம் எனுக்குத் தெரியாதுன்னு நெனச்சுக்கினீங்களா?" என்று சொந்தமாக என்னை அவள் பரிகாசம் செய்தாள். நான் சற்று நடந்து மரத்தடியில் போய் ஒன்றுக்குப் போனேன்.

தூரத்தில் ஒரு கள்ளுக்கடை தெரிந்தது. இரண்டு பக்கமும் கம்மங் கொல்லையோ, சோளக் கொல்லையோ? உள்ளே ஆள் நுழைந்தால் தெரியாமல் மறைக்கிற அளவுக்கு உயர்ந்தும் அடர்ந்தும் செழித்து வளர்ந்திருந்தது.

வெயிலின் அனல் காய்ந்தாலும் அடிக்கடி குளிர்ந்த காற்று வீசியது. பக்கத்து மாமரத்திலிருந்து ஒரு ஆண் குயில் மிகச் சோகமாய்க் கூவிற்று.

எங்கிருந்தோ மிக வேகமாக ஓடிவந்த — நெற்றியில் கண்களுக்குமேல் இரண்டு புறமும் பழுப்புநிறத்தில் பொட்டிட்டது மாதிரி வண்ணமுடைய—ஒரு கறுப்பு நாட்டு நாய் காரின் பின்னம் பக்க டயரில் காலைத் தூக்கிக் கொண்டு மூத்திரம் அடித்துவிட்டுப் பாதியில் என்னைப் பார்த்து, நான் விரட்டாமலே பயந்து கொண்டு வேகமாய் என்னைத் தாண்டி அரை வட்டமாக விலகி நடந்து மறுபடியும் வேகமாய் ஓடியது...

சற்றுத் தூரத்தில் போய் நின்று தான் பயந்துவிட்டதைக் காரணமாய்க் கொண்டு என்னைப் பழிக்கிற மாதிரி அது குரைத்தது.

பீர் போதையினால் நான் இந்த அற்ப விஷயங்களைக் கூட இவ்வளவு கூர்ந்து கவனிக்கிறேனே என்று நினைத்து எனக்கு நானே சிரித்துக் கொண்டேன்.

சீ! எவ்வளவு நாழி மரத்தடியிலேயே நின்று கொண்டு?... பீர் குடித்தாலே இப்படித்தான். சரி இருக்கட்டும். நண்பர் அங்கு அவளோடு என்ன வாவது பேசுவார்...ஒரு சிகரட்

தீருகிறவரைக்கும் நான் இங்கேயே நின்று காற்று வாங்கிக் கொண்டிருந்தேன்.

நண்பர், என் பெயரில் உள்ள இரண்டு பதங்களின் முதல் ஆங்கில எழுத்தக்களை உச்சரித்து என்னை அழைத்தார்.

"She Wants You" அவளுக்கு நீங்கள் வேணுமாம். அவர் இங்கிலீஷில் கூறியது விளங்காமல் அவளும் இளித்துக் கொண்டு என்னைப் பார்த்தாள். நான் கூவிச் சிரித்துக் கொண்டேகாரருகேபோனேன். என் சிரிப்பிலிருந்து என்னவோ இவர்கள் குறும்பு செய்கிறார்கள் என்று புரிந்து கொண்டாள் அவள்.

"ஏதுக்கு சிரிக்கிறீங்க? இவுரு என்ன சொன்னுரு இங்கிலீஷ்லே" என்று என்னைக் கேட்டாள். திரும்பத் திரும்பக் கேட்டாள்.

"உனக்கு நான் வேணும்னு சொன்னியாமே..." என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"ஐயோ" (இந்த 'ஐயோ' வைச் சொல்லாமலே அவள் வயிற்றை எக்கிக் கொண்டே தொண்டை வழியே காற்றை உள்ளுக் இழுத்து வாயைப் பொத்தி எழுத முடியாத ஓர் ஓசை கிளப்பினுள். சில சமயம் அதன் பிறகோ, அதற்கு முன்போ 'ஐயோ' வென்றும் சொன்னுள்.)

"பொய்யி—பொய்யி - அவுரு தனியா போயி நின்னுக்கினு இருக்காரே. எதனு நெனச்சிக்கப் போருரு... கூப்பிடுங்கன்னு சொன்னதையே இப்படி சொல்றீங்க — போங்க ம்ஹக்கும்..." என்று நண்பரின் கையைக் கிள்ளினுள் அவள். 'ஆ ஆ' என்று நண்பரும் கத்தினர்.

நான் மரத்தடியில் போய் அந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சின்ன நேரத்தில் இவர்களுக்குள் இந்த அன்னியோன்னியம் ஏற்பட்டு விட்டது என்று நான் புரிந்து கொண்டு நண்பரின் கண்களை உற்றுப்பார்த்தேன். நண்பர் கண்களைச் சிமிட்டிக் கொண்டே "ஷி இஸ் ரியலி ஸ்வீட்!" என்று உதட்டைக் கடித்தார்.

"தமிழ்லே பேசுங்க - நீங்க என்னெப் பத்தி என்னமோ பேசுறீங்களோனு பயம்மா இருக்குது. நீங்க பேசறதெ நான் தெரிஞ்சிக்கக் கூடாதுனு தானே மறைச்சி மறைச்சி இங்கிலீஷ்லே பேசுறீங்க..." என்று அவள் வெள்ளைச் சிரிப்புடன் பேதைமையோடு கேட்டது எனக்கு என்னவோ மாதிரி இருந்தது. இங்கிலீஷ் தெரியாத காலத்தில் நானும் இப்படிப் பட்ட உணர்ச்சியில் தவித்திருக்கிறேன். அதை நினைத்துக் கொண்டேன்.

"சீ சீ! அப்படியெல்லாம் இல்லை. எங்களுக்குப் பழக்கம் அப்பிடி-அதனுலே தான் என்று நான் அவளுக்கு சமாதனம் கூறினேன்.

"அவுரு என்ன சொன்னுர் தெரியுமா? நீ ரொம்ப இனிப்பா இருக்கியாம்" என்று நான் சொன்னதும் அவள் கறுத்த முகத்திலும் நாணத்தின் கறுஞ்

சிவப்பு படர முகத்தை மூடிக் கொண்டாள்.

நண்பர் தன்னை மறந்த லகரியில் சிரித்துக்கொண்டார்.

எனக்கு எல்லாமே ஒரு வேடிக்கை கலந்த சோகமாய் இருந்தது.

"என்ன பீர் 'எஃபக்ட்' கொறைஞ்சுட்டுதே" என்றார் நண்பர்.

"பரவாயில்லை. அதோ கள்ளுக்கடை இருக்கு" என்று நான் காட்டினேன்.

"ஆ! 'ட்டாடி'" என்று நண்பர் துள்ளினார்: "தென்னங்கள்ளா, பனங்கள்ளா?" என்று ஆவலுடன் விசாரித்தார்.

"பனங்கள்ளு கிடைக்குமோ என்னமோ, தென்னங்கள்ளு நிச்சயம் இருக்கும்" என்றேன் நான்.

"கள்ளு கூட சாப்பிடுவீங்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஏன்? சாப்பிட்டா என்ன?" என்று நான் கேட்டேன்.

"சாப்பிட்டா என்ன, ஒண்ணுமில்லே. கள்ளு ஒடம்புக்கு ரொம்ப நல்லது. ஜூட்டெ தணிக்கும். ஆனா உங்களை மாதிரிப் பெரிய மனுஷாள்லாம் கள்ளுன்னா கேவலம்னு பிராந்தி பீருன்னு குடிப்பீங்களேன்று கேட்டேன்" என்றாள்.

இந்த விஷயங்களிலும் இப்படிப்பட்ட வர்க்கப் பேதங்கள் உண்டோ என்று நினைத்துச் சிரித்துக் கொண்டோம், நானும் நண்பரும்.

"நீ-கள்ளு சாப்பிடுவியா?" என்று கேட்டேன் நான்.

"சாப்பிடாம என்ன, எப்பனுச்சும் கொஞ்சம் சாப்பிடறது தான். அது இன்னா செய்யப் போவுது" என்றாள் அவள்.

"சரி, அப்ப வண்டியை எடுங்க...நேரா வுடுங்க ஸார் 'டாடி ஷாப்'புக்கு" என்றார் நண்பர்.

"இது அமெரிக்கா இல்லே ஸார்". என்றேன் நான்.

"கள்ளுக்கடைக்கா? ஐயோ" என்று அவள் வாயைப் பொத்திக் கொண்டு சொன்னாள்: "நீங்க போயி சாப்பிட்டுட்டு வாங்க-நா்னு இங்கேயேகுந்திக்கினு இருக்கேன்."

நான் யோசித்தேன். வண்டியில் 'வாட்டர் ஜக்' இருக்கிறது. காரைக்கூட இங்கேயே வீட்டு விடலாம். நண்பரும் அவளும் இங்கே இருக்கட்டும், நான் போய் ஜக் நிறைய கள்ளு வாங்கிக் கொண்டு, அப்படியே கள்ளுக்கடையில் சாப்பிடுவதற்கும் ஏதாவது 'சாக்கனா'க் கடைச் சாமாசாரங்களைக் கட்டிக் கொண்டு வந்து விட்டால், சோளக் கொல்லையில் அருமையான 'பிக்னிக்' வைத்துக் கொள்ளலாமே!

இந்த யோசனையைச் சொன்னதும் நண்பர் மிகக் குதூகலமாகச் சிரித்தார். ஆனால் ஒரு திருத்தம் செய்தார்.

நான் மட்டும் அவ்வளவு தூரம் தனியாகப் போய் 'வாட்டர் ஜக்' கோடு, பொட்டலங்களையும் சுமந்து வரச் சிரமமாக இருக்கு

மாம். எனவே அவரும் கூட வருவாராம்.

அப்ப—இவளை என்ன செய்வது!

"நீ தனியா இங்கேயே இருப்பியா" என்று அவளிடம் நான் கேட்டேன்.

"அதுக்கென்ன? காருக்குள்ளே குந்திக்கினு இருந்தால் தான் பாக்கறவங்களுக்கு—யார்னுச்சும் பாத்தா-சந்தேகப் படுவாங்க—நான, தே, இப்பிடி இந்த மரத்தடியிலே குந்திக்கினு காருக்குக் காவலா இருக்கேன். நீங்க போயிட்டு வாங்க ..." என்று காரிலிருந்து இறங்கி மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ஒரு குச்சியை எடுத்து மண் தரையில் கோலம் வரைய ஆரம்பித்தாள்.

நாங்கள் வாட்டர் ஜக்கை?—எடுத்து அதிலிருந்த தண்ணீரை எல்லாம் கொட்டி விட்டுக் கள்ளுக் கடையை நோக்கி புறப்பட ஆயத்தமானோம்.

"சீக்கிரம் வந்துடுங்க" என்று என்னிடம் அவள் சொன்னாள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு வீட்டிலிருந்து புறப்படும் போது இப்படித்தான் சொல்லி அனுப்பினாள்—அவள்' என்று என் மனைவியை நினைத்துக் கொண்டேன் நான்.

இருவரும் கள்ளுக் கடையை நோக்கி நடந்தோம்.

(தொடரும்)

மதுரையிலிருந்து
வாரந்தோறும்
மலர்கிறது

# குறிஞ்சி

(தேசிய முற்போக்கு
வார இதழ்)

ஆசிரியர்:
ப. நெடுமாறன்

ஆண்டுச் சந்தா ரூ. 12/-
ஆறுமாதச் சந்தா ரூ. 6-50
தனிப்பிரதி 25 காசுகள்

48, மேலமாசி வீதி,
மதுரை-1.

# ஞானரதம்

| விளம்பர விகிதம்: | ரூ. |
|---|---|
| பின் அட்டை (இருகலர்) | 300/- |
| உள் அட்டைகள் ( ,, ) | 250/- |
| ,, ,, (ஒருகலர்) | 200/- |
| முழுபக்கம் | 100/- |
| அரைப்பக்கம் | 60/- |
| கால்பக்கம் | 30 |

ஒப்பந்த விளம்பரங்களுக்கு
தள்ளுபடி உண்டு
புத்தக விளம்பரங்களுக்கு
தனிச் சலுகை

விவரங்களுக்கு:
நிர்வாகி: ஞானரதம்,
சக்தி இல்லம், சென்னை-36

# வணக்கங்கள் வீணாவதில்லை!

பொன்னிழை யோடிய
பாறை ஒன்றை
மனிதன் கண்டான்.
பாறையை உருக்கிப்
பொன்னை எடுக்கத்
தீயிடை வைத்தான்.
ஆனால்...பாறையோ
வணங்கவும் இல்லை!
நெகிழவும் இல்லை!
பார்த்தான் மனிதன்...
கல்லை இடித்தான்
பொடியாய்ப் பொடித்தான்.
பொடித்த பொடியைக்
கனலில் காட்டினான்
பொன் குழைந்தது.
அடுத்து?
உருகாக் கல்தூள்
தனியே பிரித்து
வீசப் பட்டது.
கனிந்த பசும்பொன்?
மதிப்பில் உயர்த்திப்
பேசப் பட்டது!
ஓ! ஓ! ஆமாம்!
வணக்கங்கள் என்றும்
வீணாவதில்லை.

அமுத பாரதி

தபால் பெட்டி எண் : 1431 தொலைபேசி எண் : 443429

# நவீன மாதிரிகளில்

# பெரிய மாளிகைகள்

# பங்களாக்கள்

# வீடுகள்

# சிறு குடியிருப்புக்கள்

ஆகியவைகள் கட்டவும்,

கட்டி முடிந்த நிலையில் உள்ளவைகளை

வாங்கவும் நம்பிக்கைக்குரிய

ஸ்தாபனம்

# ஸ்ரீ பாலாஜி எஸ்டேட்

இஞ்சினியரிங் காண்ட்ராக்டர்ஸ்.

113, ஹபீபுல்லா ரோடு,

தியாகராய நகர், சென்னை-17.

# வசந்தமே! ஏன் நினைவாக....

முற்றிலும் வண்ணப் பகட்டோ படாடோபமோ இல்லாத ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கப் போகிறேன். ஷோபா.........

ஷோபா ஒரு வெறும் கதாபாத்திரம் மட்டும்தானா என்று எனக்குச் சொல்ல முடியாது. அவள் என் மனதின் அடியில் உறைந்து கிடக்கும் அன்பின் உருவமும்கூட.

அவளுடைய உண்மைப் பெயரை நான் கூறமாட்டேன். 'ஷோபா' என்பது, அவளை நானாக அழைக்கும் பெயர்தான்.

ஒருவேளை அவளுடைய பெயர் லலிதா என்றோ, மீனாக்ஷி என்றோ, ராஜாமணி, சரோஜினி என்றோ ஏதாவதாக இருக்கலாம்.

அவளை நான் கண்டேன். பழகினேன். இவள்தான் மிஸ் '........' என்று தெரிந்து கொண்டேன். ஆனால் அதற்கெல்லாம் முன்பு, அவசியமேதுமின்றி, கால் போன போக்கில் நான் ஒருநாள் நடந்து கொண்டிருந்தபோது, வழியில் அவளைக் கண்டு விழித்துப் பார்த்தபடி நின்ற அந்த ஒரு நிமிஷத்தில் என் உதட்டில் திடீரென்று உதித்த பெயர்தான் இந்த -'ஷோபா!' எங்கோ படித்ததாக நினைவு. ஆனால் நிச்சயமாக அந்தக் கதாபாத்திரத்தினுடைய நினைவுஎன் மனதில் இப்போது பட்டாக வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் ஷோபா என்ற அந்தப் பாத்திரம் ஒரு பிச்சைக்காரியினுடையது. ஒரு இரண்டாந்தர நாடகத்தின், நல்ல ஒரு கதாபாத்திரம் அவள் என்றுதான் நான் கருதி இருந்தேன்.

நான் கண்டு திகைத்து நின்ற இப் பெண்ணோ மின்னும் பட்டாடை உடுத்தி, தென்றல்போல ஆடி நெளிந்து நடந்து வந்து கொண்டிருந்தாள்.

இருந்தாலும் ஷோபா என்று என்னுடைய உதடுகள் முணுமுணுத்தன. பின்னர் அப்பெண்ணைக் காண நேர்ந்த போதெல்லாம் ஷோபாதான் என் நினைவுக்கு வரும்.

—"நீதான் ஷோபா"

என்ன அழகான பெயர்!

அவள், இதைத் தெரியவந்த போது, நான் இட்ட அழகான பெயரென்று கருதி மகிழ்ந்திருக்கலாம். ஷோபா என்று அவளை அழைத்து நான் எழுதிய கடிதங்களைப் படித்த பிறகு அவள் எழுதினாள்:

—"ஷோபா மிக நல்ல பெயர். எனக்குப் பிடித்திருக்கிறது."

[பாவம்! அப்பாவியான ஒரு நாடக ஆசிரியர், தன்னுடைய கதாபாத்திரமான ஒரு

பிச்சைக்காரிக்கு சூட்டிய பெயர் அது என்பதை அவள் தெரிந்திருக்கமாட்டாள்.]

ஷோபா ஒரு வெறும் கதா பாத்திரம் மட்டுமல்ல என்று சொன்னேன். அதனாலேயே இது ஒரு கதையல்ல. நேர்த்தியான அனுபவங்களுக்கு கதையினுடைய ஆபரணங்களைப் பூட்டி இருக்கிறேன் என்பதே உண்மை.

ஷோபா என் மனதில் புகுந்தது சற்றும் எதிர்பாராத ஒன்றாக இருந்தது.

நான் எழுதிய ஒரு நாடகம் அரங்கேறிய சில நாட்களுக்குப்பின், மனச் சாந்தியற்ற சிந்தனைகளினால் மனம் புழுங்கிக்கொண்டிருக்க, நான் அலைந்துகொண்டிருந்தபோது அவள் என் முன்னால் திடீரென ஒரு நாள் வந்து நின்று சொன்னாள்.

மலையாளம்

**கே.பி. ரவீந்திரநாத்**

—"நாடகம் நன்றாயிருந்தது. நான் அதை முழுவதும் பார்த்தேன்."

அதற்குப் பிறகும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அவள் என்னைப் பார்ப்பதும், நெறுங்கிச் சந்தித்தால் அந்நாடகத்தில் நான் நடித்த கதாபாத்திரத்தின் பெயரைச் சொல்லி என்னிடம் கேலியாக விளையாடவும் செய்வாள்.

இது ஒரு ஆரம்பந்தான். ஆனால் அவள் என் மனம் கவர்ந்த உருவமாக என் உள்ளத்தில் ஊடுருவி விடுவாள் என்று அப்போது நான் நிச்சயமாக நினைக்கவேயில்லை. ஏனென்றால் என் உள்ளத்தில் ஊன்றி நிற்கமுடியாமல் அவள் நழுவிவிடுவாள் என்று நான் எதிர்பார்த்தேன். அப்படி ஒரு சாதகமற்ற நிலையில் நான் இருந்தேன்.

அது ஒரு புயல் காற்று அடித்து ஓய்ந்த நேரம்........ கண்ணீர் உலர்ந்த தடங்களில் இன்னும் துயரத்தினுடைய பாசிகள் படிந்து மூடியிருந்தன.

தகர்ந்து கிடந்த இதயச் சுவர்களிடையே வேதனையின் விஷ அணுக்கள் ஊடுருவிச் சென்று......

மனதின் பலஹீனமான வாயில்களை இறுக்கி மூடிக்கொண்டிருந்தேன் நான்.

இனியாரும் வரக்கூடாது. யாரும்!

எனக்கு அவ்வளவு தூரம் பயம் (எதனிடம், அல்லது யாரிடமென்று தெரியாமல் நான் பயந்தேன்.)

—நட்பு துன்பமானதுதான்! (இதை யார் கூறினார்கள்? நான் யோசித்தேன். யார்?)

ஒருவேளை, பலவருடங்களுக்கு முன்பு, என்மனதின் அடியில் உறங்கிக் கிடந்த கற்பனா சக்தியைக் கிள்ளிக் கிளறி விட்ட அந்தப் பெண்ணாக இருக்கலாம்.

அவள் வேறொரு கதாபாத்திரம்.

அவளை சகோதரியாகவும், சிநேகிதியாகவும் பல ரூபங்

களில் நான் பாவித்தேன். அவளை நான் ஆராதிக்கவும் சிநேகிக்கவும் செய்தேன்.

—அந்த காலகட்டத்தில் என் மனதை அடக்கி ஆண்டவள் அவள்தான்.

அவள்தான் கூறினாள்:

—"நட்பு துன்பமயமானது" (இதைக் கேட்ட அப்போது, நான் பதறிவிடவில்லை என்று ஞாபகம்.)

ஆனால் ஷோபா இடைப்படவே நான் அதை நினைத்தேன். திடீரென்று நடுங்கவும் செய்தேன்.

புதியதொரு சோக நாடகத்தின் துவக்கமோ? தெரிந்தும் துன்பத்தையும் வேதனையையும் விலைக்கு வாங்குவது எங்ஙனம்?

நான் விலகிச் சென்றேன்.

"நீ ஒருக்காலும் என்னுடையவளில்லை, ஷோபா! ஒருக்காலமும்தான்."

இதைக் கேட்டால் அவள் சிரிப்பாள் என்று எனக்குத் தெரியும். அதனால் நான் ஒன்றுமே கூறவில்லை.

ஷோபா, எப்படி உனக்கு எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்க முடிகிறது என்று மனதில் பெருமையோடு நினைத்துக் கொள்வதுண்டு. (நீ அப்போது எனக்கொரு வெற்றுக் கனவாக மட்டும் இருந்தாய்.)

எனினும் அவளைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டேன். இறுக்கி மூடிப்பூட்டிவிட்ட மனவாயில்களை திறந்தபோது தகிக்கும் ஒரு பாலைவனத்தைத் தான் நான் அங்கு கண்டேன்.

பயங்கரமான அனுபவங்கள்; எரிச்சலுண்டாக்கும் உண்மைகள்!

துக்கம்; வேதனை......

ஆக ஒரே வறட்சியாக இருந்தது.

என் தாகத்தை நான் அறிந்தேன்.

தீவிரமான தாகத்துடன், பொறுமையை இழந்தவனைப் போல, நான் ஒரு சாலைநிழலைத் தேடி அலைந்தேன்.

—தங்குமிடம் எங்கே?

எங்கே?

எனக்கு எதுவும் தென்படவில்லை. வழி நெடுகிலும் நான் பார்த்தேன். கண்ணில் பட்டதை எல்லாம் ஆவலுடன் நான் தலையை உயர்த்திப் பார்த்தேன்.

ஷோபா நீ எங்கே!

ஏதோ குரல் கேட்டது: "பிரயாணியே, தங்குமிடம் இங்கே இருக்கிறது. இங்கே......"

தமிழில்
**சித்ரபாரதி**

எங்கே? எங்கே இருக்கிறது? நான் தேடினேன். இதற்குள் நான் அதிக தூரம் கடந்து விட்டிருந்தேன்.

ஆனால் எனக்கு எதுவும் தென்படவில்லை.

—வறட்சியான காற்றைத் தவிர!

நான் அழுதுவிடவில்லை. ஏனென்றால் அப்போது என்னிடத்தில் கண்ணீர்கூட வற்

றிப்போய் விட்டிருந்தது.

கண்ணங்கள் வாடி, நெற்றி கருத்து, உதடுகள் வரண்டு உலர்ந்துவிட்டன.

இனி எதையும் காணமுடியாது என்று நான் தீர்மானித்துவிட்டேன்.

அப்போது—

அப்பொழுதுதான் ஷோபா, நீ என் முன் வணப்பும் வசியமும் நிறைந்த புன்சிரிப்புடன் வந்து நின்றாய்.

[பெண்ணே,

நீ சிரிக்காவிட்டால் என்ன! எனக்கு உன்னைப் பார்த்தாலே போதும் என்றிருக்கிறது. ஏனெனில் பயங்கரமான அனுபவங்களின் உஷ்ணத்தினாலும், வறட்சியான காற்றினாலும் என் உள்ளம் முழுதும் வறண்டிருக்கிறது.]

அன்று நான் அழுதேன். அவளைப் பார்த்துவிட்டோமே என்ற நிறைவில்... !

அவள் வெறுமனே நின்று சிரிக்கத்தான் செய்தாள். சிவந்து கோவைப் பழம் போலிருந்த உதடுகளுக்கிடையில் முல்லைப்பூ வரிசையை அடுக்கியது போல!

[—வஸந்தமே நீ மலர்ந்து விட்டாயா! உன் நினைவாக-உன் நினைவாக மாத்திரம் தான்-நான் எவ்வளவு துயரப் பட்டிருக்கிறேன்.]

ஷோபா என்றஅந்தப்பெண் கிலுகிலுக்கும் சலங்கைகள் அணிந்து, மதர்ந்த காலடிகளுடனும் (கால்களில் அவள் சாயமிட்டு சிவக்கச் செய்திருந்தாள்.) பாட்டு முணுமுணுக்கும் உதடுகளுடனும் என்முன் வந்து நின்று சொன்னாள்:

நான் உங்களைக் காதலிக்கிறேன்.

காதல்!

இது என்ன கதை? எல்லாவற்றையும் மறந்துவிட்டு, ஒரு பெண் என்னைக் காதலிப்பதாவது!

எனக்கு இதையோசித்துப் பார்க்ககூட முடியவில்லை. ஏனென்றால், வேட்கை அதிகமாக இருந்தாலும் கசப்பான அனுபவங்களின் காலடிகள் என் இதயத்தில் ஆழப்பதிந்திருந்தன. அதனாலேயே எனக்குப் பயமாகவுமம இருந்தது. சுகமாகவும் இருந்தது.

[அன்புக்குரியவளே,

நீ ஒரு அப்பாவிப்பெண். உனக்கு ஒன்றும் தெரியாது.

வேதனையின் முள்காடுதான் என் நெஞ்சை நிறைந்திருக்கித்து. உனக்கு அதற்குள் நுழைய வேண்டுமென்றால் முடியுமா? நுழைந்துவிட்டாலும், மாமரத்தடிச் சிறுவர்களைப்போல; மாம்பழங்களைத் தின்றுவிட்டபின் இலை உதிர்ந்த மரம் மீண்டும் தளிர்க்குமென காத்திராமல் ஓடிவிடும் சிறுவர்களைப்போல; நீயும் ஓடிவிடமாட்டாயோ?

உனக்கு ஒருகாலும் நெறுங்க முடியாது. நான் யோசித்தேன்.. அன்பின் தளிர் பாதங்களில் கீரல்கள் ஏற்படுவது எனக்கு இஷ்டமில்லாமலிருந்தது.

எனினும் நான் ஒன்றும் கூறிவிடவில்லை. வெறுமனே

அவளைப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

போக்குவரத்து நிறைந்த சாலை. இளங்காற்றில் ஊளையிடும் காற்றாடி மரங்கள்.

நாங்கள் நடந்தோம். நானும் ஷோபாவும் இன்னும் பலரும்-இன்னும் யார் யாரோ -யாரையும் எனக்கு நினைவில்லை.

யார் யாரோ கூட வந்தார்கள் என்பதுமட்டும் தெரியும்.

அவள் ஓயாமல் பேசிக்கொண்டிருந்தாள். கேள்விகளுக்கெல்லாம்அவள்சிநேகிதிகள்தான் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

நான் முழுக்க அமைதியாக இருந்தேன்.

—என்னுடைய உலகம் என தாகமாத்திரமே இருந்தது. அதில் நான்தான் சர்வாதிபதி.

அவளும் சிநேகிதிகளும் பிரிந்தபோது நான் மீண்டும் தனிமையானேன்.

நொறுங்கிய பளிங்குக் கண்ணாடியைப் போல, சின்னாபின்னமான சிந்தனைகளுடன் நான் மறுபடியும் நடந்தேன். அப்போது இரவாகி விட்டிருந்தது.

எப்போது அணையும் என்ற நிலையில் இருந்த தெரு விளக்குகள்தான் வழி காட்டி நின்றன நான் நடந்தேன். சூழ்நிலையின் அமைதி எனக்குத் துரோகம் செய்து கொண்டிருந்தது.

ஒத்திகை விஷயங்களைக் குறித்தும், சில வாரங்களுக்குள் நடக்கப்போகும் கலாநிகழ்ச்சிகளைக்குறித்தும் நான் கனவு கண்டேன். அப்போதெல்லாம் ஷோபாவும் என்னோடு ஒன்றாக இருந்தாள்.

(புன்சிரிப்புக் கொழிக்கும் சந்திரனில் அவளுடைய பிரதிபிம்பத்தை நான் கண்டேன். குளிர்ந்த காற்று அவளுடைய கதையைக் கூறுவதைப்போல இருந்தது).

கனவுகளின் நூலிழை அறுந்தது. வெட்டிப் பேச்சும் சீட்டு விளையாட்டுமாக இரவைக் கழிக்கும் நண்பர்களின் மத்தியில் நான் போய்ச்சேர்ந்தேன்.

ஒத்திகைத் திட்டம் தகர்ந்தது. கலைநிகழ்ச்சிகள் அரங்கேறவில்லை. இருந்தாலும் ஷோபா, நீ ஒரு நடிகையும்கூட என்பதை நான் அப்போதுதான் புரிந்து கொண்டேன். அது மட்டுமல்லாமல், அரங்கேற்றம் தகர்ந்ததென்று மனம் இடிந்து போயிருந்த என்னை மகிழ்விக்க, ஆறுதல்கூற நீ மாத்திரமே இருந்தாய்.

"இது ஒரு தோல்வியல்ல. நாடகம் இன்னமும் எழுத வேண்டும். நாமே நடிக்கலாம்."

ஆனால் பிறகு நான் நாடகம் எழுதவே இல்லை. அதற்கான மனோபலம் எனக்கு இல்லாமல் போய்விட்டது.

அவள் என்னைக் காண நேர்ந்த போதெல்லாம் கேள்விக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தாள்:

"ஆமாம் நாடகம் எழுதவில்லையா? இந்த ஆண்டு நாடகம் ஏதும் நடிக்க வேண்டாமா?

நான் ஏதும் கூருமல் வெறுமனே சிரிப்பேன்.

ஒரு நாள். மழைபெய்து ஓய்ந்து சுற்றுப்புறமெங்கும் ஈரமாக இருந்தது. மாலைநேரம் ஒரு பஸ் கண்டக்டரை நாயகளுக்கி, நான் உத்தேசித்திருந்த நாவலின் முதல் அத்தியாயம் மனதில் உருவாகத் தொடங்கியிருந்தது.

போக்குவரத்து நெறுக்கமுள்ள ரோட்டில் நடந்து கொண்டிருந்தேன் என்பதை அப்போது நான் முழுக்க மறந்து விட்டேன். என்னுடைய சிந்தனை முழுவதும் அக் கதாபாத்திரத்தைப் பற்றிச் சுற்றிக் கொண்டிருந்தது.

அப்பொழுது பின்புறமாகக் கடந்துவந்து கொண்டிருந்த ஷோபா, என்னை அழைத்தாள் நான் திரும்பிப் பார்த்தேன்.

அவள் தனிமையாக இருந்தாள். சிறிது தூரத்தில் சிநேகிதிகள் காத்து நிற்பதையும் நான் கண்டேன். சிரித்துக் கொண்டே அவள் கேட்டாள்:

"புதிய நாடகம் என்ன ஆயிற்று? எங்களுக்கு ஒரு நாடகம் வேண்டும்."

எனக்கு முதலில் கோபந் தான் வந்தது. "இதென்ன சனியன்" என்று மனதில் நினைக்கவும் செய்தேன்.

"நாங்கள் நன்ருக நடிப்போம். நாடக ஆசிரியருக்கு ஒத்திகை பார்க்கவும் வசதி அளிக்கிருேம்.

உண்மையைச் சொல்லப் போனல் நான் புதிதாக எதுவும் எழுதியிருக்கவில்லை. கோபத்தோடு நான் சொன்னேன்.

"இந்தப் பெண்களுக்கு கொஞ்சமாவது புத்தியும் இருந்திருக்குமனல்—"

அவள் எதிர்த்துப் பேசுவாள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனல் அமைதியாக அசையாமல் அவள் நின்று விட்டாள்.

"சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறவனிடம் நாடகம் எழுதித் தரும்படி கேட்பதற்கு உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லை?"

நான் பிறகு காத்துக் கொண்டு நிற்கவில்லை. வேகமாக நடந்து விட்டேன்.

அதிக தூரம் சென்ற பிறகு தான், அவள் என்னையே பார்த்துக்கொண்டு அங்கேயே நின்று கொண்டிருப்பதை நான் அறிந்தேன்.

பாவமாக இருந்தாலும் திரும்பிச்செல்ல மனம் வரவில்லை.

இரவு முழுவதும் நான் நாடகத்தைப்பற்றி யோசித்தேன். ஏதாவது ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கவும் செய்தேன். நான் கோபித்துக் கொண்டேன் என்ருலும் அவளுடைய கோரிக்கையை நிராகரித்து விடமாட்டேன் என்று ஷோபா நம்பியிருப்பாள்.

சில நாட்களை நான் அவளைப் பார்க்காமலே கழித்து விட்டேன்.

ஒருநாள் முற்றிலும் எதிர்

பாராத ஒரு சந்தர்ப்பத்தில் ஷோபா எனக்கு எழுதியிருந் தாள்:

"நட்பு துன்பமயமானது. நட்புக் கொள்பவர்கள் பெரும் பாலும் இதை உணர்வதில்லை ..."

தொடர்ந்து அவள் எழுதிய கடிதத்தின் வாசகங்கள் என் சிந்தனையை மற்றொரு உலகத் திற்கு கொண்டு சென்றன.

அந்தக் கதைகளையெல்லாம் கூறவேண்டுமானால் பல வருடங்கள் வேண்டியிருக்கும்.

அது மற்றொரு கதை. அதை நான் சொல்ல மாட்டேன். காரணம்; என் அன்புக்குரிய வளே, உன்னுடைய நட்பு எனக்கு வேண்டும்!

ஒருவேளை நீ அதைக் கேட் டால் பயந்து விடுவாய் என்று எனக்குத் தெரியும். உன்னை நான் மற்ற எதையும்விட விரும்புவதனால் உன்னை பயப் படுத்த என்னால் முடியாது.

அன்பே, நீ தெரிந்திருக்க காத ஒருகதை இருக்கிறது. நீ என்னைக் கண்டு பழகுவதற்கு முன்பே உன்னை எனக்குத் தெரியும். நீ என்னில் ஒரு கன வாக அப்போது வாழ்ந்திருந் தாய். அன்று நினைந்துநினைந்து நான் காட்டிய கனவுகள் உன் னைக் குறித்த நினைவுகளின் பகுதியில் நிலைத்திருக்கும் போது—

என் அன்புக்குரியவளே,

என்னுடைய கற்பனை உல கனைத்தையும் கைபிடிக்குள் வைத்திருப்பவளே!

உன்னைக் குறித்து எழுதா மலிருக்க என்னால் முடியாது.

காரணம்; எங்கும் உனது சலனங்களையே நான் பார்க் கிறேன்.

—உன்னுடைய கால்சிலம்பு களின் கலீர் கலீர்......ஓசை...

நடிப்புத் திறமையுள்ள உன் னுடைய கண்களிலிருக்கும் நீலக் கடல் அலைகள்......

கூந்தல் சுமைகளிலிருந்து சிரிக்கும் சிவந்த ரோஜாப் பூக்கள்.

மனதை அவிழ்த்து உதறி னால் உதிர்ந்து விழுபவை உன் னைக் குறித்த நினைவுகளின் அரும்பு மலர்களாகவே இருக் கும்.

அன்பே!

நீ வஸந்தம்!

நல்மணம் கமழ்ந்து, புன் சிரிப்புக் கொழித்துக் கொண் டுள்ள, என்றும் இளமையான வஸந்தம்!

வஸந்தமே!

உன்னுடைய நீர்க் கால்கள் என் ஆத்மாவின் வரண்ட பிர தேசங்களில் குளிர்ச்சியை ஏற் படுத்துகின்றன.

துயரத்தால் வெந்துபோன இதய அறைகளில், குளுமை யைப் பரப்புகின்றன.

வஸந்தமே! நீ என்றும் இளமையாய் இருப்பாயாக!

உன் நாமம் வாழ்த்தப் பெறட்டும்!

புத்தக வெளியீட்டாளர்களுக்கு
மட்டும்

(புத்தக விற்பனையாளர்களுக்கு அல்ல)

விற்பனையாளர்களையும் நூலகங்களையும் மட்டும் நம்பியிராமல், நேரடியாக வாசகர்களிடம் புத்தகங்களை விற்க, கவனத்திற்குக் கொண்டுவர, பதிப்பாளர்களுக்கு இன்று வழி ஏதுமில்லை என்று அங்கலாய்க்கப்படுகிறது.

இதற்கான ஒரு வழியை ஞானரதம் திறந்திருக்கிறது. ஞானரதத்தின் பல்லாயிரக்கணக்கான இலக்கிய வாசகர்களின் கவனத்திற்கு உங்கள் சொந்தப் புத்தகங்களைப் பற்றிய தகவல் எட்டச் செய்ய ஒரு சலுகைத் திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

"புத்தக விமர்சனம்" என்ற பெயரில் எல்லோரும் சேர்ந்து எல்லோரையும் ஏமாற்றிக்கொள்ளும் வேலைக்குத் துணை போக ஞானரதம் விரும்பவில்லை. ஏமாறவும் இன்று யாரும் இல்லை.

அதனால் :

பதிப்பாளர்களே தரும் சொந்தப் புத்தக விளம்பரங்கள் மட்டும் அரைக் கட்டணத்தில் வெளியிடப்படும். விற்பனையாளர்களுக்கு இந்தச் சலுகைத் திட்டம் பொருந்தாது. விளம்பர விகிதம் வேறு பக்கத்தில் பிரசுரமாகியிருக்கிறது.

ஒரே ஒரு புத்தகத்திற்கு மட்டுமான விளம்பரம் என்றால் குறைந்தபட்ச கட்டணம் ரூ. 10/- மட்டுமே. விளம்பரங்களை பணத்துடன் சேர்ந்து அனுப்ப வேண்டும்.

—நிர்வாகி ஆசிரியர்




"வளை என்ற சிறுகதையைப் பற்றிக் ஒரு வார்த்தை, அது Franz Kafka வின் Burrowஎன்ற சிறுகதையின், வெறும், நிழல், சார்வாகன் காஃப்காவின். கதையைப்படிக்காமல். எழுதியிருந்தால். வளையைப். படைப்பு என்று கொள்ளலாம், இல்லாவிட்டால். வளையைப் படைப்பு என்று சிறுமைப் படுத்துவதைவிட எதிரொலி என்று அழைப்பதே பொருத்தமாகும். பிப்ரவரி இதழில் மொழி பெயர்ப்புக் கதை 'கதையில்லாத கதை' நன்ருக இருந்தது. ஆனுல், மூல ஆசிரியரின். பெயரை இருட்டடிப்பு செய்து விட்ட காரணம் என்னவோ?"

S. கிருஷ்ணமூர்த்தி,
கல்கத்தா-26.

★ ★

"ஜெயகாந்தன் அவர்களின் நூல்களைப் படிக்கும்போது, அவர் அந்த நூல்களுக்கு எழுதியுள்ள முன்னுரைகளைத்தான் நான் பல முறை படித்து மகிழ்கின்றேன். நூலின் உள்ளே உள்ளதை ஒரே ஒருமுறைதான் படிப்பதுண்டு. இந்த ஞானரதத்திலும் நான் பல முறை படித்து மகிழ்வது "முன்னேட்டம்" தான்."

இரா. மருதசாமி, மாயூரம்.

★ ★

"முதல் இதழைக் காட்டிலும் இரண்டாவது இதழின் தரம் கொழுத்திருக்கிறது. முதல் இதழில் முன்னேட்டம், உரத்த சிந்தனை, ஜி. நாகராஜன் அவர்களின் 'இளிந்த சாதி' ஆகியன மிகவும் சிறப்பாக இருந்தன. இரண்டாவது இதழில் 'முன்னேட்டம்', உரத்த சிந்தனை, ஆசிரியரின் கதை, மொழி பெயர்ப்புக் கதை, இண்டலக்ட்ஸ் பகுதி ஆகியவற்றை ரசித்தேன். ஜெயகாந்தன் கவிதைகளில் குப்புறக்கிடக்கும் செருப்பைப்பற்றிய வற்றில் ஒரு புதுமையோடு கூடிய சோகம் இழையோடியிருந்தது."

இரா. சீனிவாசன்,
உத்தமபாளையம்.

"தங்கள் ஞானரதம் முதல் இதழைப்பார்த்ததும் அது உயர்ந்த இலக்கிய சேவை புரியும் என்று நம்பிக்கையோடு இருந்தேன். ஆனுல் இரண்டாவது இதழில் வெளியாகியிருந்த செத்த பாம்பு கதையைப்படித்த பிறகு பத்திரிக்கையின் பெயரை 'காமரதம்'என்று மாற்ற வேண்டுமென்றே கூறத் தோன்றுகிறது."

அ. அமலதாஸ், மேட்டூர் அணை.

★ ★

"இரண்டாம் இதழ் ஞானரதம் படித்த பின்பு நான் எழுதும் கடிதம் முதலாம் இதழைவிட நல்லா இருந்தமை கண்டு இன்பம் கொண்டேன். 'இந்த இதழில் நான் ரசித்தவை.' (1) தங்களுடைய முன்னேட்டம் (2) தங்களுடைய சிறு

கதை (முடிவு பெருத) (3) முருகேசன் எழுதிய செத்த பாம்பு, (4) தங்களுடைய கவிதை தனிவீடு.''

வெ. மு. இலக்குமணன்,
பெங்களூர்-1,

★ ★

''ஞானரதத்தில் வருகின்ற நிகழ்ச்சிகள், எண்ணங்கள் முழுவதும் Sexual ஐ அடிப்படையாகக் கொள்ளாமல், இந்திய நாட்டில் மட்டுமல்லாமல், உலக மனிதவர்க்கத்திலே, அடித்தளத்தில் வீழ்ந்து கிடக்கும் சாதாரண மனித ஜீவன்களைப் பற்றியும் அவர்களின் ஆசைகளை, ஏமாற்றங்களை, உள்ளக் குமுறல்களை Roalism போக்கில் வெளிப்படுத்த வேண்டும்.''

இரா. கதிரேசன்,
பட்டுக்கோட்டை.

★ ★

''தங்கள் ஞானரதத்தின் இரண்டாவது இதழைத்தான் பார்க்க முடிந்தது. புரட்சி வேட்கையும், இலக்கியப்பசியும் கொண்ட என்போன்றவர்களுக்கு ஒரு நல்ல அறுசுவை உண்டியாக தங்கள் ஞானரதம் அமைந்துள்ளது. மிகவும் நன்றி.''

பி. எஸ். துரைசாமி,
கோயம்புத்தூர்-1.

★ ★

''இலக்கியம் என்பதற்கு இன்னும் இலக்கணம் வகுக்க முடியவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதனால் எதனையும் வெளியிடலாம் போலிருக்கிறது ... இதற்குமேல் நான் விளக்க வேண்டியதில்லை. ஏனெனில் அதில் இருப்பவர்கள் எல்லாம் இலக்கிய கர்த்தாக்கள்.''

ராஜகோபால், சென்னை-63.

* * *

''தங்களின் முன்னேட்டம் மூலம் உண்மையின் ஒளியை—உள நிலையை—தற்கால சான்றிதழ்க் கல்விமுறையைக் (Certificate Education) தெளிவாக எடுத்துச் காட்டி உலகறியச்செய்த தங்களின் உறுதி போற்றுதற்குரியது.''

க. குமார்தேஷ்ராஜ் (B. Sc)
சென்னை-43.

★ ★

''செத்தபாம்பானலும் அது நம்மைத் தீண்டிவிட்ட உணர்வு ஏற்படுகிறது. படத்தைப்பார்த்துத்தான் பாத்திரங்களையும் வீழ்நிலைகளையும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில் நாங்கள் இல்லாததால் படங்களை வெளியிட்டு பக்கங்களை நிரப்ப வேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமானல் படைப்பாளிகளை அறிமுகப்படுத்துங்கள்.''

ரெ. ம. பாண்டுரங்கம்,
சென்னை-1.

* * *

''ஞானரதம் கண்டேன். கவித்துவ கம்பீரமிக்க உங்களுக்கே உரிய வகையில் பத்திரிகை மலர்ந்திருக்கிறது. வாசக அபிப்பிராயங்களைக் கவுரவிக்கும் சிரத்தை உங்கள் முன்னேட்டத்தில் பொலிகின்றது. அனுபவம், சுண்ணேட்டம் ஆழ்ந்த ஈடுபாடு, ஞானவேட்கை கொண்டுள்ள உங்களுக்குக்கவிதை புனைவதும் கைவந்த கலை என்பதற்கு அந்த எண் கவிதைகளே சாட்சி. தமிழ்க் கவிதை இலக்சியத்துக்கு வேண்டிய புதுமை ஓவியங்களை ஞானரதக் கவிதைகளில் நிறையக் காண்கிறேன். இலக்கிய உணர்வுள்ள உபந்நியாசங்கள் நிகழ வேண்டுமென்று ரமணியன் விரும்புவதை வரவேற்கிறேன். எழுத்தாளரையும் வாசகர்களையும் பரிச்சயம் செய்து வைக்கும்யுக சந்தி ஒரு ரசமசன அனுபவம்தான். இந்த அனுபவம் தமிழுக்குப் புதியது.''

சி. ஆர். ராமானுஜம், பூனு-11,